janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்


# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2023 ஜனவரி 01 - ஜனவரி 07 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 39




கட்சியின் முன் உள்ள சவால்கள் மற்றும் பணிகள் ப 16



தொடரும் பணிகள் ப 02



உலகக் கோப்பை கால்பந்து போட்டியும் சில படிப்பினைகளும் ப 03



# ஆளுநர் ஆர்.என்.ரவியை திரும்பப் பெறுக! இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் 50 ஆயிரம் பேர் முற்றுகைப் போர்!

**தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடு மதச்சார்பின்மைக்கு எதிராக, அரசியலமைப்பு அதிகார அத்துமீறல் நடவடிக்கையாக அமைந்திருக்கிறது. ஆளுநரின் அத்துமீறல் நடவடிக்கைகள் என்பது, அந்தப் பொறுப்புக்கு அவர் தகுதியற்றவர் என உறுதிப்படுத்தி வருகின்றன.**




இந்தச் சூழலில் “ஆளுநர் பொறுப்பில் இருந்து ஆர்.என்.ரவியை திரும்பப் பெற வேண்டும்” என ஒன்றிய அரசை வலியுறுத்தி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி டிச.29 அன்று ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டத்தை நடத்தியது.

சென்னை பெருநகர், சைதாப்பேட்டை பேருந்து நிலையம் அருகில் உள்ள குயவர் தெருவில் முற்றுகைப் போராட்ட பேரணி தொடங்கியது. இப் பேரணியை கட்சியின் மூத்த தலைவர், தகைசால் தமிழர் விருதாளர் இரா.நல்லகண்ணு துவக்கி வைத்தார்.

கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தலைமை ஏற்றனர்.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.சுப்பராயன் எம்.பி. (திருப்பூர்) எம்.செல்வராஜ் எம்.பி. (நாகபட்டினம்) மாநிலத் துணைச் செயலாளர்கள் நா.பெரியசாமி, மு.வீரபாண்டியன், பொருளாளர் எம்.ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. (தளி), க.மாரிமுத்து எம்.எல்.ஏ. (திருந்துறைப்பூண்டி), மற்றும் செயற்குழு, நிர்வாகக்குழு, மாநிலக்குழு, மாவட்டச் செயலாளர்கள் மற்றும் வர்க்க வெகுஜன அமைப்பின் பொறுப்பாளர்கள் உள்பட மாநிலம் முழுவதும் இருந்து வருகை தந்த 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்சி தோழர்களும், பொதுமக்களும் முற்றுகை போராட்டத்தில் பங்கேற்றனர்.

## டி.ராஜா முழக்கம்

இந்தப்போராட்டத்தை கண்டு ஆளுநர் அவராகவே போய்விட வேண்டும். சனாதனத்தை பற்றி பேசிக் கொண்டு தெருத்தெருவாக அலைய வேண்டும். அரசியல் கட்சி என்கிற முறையில் நாம் பொறுப்போடுதான் பேசுகிறோம். இந்த ஆளுநர் அரசியல்சட்டத்தின் நெறிகளையும், கூட்டாட்சி நெறிகளையெல்லாம் புறந்தள்ளி உதாசினப்படுத்தி செயல்படுகிறார். அப்படிப்பட்டவர் ஒரு மாநிலத்தின் ஆளுநராக இருக்கக் கூடாது. ஆளுநர் பதவியிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்று நாம் கெஞ்சிக் கொண்டிருக்கிறோம் என்று கருத வேண்டாம். அவர் அகற்றப்படவில்லை என்றால் அகற்றப்படுவதற்கான போராட்டங்கள் வருங்காலத்தில் தீவிரமடையும் என்று நிச்சயமாக கூறுகிறேன். ஆளுநர் என்பவர்

தொடர்ச்சி 4ம் பக்கம்



கட்சிக் கடிதம்

# தொடரும் பணிகள்




பேரன்புமிக்க தோழர்களே!

**புகழார்ந்த வரலாறு கொண்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 98 வது அமைப்பு தினத்தை கொண்டாடிக் கொண்டிருக்கும் தருணத்தில், ஆங்கில வருடத்தின் 2022 ஆம் ஆண்டை வழியனுப்பி விட்டு, அடுத்து வரும் 2023 ஆம் ஆண்டை வரவேற்க தயாராகி நிற்கிறோம்.**

தனி மனித வாழ்வும் சரி, கட்சி வாழ்க்கையும் சரி, ஒரு நாட்டின் வரலாறும் சரி எதுவும் சமவெளியில் அமைந்த அகலப் பாதைப் பயணமாக அமைவதில்லை. ஏற்றத் தாழ்வுகள், மேடு பள்ளங்கள், திடீர் திருப்பங்கள், திருகல் முறுகல்கள் என பல நிலைகளை கடந்து நீடித்து செல்கிறது.

மனித குல வரலாற்றில் தனிமனித வாழ்வு ஒரு நாள் சேர்ந்து, ஒரு கால இடைவெளிக்குப் பிறகு மற்றொரு நாளில் முடிவடைந்து விடுகிறது. ஆனால், நமது உயிரினும் மேலான கட்சி வாழ்க்கை வழிவழியாக தொடர்கின்றது.

நாம் இணைந்து பணியாற்றும் கட்சியின் 97 ஆண்டு கால அனுபவ சேமிப்பில் உள்ள அறிவாற்றல் நமக்கு செயலூக்கம் தரும் சக்தியாக அமைகிறது.

நமது இயக்கம் முன்னேறி வருகிறது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், அந்த முன்னேற்றம் என்பது, பந்தயக் குதிரையின் பாய்ச்சல் வேகத்தில் இல்லை என்பதை ஒப்புக்கொள்ள தயக்கம் ஏதும் இல்லை.

முன்னேற்றம் என்பது அங்குலம், அங்குலமாக, அடி எடுத்து வைத்து முன்னேறுவதாக அமைகிறது.

நமது கட்சியின் முன்னேற்றம் அல்லது பின்னடைவு என்பது எந்தத் தனிமனிதனின் அல்லது சில நபர்களின் சொந்த ஆதாயம் சார்ந்தது அல்ல. அது நாட்டின் நலன் சார்ந்தது, சமூக நலன் சார்ந்தது என்பதில் சரியான புரிதல் வேண்டும்.

நமது கட்சியின் ஊழியர்கள் ஒவ்வொருவரும், கீழிருந்து மேல்வரை பணியாற்றும் எல்லோருக்கும் சொந்த வாழ்க்கை உள்ளது.அவர்களது வாழ்விலும் துன்ப துயரங்களுக்கு பஞ்சம் ஏதுமில்லை. ஆனால், அதற்கு தீர்வு தேடுவதில், தனக்கு மட்டும் தீர்வு தேடிக் கொள்ள முடியாது என்பதையும், சமூகம் முழுவதும் அமைதியும், மகிழ்சிச்சியும் கொண்ட வாழ்வை காணும் போது தான். தனது வாழ்விலும் வசந்தம் வீசும் என்பதை பகுத்தறிந்து உணர்ந்து கொண்டு பணி புரிந்து வருகிறார்கள்.

கம்யூனிஸ்டுகள் நாட்டிற்காக, சமூக விடுதலைக்காக தனது வாழ்வை அர்ப்பணித்துக் கொண்ட ஆற்றல் மிகுந்த செயல் வீரர்கள் என்பதனை எவரும் மறுக்க இயலாது.

பல கட்சிகள் செயல்படும் அரசியல் களத்தில் சில கட்சிகளைச் சார்ந்தவர், அதிலும் பொறுப்புகளில் உள்ளவர்கள் பொருளாதார தளத்தில் வலிமை கொண்டவர்களாக, பணத்துக்கு பஞ்சம் இல்லாதவர்களாக வளர்ந்துள்ளார்கள். நாமும் அப்படி வளர்ந்திட வேண்டும், அதற்கான குறுக்கு வழிகள் எது? என்பதனை தேடித் தேடி கண்டறிந்து அவ்வழியை பின்பற்ற வேண்டும் என்று கம்யூனிஸ்டு என்பவர் மறந்தும் சிந்திக்க மாட்டான்.

அன்னை நாட்டில் வாழும் 130 கோடிக்கும் மேலான மக்கள் வாழ்க்கையில் சமத்துவம் சார்ந்த, சமூகநீதி நிலவ வேண்டும் என நொடிப்பொழுதும் இடைவிடாது சிந்திக்கிறார். செயல்படுகிறார்.

சமூக நலன் பேணும் சிந்தனையிலும், சமத்துவம் காணும் வேட்கையிலும், "தன் குடும்பம்" என்ற தன்னலத்தை மறந்து பொது நலன் பேணும் மகத்தான களப்பணி வீரனாக கம்யூனிஸ்டுகள் வலம் வருகின்றனர்.

அரசியல் கட்சிகள் தேர்தல் களத்தில் சந்திக்கும் வெற்றி, தோல்விகள் நிரந்தரமானதல்ல; அது தற்காலிகமானது.

அரசியல் கட்சிகளில் கம்யூனிஸ்ட் கட்சி என்பது புது வகைப்பட்ட, முற்றிலும், வேறுபட்ட கட்சி என்று பெருமைபடக் கூறுகிறோம். ஆனால், தேர்தலில் களத்தில் யாரோ ஒருவருடன் அல்லது ஏதோ ஒரு கட்சி அல்லது கூட்டணியில் சேர்ந்து செயல்படுகிறோம்.

இப்படியான தேர்தல்களில் முதலாளித்துவ கட்சிகள் வெற்றி பெற்று அதிகார பீடத்திற்கு வந்துவிடுகின்றன.

அதிகாரத்தில் அமரும் கூட்டணி கட்சி, ஆட்சியில் செய்த சாதனைகள் என்ன? எத்தனை வறுமை ஒழிப்புத் திட்டங்கள், வறுமை ஒழிந்ததா?

அடித்தட்டு மக்கள் வாழ்வு மேம்பட நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதா? இது போன்ற வினாக்களுக்கு விடை கிடைக்கவில்லை.

அரசு தரும் தரவுகளே, ஒரு வேளை சாப்பிட்டு, இரு வேளை பட்டினி கிடப்போர், இராப் பட்டினி கிடக்கும் துயரத்தில் வாழ்வோர் எண்ணிக்கை 20 கோடிக்கும் அதிகம் என்கிறது. இதற்கு யார் பொறுப்பு? அதிகார பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள். அவர்கள் ஆட்சி நடத்த பின்பற்றும் கொள்கைகளே காரணமாகும். இதனை மறுக்க இயலுமா?

அறிவே ஆற்றல் என்ற முறையில் கல்வி பெறுகிறார்கள். கல்வி நிலையில் பட்டங்கள் பல பெற்றாலும் வேலை யின்மை என்கிற பெருங்கொடுமை நிலவுகிறதே, இதற்கு யார் பொறுப்பு?

நாடு விடுதலை பெற்ற நேரத்தில், அடுத்து வரும் பத்தாண்டு காலத்திற்குள் நாட்டில் உள்ள அனைவருக்கும் கல்வி வழங்க வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அவை நிறைவேறியதா? இன்றும் 25 முதல் 30 விழுக்காடு மக்கள் கல்லாதவர்கள் என பட்டியல் தருகிறார்களே, ஏன்?

கல்வி கற்க விரும்பும் ஒவ்வொரு மாணவரும் தான் விரும்பிய கல்வியை, ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை பெற முடியவில்லையே ஏன்? எதனால்!

தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வி வளர்ந்தோங்கி வருகிறது என்பது பேருண்மை. வளர்ந்து வரும் மருத்துவம் எளிய மக்களுக்கு கிடைக்கிறதா? இல்லையே.

இப்படி ஒவ்வொரு துறை குறித்தும் விரிவாக விளக்கிக் கொண்டே செல்லலாம்!

மக்கள் அன்றாடம் சந்தித்து வரும் வாழ்க்கை பிரச்சினைகள் தீர்வு காணாமல் தொடர்கின்றது.

முதலாளித்துவம் தான் ஆகச்சிறந்தது, அதற்கு மாற்று இல்லைஎன்று கூறமுடியுமா? விவாதிக்க முன்வருவார்களா? முதலாளித்துவத்திற்கு வக்காலத்து வாங்கிட முடியாது.

முதலாளித்துவ முறை நெருக்கடிமேல் நெருக்கடி என தொடர் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றது.

வண்ண, வண்ணத் தீப்பொறியாக, விண்ணோக்கி பாய்ந்து, சில வினாடிகளில் கரித்துண்டுகளாக தரையில் விழுந்து விடும் தரை மத்தாப்பு போல், முதலாளித்துவ முறை காட்சி தந்து வீழ்ந்து வருவதை மக்கள் அன்றாட வாழ்வில் உணர்ந்து தெளிவடைந்து வருகிறார்கள்.

முதலாளித்துவ ஆளும் சக்திகள், அதன் வர்க்கத் தோல்விகளை மூடி மறைக்க சாகசங்களை கையாண்டு வருகிறது.

அண்மைக் கடந்த காலம் முதல் மதம், கடவுளின் மீது மக்கள் வைத்துள்ள மூட நம்பிக்கைகளை முதலீடாகப் பயன்படுத்துகிறது. சமூக வாழ்வில் உழைக்கும் மக்களின் உரிமையை பறிக்கும் சாதிய பிளவுகள் பயன்படுத்தப்படுகின்றன. மூட பழக்க வழக்கங்களை முதலாளித்துவம் தன்னை காத்துக் கொள்ளும் கேடயமாக பயன்படுத்தி வருகிறது.

வகுப்புவாத, மத மோதல்களை உருவாக்கி மக்களை ஒன்று சேர விடாமல் பிளவுபடுத்தும் சதியின் மூலம் தங்களின் ஆட்சியை தக்க வைத்து, தொடர்ந்திடவும் பல்வேறு சூழ்ச்சிகளை செய்து வருகின்றது.

முதலாளித்துவத்தின் நவீன சாகசங்களை மக்களிடத்தில் தோலுரித்துக் காட்டி, அவர்களிடம் சமூக விழிப்புணர்ச்சி காண நாம் இடையறாது பணியாற்றிட வேண்டிய பெரும் பொறுப்பும், கடமையும் நம் முன் உள்ளது.

ஐந்தாண்டு கால ஆட்சியில் சாதித்து முடிப்பேன் என்றவர்கள், எட்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் எதனையும் சாதிக்க முடியவில்லை. நாட்டை வளர்ச்சி பாதையில் கொண்டு சென்றிட மேலும் எங்களுக்கு கால அவகாசம் தேவை எனக் கூறி மக்களிடம் மனு போடத் தொடங்கிவிட்டனர் ஒன்றிய ஆட்சியாளர்கள்.

கால அவகாசம் கோரும் அவர்கள், தாங்கள் அதிகாரத்தில் இருந்த காலத்தில் யாருடைய வளர்ச்சிக்காக பாடுபட்டார்கள்?

அதானி, அம்பானி போன்ற விரல் விட்டு எண்ணக்கூடிய தனிநபர்கள் உலகப் பணக்காரர்கள் பட்டியலில் முதல் பத்து இடங்களில் இடம் பிடிக்க உதவியுள்ளனர்.

ஆசியாவிலேயே முதல் பெரும் பணக்காரர்களாக வளர்வதற்கு நாட்டின் ஒட்டு மொத்த செல்வத்தையும் கொள்ளையடிக்க சட்டபூர்வ அனுமதி தந்தனர்.

ஒரு சில நபர்கள் ஆதாயம் தேட, நாட்டின் 130 கோடி மக்களின் நலனை வஞ்சித்தனர்.

இவைதான் இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்களின் கொள்கையாகும்.

இத்தகைய தீங்கான கொள்கைகளை கடைப்பிடித்து வரும் ஆட்சி அகற்றப்பட வேண்டாமா? ஆம், மோடியின் துயரம் மிகுந்த ஆட்சியை அதிகாரத்தில் இருந்து கட்டாயம் அகற்ற வேண்டும்.


அடுத்து வரும் 2024 ஆம் ஆண்டு வெகு தூரத்தில் இல்லை.

சரியாகச் சொன்னால், 12 மாதங்கள் மட்டும்தான் உள்ளன. இவை மிக குறுகிய காலம் என்பதனை கருத்தில் கொள்ள வேண்டும்.

தொடர்ச்சி 3ம் பக்கம்




மு.வீரபாண்டியன்



# உலகக் கோப்பை கால்பந்து போட்டியும் சில படிப்பினைகளும்



**கத்தாரில் உலகக் கால்பந்து போட்டி (பிஃபா) நடைபெற்றதும், நடப்பு சாம்பியன் பிரான்சை வீழ்த்தி லத்தீன் அமெரிக்க நாடான அர்ஜென்டினா வெற்றி பெற்றதும் உலகறியும். இத்தகைய உலகப் போட்டியை சிறிய நாடான கத்தாரில் நடத்தக்கூடாது என்றது ஐரோப்பா. பாதுகாப்பு வசதி போதாது, கட்டுப்பாடுகள் அதிகம் என்றெல்லாம் கூறப்படும் குற்றச்சாட்டுகளை பொய்யாக்கி விட்டது கத்தார்.**



ஜனநாயகம், பாதுகாப்பு, நவீன வசதிகளுக்கு ஐரோப்பா தான் என்ற கருத்தை உடைத்தது கத்தார்.

ஒரு மாத கால ஏற்பாட்டில் வன்முறை இல்லை, சிறு சண்டைகள் கூட இல்லை. பாதுகாப்பு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், தங்குமிடம், அவரவர் உணவு, சுதந்திரமாக சுற்றித் திரிவது என எதிலும் குறையில்லை. ஐரோப்பிய பொது புத்தியின் மீது ஓர் தாக்குதலை தொடுத்துள்ளது கத்தார்.

கால்பந்து என்றால் ஐரோப்பா – அடுத்து தென் அமெரிக்கா. அதிலும் வெல்ல முடியாத அணிகள் பிரான்ஸ், ஜெர்மன், இத்தாலி, போர்ச்சுக்கல். தென் அமெரிக்காவில் பிரேசில், அர்ஜென்டினா அனைத்தும் சுக்கு நூறாகி விட்டது.

உலகின் மிகச் சிறிய அணிகளான சவுதி, ஜப்பான், கொரியா ஆகியவை வெல்ல முடியாத அணிகளை வீழ்த்தி, இது ஆசியாவின் துவக்கம், இனி ஆசியாவின் நூற்றாண்டு என விளையாட்டிலும் தெளிவுபடுத்தி உள்ளது.

அதிர்ச்சியான சம்பவம்! வீரர்கள் அழுதது தான். உலகின் சிறந்த வீரர் நெய்மர் அழுகிறார், ரொனால்டோ அழுகிறார், பாப்பே துவண்டு தனது நாட்டு அதிபர் விளையாட்டுத் திடலுக்கே வந்து ஆறுதல் சொன்ன போதும் ஏற்க மறுக்கிறார்.

விளையாட்டில் வெற்றி தோல்வி மிக இயல்பு. வெற்றியை விட அணி விளையாட வேண்டும் என்கிறார் பீலே.

அப்படி அற்புதமாக விளையாடியது மொராக்கோ, ஜப்பான், கொரியா, சவுதி, குரேஷியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கத்தார் அணிகள்.

கால்பந்து விளையாட்டில் சிறந்த வீரர்களை உருவாக்க வேண்டும். மாறாக அது பிரபலமான சிறந்த வீரர்களை பணக்காரர்களாக மாற்றக்கூடாது என்கிறார் மரடோனா.

இன்றைய உலக பிரபலங்களான ரொனால்டோ, மெஸ்சி, பாப்பே, நெய்மர் அனைவருமே அதிர்ச்சி தரும் வகையில் கோடிக்கணக்கான செல்வங்களை சேர்த்துள்ளனர்.

மான்செஸ்டர், லிவர்பூல் இது போன்ற கிளப் நிறுவனங்கள் கால்பந்தை கார்ப்பரேட் மயமாக்கி வருவது, விளையாட்டிற்கு நல்லதல்ல என்ற கருத்தும் எழுந்துள்ளது.

மிக முக்கியம் கத்தாரில் கட்டப்பட்ட விளையாட்டு திடல்கள்:

நவீன தொழில் நுட்பங்களோடு, உலகத்தரம் வாய்ந்த திடல்கள். இதற்கு தொழிலாளர் கொடுத்த விலை அதிகம். பல நூறு தொழிலாளர்கள் தங்கள் உயிரை கொடுத்துள்ளனர். கத்தார் அரசு இதனை வெளிப்படுத்த வேண்டும்.

ஆர்த்திடும் எந்திர சட்டங்களே
உங்கள் ஆதி அந்தம் சொல்லவோ
எங்கள் ஊர் தொழிலாளர்
உழைத்த உழைப்பினில் உதித்தது
மெய் அல்லவோ!

---

2 ம் பக்கத் தொடர்ச்சி

இக் குறுகிய காலத்தில் நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் அணி வகுத்து நிற்கின்றன என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இக்கால இடைவெளியில் நிறைவேற்றிட வேண்டிய அரசியல் மற்றும் அமைப்பு நிலை பணிகளை பட்டியலிட்டு, அவைகளின் எண்ணிக்கையை கண்டு மலைத்து விடாமல், அவைகளை திட்டமிட்டு நிறைவேற்ற வேண்டும்.

உடனடியாக மேற்கொள்ள வேண்டிய முன்னுரிமை பணி 2023 ஆம் ஆண்டிற்கான கட்சி உறுப்பினர்கள் புதுப்பித்தல், சேர்த்தல் என்பதாகும். இக் கடமையை குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றி முடித்திடல் வேண்டும்.

கட்சி உறுப்பினர்கள் புதுப்பித்தல், சேர்த்தல் பணி, கட்சி அமைப்புகளையும், உறுப்பினர்களையும் செயலூக்கப்படுத்த வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு மேற்கொள்ள வேண்டும்.

ஏனெனில் சில கட்சிகள் தங்களது கட்சிக்கு மிஸ்டு கால் மூலம் உறுப்பினர்களை சேர்ப்பதை அறிவீர்கள். அவ்வாறு எல்லாம் சேர்க்கப்படுவது "மெம்பர் அல்ல;வெறும் நம்பர்" என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக சேர்க்கப்படுவர்கள் வர்க்க, வெகுமக்கள் நலனில் அக்கறை காட்டும் ஆர்வமும், பொது வாழ்வில் முனைப்புக் கொண்டவராகவும் இருக்க வேண்டும். அதிலும் அவர், தன்னார்வத்துடன் முன்வந்து, கட்சி அமைப்பில் சேர்ந்து செயல்பட விண்ணப்பிக்க வேண்டும். மேலும், கட்சியின் திட்டத்தையும், அரசியல் நிலைபாடுகளையும் ஏற்றுக் கொண்டு, கட்சி அமைப்பு விதிகளை பின்பற்றி செயல்பட உறுதியளிக்க வேண்டும்.

கட்சிஉறுப்பினர் புதுப்பித்தல், சேர்த்தல் ஆகிய இரண்டுமே கிளைக் கூட்டத்தில் பரிசீலனை செய்து எடுக்கப்படும் முடிவின்படி நடக்க வேண்டும். இந்த முறையினை பின்பற்றுவதில் சமரசத்திற்கு இடமளிக்கக் கூடாது.,

இரண்டாவதாக கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் அவரது வருமானத்தின் அடிப்படையில் கட்சிக்கு லெவி தருவதற்கு உறுதியளித்து, அதனை முறையாக செலுத்த வேண்டும்.

வருமானம் ஏதும் இல்லாமல், வயது முதிர்ந்த நிலையிலும், உடல்நலிவு ஏற்பட்டிருப்பினும் இருந்தால் அவர்களுக்கும், குடும்பப் பணிகளை மட்டுமே பார்த்து வரும் பெண்களுக்கும், மாணவர்களுக்கும் அவர்கள் கேட்டுக் கொண்டால், லெவி தருவதில் இருந்து விதிவிலக்கு அளிக்கலாம். இதனை கிளை விவாதித்து, நடவடிக்கை பதிவேட்டில் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

மூன்றாவதாக "ஜனசக்தி" வார இதழை மக்களிடம் பெருமளவு கொண்டு செல்ல வேண்டும், கிளைக்கு குறைந்த பட்சம் ஐந்து இதழ்களுக்கு ஆண்டு சந்தா செலுத்த வேண்டும். மேலும் நமது கிளை அமைப்புகளில் கட்சித் தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஜனசக்தி கிடைத்திட முகவர்கள் நியமனம் செய்து அவர்கள் மூலம் வாசகர்களுக்கு "ஜனசக்தி" இதழ் காலத்தில் கிடைத்திட ஏற்பாடு செய்ய வேண்டும்.

முகவர்கள் மூலம் ஜனசக்தி இதழ் விற்பனையை பெருக்கிட அனைத்து கிளை அமைப்புகளும், இடைநிலை, மாவட்ட அமைப்புகளும் உரிய முன் முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். இதற்கான பணிகளில் மாவட்ட அளவில் ஒரு குறிப்பிட்ட தோழர் பொறுப்பேற்க செய்ய வேண்டும்.

நான்காவதாக, நமது கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வர்க்க, வெகுஜன அமைப்புகளில் பணியாற்றுவதை உறுதி செய்ய வேண்டும். இதற்கான முறையில் கிளைக் கூட்டத்தில், உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் வேலை ஒதுக்கீடு செய்ய வேண்டும்.


மேற்கண்ட பணிகள் உடனடியாக நிறைவேற்ற வேண்டிய பணிகளாகும். இவைகளோடு நமது பணிகள் முடிந்து விட்டது என பொருள் அல்ல. அடுத்தடுத்த பணிகள் குறித்து அடுத்தடுத்த வாரங்களில் நாம் விவாதிப்போம்!

தோழர்களே ஆர்.எஸ்.எஸ். வழிநடத்தும் பாஜக ஆட்சியே இன்று ஒன்றியத்தில் உள்ளது. அதனை அதிகாரத்திலிருந்து அகற்றும் பணியே முதல் அரசியல் பணியாகும். இப்பணி வெற்றிகரமாக நிறைவேற்றும், அமைப்பு நிலைக் கடமைகளை மேற்கொள்ள வேண்டும். கட்சி வழங்கியுள்ள பொறுப்புகளை செம்மையாக நிறைவேற்றிட ஆயத்தமாவீர்!

பணிகள் தொடரட்டும், தொய்வின்றி தொடரட்டும்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தோழமைமிக்க,



இரா.முத்தரசன்

---

# நியாயமான ஓய்வூதியத்தை மறுப்பதா?

## ஏஐடியூசி கண்டனம்!



ஏஐடியூசி பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

பழைய ஓய்வூதியத் திட்டத்தை (OPS) மீண்டும் செயல்படுத்த இயலாது என பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு உறுப்பினர் சஞ்சீவ் சன்யாலின் அறிக்கையை ஏஐடியூசி எதிர்க்கிறது. தவறான பொருளாதார இயக்கத்தால் உருவாகும் சுமையை, உழைக்கும் மக்களின் தோள்களில் சுமத்தும் வகையில் கொள்கை வகுத்து அதற்கு "சீர்திருத்தம்" எனப் பெயர் சூட்டப்படுகிறது. நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகள், ஃபிக்ஸட் டெர்ம் எம்ப்ளாய்மெண்ட், EPS-95 குறைந்தபட்ச ஓய்வூதியத்தை உயர்த்த மறுத்தல், போன்றவை அனைத்தும் 'சீர்திருத்தங்கள்' என்றே அழைக்கப்படுகின்றன.

மறுபுறம், இதே 'சீர்திருத்தங்கள்' கார்ப்பரேட்களின் வரியை பெருமளவு குறைத்து, "வியாபாரம் செய்வதற்கு எளிதாக" பல்வேறு சட்ட மீறல்களுக்காக முதலாளிகளுக்குத் தண்டனை விதிப்பதை முற்றாக ரத்து செய்கின்றன. கார்ப்பரேட் வரி, வருமான வரி, ரத்து செய்யப்பட்டு விட்ட சொத்து வரியை மீண்டும் விதித்தல், வாரிசு வரி போன்றவற்றை உயர்த்துவதன் மூலம் பணம் ஈட்டி, அனைத்து ஓய்வூதியத் திட்டங்களும் மத்திய அரசு முழுமையாக நிதியளிக்க வேண்டும் என்று ஏஐடியூசி கோருகிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 39

# புத்தாண்டு இப்போது! புதுயுகம் எப்போது?

உத்தரப்பிரதேச மாநிலம், மீரட் நகரில் 100 பேரை, பாஜகவின் ‘வீடு திரும்புதல்’ திட்டத்தின்படி இந்து மதத்தில் சேர்ந்திருக்கிறார்கள். விஸ்வ இந்து பரிசத் ஏற்பாட்டில் உள்ளூர் சட்டப்பேரவை உறுப்பினர் முன்னிலையில் இது நடந்திருக்கிறது. அந்த எம்எல்ஏ பேசும்போது, “சனாதன தர்மத்தில் இருந்து குழப்பங்களின் காரணமாக பல ஆண்டுகளுக்கு முன்பு விலகிச் சென்றவர்களை திரும்பக் கொண்டு வரவே இந்த விழா நடத்தப்பட்டது. அவர்கள் சொந்த விருப்பத்தின் படிதான் மதம் மாறினர். அதற்கான பிரமாண பத்திரங்களை அவர்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள்” என்று பேசி இருக்கிறார்.

நல்லது. எந்த ஒரு மதத்தைச் சார்ந்திருக்கவும், தான் விரும்பிய வழிபாட்டை மேற்கொள்ளவும் இந்திய அரசியல் சாசனம் குடிமக்களுக்கு முழு உரிமை வழங்கி இருக்கிறது.

ஆனால் அவர்கள் எந்த மதத்தில் இருந்து திரும்பி வந்திருக்கிறார்கள் என்றோ, சனாதன தர்மத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட குழப்பம் எவ்வாறு தீர்வு செய்யப்பட்டு இருக்கிறதோ என்ற எதுவும் செய்தியில் சொல்லப்படவில்லை.

புதுக்கோட்டை முட்டுக்காடு ஊராட்சியில் உள்ள இறையூர் வேங்கைவயலில் பல தலைமுறைகளாக தீண்டாமை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்து மதத்தைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்கள் குடியிருப்புக்கு குடிநீர் விநியோகம் செய்யும் மேல்நிலைத் தொட்டியில் மலம் கழிக்கப்பட்டுள்ளது. அந்த அடாத செயலைச் செய்தவர்களும் இந்துக்கள் தான்.

குழந்தைகளுக்கு தொடர்ந்து நோய் ஏற்பட்டதாலும், தண்ணீர் துர்நாற்றம் வீசியதாலும், ஆய்வு செய்தபோது இது தெரியவந்தது. மாவட்ட ஆட்சியர் திருமதி கவிதா ராமு அவர்கள் நேரடியாக சென்று பார்த்து, தொட்டியை சுத்தம் செய்யவும், அதற்குக் காரணமானவர்களை கண்டுபிடித்து கைது செய்யவும் உத்தரவிட்டிருக்கிறார்.

தம்மைக் கோவிலுக்குள் நுழைய விடக்கூடாது என்று தடுப்பதாக தகவல் தெரிவிக்க, அந்த ஒடுக்கப்பட்ட மக்களை அழைத்துக் கொண்டு கோவிலுக்குள் நுழைந்திருக்கிறார். கோயில் பூசாரியின் மனைவி, சாமி வந்தது போல் ஆடி, பட்டியலின மக்களை மோசமான வார்த்தைகளால் விமர்சித்து அவர்களை கோயிலுக்குள் அழைத்து செல்லக் கூடாது என்று தடுத்த போது அவரைக் கைது செய்யவும் மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டிருக்கிறார்.

டீக்கடையில் இரட்டை குவளை முறை கடைப்பிடிக்கப்படுவதாகவும் ஊர் மக்கள் குற்றம்சாட்டினர். இதையடுத்து டீக்கடைக்காரர் மூக்கையா மற்றும் அவரது மனைவி மீனாட்சி ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சியருக்கு மனமார்ந்த பாராட்டுகள்.

எந்தச் சனாதனத்திற்கு திரும்ப வேண்டும் என்று இந்துத்துவா கும்பல் சொல்கிறதோ, அந்த சனாதன தர்மம் தான் மக்களை நான்கு வர்ணங்களாகவும், அவர்ணமாகவும் பிரித்திருக்கிறது. இந்தக் காட்டுமிராண்டித்தனங்களுக்கு எல்லாம் காரணமாக அமைந்திருக்கிறது.

அதே உத்தரப் பிரதேசத்தின் ராம்பூர் மாவட்டத்தில் சோனா என்ற சிற்றூரில், அதேபோல நூறு பேரைக் கொண்ட, திறந்தவெளி கூட்டத்தை நடத்தியதற்காக ஒரு கிறிஸ்தவ பாதிரியார் கைது செய்யப்பட்டு இருக்கிறார். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஒருவர், “இந்தக் கூட்டம் யாருடைய உணர்வையும் புண்படுத்துவதற்காக அல்ல; மிகுந்த நேர்மையுடன் நமது கடவுளை வழிபடுவதற்காகவே நடத்தப்படுகிறது என்று பாதிரியார் சொன்னார். அவர் தனது மதத்தைப் பற்றிய நல்ல விஷயங்களை எங்களுக்கு தெரிவித்தார். சமூகத்தில் மரியாதை பெறுவது, கல்வி கற்பது பற்றி எல்லாம் எடுத்துரைத்தார். திடீரென்று எங்கள் கிராமத்துக்கு போலீஸ் படை வந்து சேர்ந்தது. நாங்கள் அச்சத்தில் இருக்கிறோம்” என்று கூறி இருக்கிறார்.

கிறிஸ்துமஸை ஒட்டி பாதிரியார் மதமாற்றம் செய்து கொண்டிருக்கிறார் என ராம் யாதவ் என்ற ஒரு சங்கி கொடுத்த புகாரின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஆனால், அவர் அனுமதி பெறாமல் கூட்டம் நடத்தியதற்காகத்தான் கைது செய்யப்பட்டுள்ளதாக காவல் துறை மழுப்புகிறது. சுயமரியாதையையும், கல்வி கற்பதையும் பேசினால் கைது. மூடத்தனத்தை வளர்த்து, அறிவியலை புதைத்து, மனிதர்களைக் காட்டுமிராண்டியாக்கும் ‘பிறப்பினால் உயர்வு தாழ்வு’ கற்பிக்கும் சனாதானத்தைப் பேசினால் புகழ் மாலை !

தமிழகத்திலும் இன்னும் இந்த காட்டுமிராண்டித்தனம் நிகழ்வது பெரும் கவலைக்குரியது தான். ஆனால் புதுக்கோட்டையில் எடுக்கப்பட்டதை போன்ற ஒரு நடவடிக்கை உத்தரபிரதேச மாநிலத்தில் நடந்ததாக சரித்திரம் உண்டா? அவ்வாறு நடவடிக்கை எடுத்தால் அந்த அதிகாரியால் அங்கு நீடிக்க முடியுமா?

புத்தாண்டு வந்துவிட்டது ! பொங்கல் பிறந்தாலும் தீபம் இருந்தாலும் ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே என்ற கண்ணதாசனின் கவிதைதான் நினைவுக்கு வருகிறது ! மனிதர் நோக, மனிதர் பார்க்கும் வழக்கம் ஒழியும் நாள்தான் உண்மையான புத்தாண்டு.

1 ம் பக்கத் தொடர்ச்சி




தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் பரிந்துரையின்படி செயல்பட வேண்டும். பா.ஜ.க.வும் ஆர்.எஸ்.எஸ்.சும் இந்தியாவைக் கைப்பற்றி ஒரு ஒற்றைத் தலைமையின் கீழ் கொண்டு வர பாடுபடுகிறார்கள். கட்சி என்ற முறையில் நமது கட்சிக்கு சட்டக் கமிசன் ஒரு கடிதம் எழுதியிருக்கிறது. அதில் பா.ஜ.க.வின் கொள்கையை ஏற்றுக் கொண்டு ஒரே நாடு ஒரே தேர்தல் என்று ஒரே காலத்தில் தேர்தல் நடத்துவது பற்றி உங்கள் கட்சியின் கருத்து என்ன? என்று கேட்டிருக்கிறார்கள்.

இதன் நோக்கம் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவின் பன்முக ஜனநாயகத்தை தகர்த்தெறிந்து ஒற்றை ஆட்சியை நிறுவ வேண்டும், அந்த ஒற்றை ஆட்சி மதவாத ஆட்சியாக, மனுஸ்மிருதியின் ஆட்சியாக அமைய வேண்டும் என்று மோடி அரசு முயற்சிக்கிறது.

இதன்காரணமாகத்தான் ஒன்றிய அரசு அகற்றப்பட வேண்டும். எல்லா கட்சியினரும் ஆளுநர் அகற்றப்பட வேண்டும் என்று பேசுகின்றனர். கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில் ஆளுநர் அகற்றப்படுவதோடு, இந்தியாவைக் காப்பது, ஜனநாயகத்தைக் காப்பது, அரசியல் அமைப்புச் சட்டத்தைக் காப்பாற்றுவது, மதச்சார்பற்ற ஜனநாகத்தை காப்பாற்றுவது, இதெல்லாம் நமது கட்சியயின் முன்னால் இருக்கிற முக்கியமான கடமைகள். இந்தக் கடமைகளை நாம் நிறைவேற்றவேண்டுமானால், அரசியல் தளத்தில் நாம் தீவிரமாக பணியாற்ற வேண்டி உள்ளது. ஒன்றியத்தில் அதிகாரத்தில் இருக்கிற பா.ஜ.க. தூக்கி எறியப்பட வேண்டும் என்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். 2024 ல் நடைபெறும் நாடாளுமன்றத்தில் தேர்தலில் தமிழ்நாட்டில் பா.ஜ.க.வும் அதனோடு சேர்கிற எந்தக் கட்சியும் மக்கள் ஆதரவைப் பெற முடியாது என்ற சூழலை நாம் உருவாக்க வேண்டும்.

புதுச்சேரி உட்பட 40 தொகுதிகளிலும் மதச்சார்பற்ற கூட்டணியை வெற்றி பெறச் செய்ய வேண்டும். இந்தியாவில் பா.ஜ.க.வை அகற்றுகின்ற ஒரு போராட்டத்தின் ஒரு பகுதிதான் தமிழ்நாட்டில் ஆளுநரை அகற்றக் கோரும் போராட்டம். இந்தப் போராட்டம் வரலாற்று ரீதியான போராட்டமாகும். தமிழகம் எங்கும் எதிரொலிக்கட்டும். இவ்வாறு பேசினார்.

## இரா.முத்தரசன் முழக்கம்

கடந்த ஆகஸ்ட் மாதம் 9ஆம் தேதி திருப்பூர் மாநகரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டின் நிறைவாக ஒரு பிரம்மாண்டமான பேரணி நடைபெற்றது. “வெள்ளையனே வெளியேறு” என்ற நாளில் நடைபெற்ற அந்தப் பேரணியில் “மோடி அரசே வெளியேறு” என்கிற முழக்கமிட்டு அந்த பேரணி நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான தோழர்கள் சிவப்பு சட்டை அணிந்து, பல்லாயிரக்கணக்கான தாய்மார்கள் சிவப்பு சேலை அணிந்து செங்கொடியை உயர்த்திப் பிடித்து அந்த மகத்தான பேரணியிலும் பொதுக்கூட்டத்திலும் பங்கேற்றனர். இடைப்பட்ட காலம் நான்கே மாதம்தான். இந்த நான்கு மாதத்திற்குள்ளாக மீண்டும் ஒரு பேரணி சென்னையில். மீண்டும் ஒரு போராட்டம் ! அதே கோரிக்கையின் அடிப்படையில் டிசம்பர் 29ல் நடத்தலாமா? பெரிய அளவுக்கு தோழர்கள் வரமுடியுமா? என்பது தலைமைக்கே தயக்கமாக இருந்தது. ஆனால் தோழர்களான நீங்களோ, தலைமையில் இருப்பவர்களே தயங்காதீர்கள், எத்தனை போராட்டங்கள் அறிவித்தாலும் லட்சம் லட்சமாக திரளுவோம் ! என்று இங்கு திரண்டு வந்திருக்கிறீர்கள். ஆளுநர் ரவி சம்பளத்திற்காக ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டவர். சம்பளம் நம்முடைய வரிப்பணத்திலிருந்து மாநில அரசு அளிக்கிறது. அவர் தங்கியிருக்கிற பிரமாண்டமான மாளிகையை மாநில அரசு பராமரிக்கிறது. அவருக்கு தமிழக மக்களின் வரிப்பணத்திலிருந்துதான் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. இவைகளையெல்லாம் பெற்றுக் கொண்டு தமிழ்நாடு சட்டப்பேரவை நிறைவேற்றுகிற மசோதாக்கள் எவற்றிலும் கையெழுத்து போட மாட்டேன் என்று அடம்பிடிக்கிற அடவாடியாக ஆளுநர் ரவி இருக்கிறார்.

மிக சுருக்கமாகச் சொன்னால் ஆன் லைன் சூதாட்டத்தால் தினசரி செத்துக் கொண்டே இருக்கிறார்கள். லட்சக்கணக்கான ரூபாய் இழக்கிறார்கள். கடன் வாங்கியும் இழந்து கொண்டிருக்கிறார்கள். கடன் தொல்லை தாங்க முடியாமல் இதுவரையில் 60க்கும் மேற்பட்டோர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இவை அரசு அறிவித்த கணக்காகும். வெளியில் தெரியாத தற்கொலைகள் பல இருக்கின்றன. ஆன்லைன் சூதாட்டத்தை தடைசெய்ய வேண்டும் என்று தமிழ்நாடு அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பியபோது அவசர சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கிறார்.

பின்பு சட்டமன்றத்தில் ஆன் லைன் சூதாட்டத்திற்கு எதிராக நிரந்தர சட்டம் இயற்ற வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவை ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பல மாதங்களுக்குப் பிறகு அதில் சந்தேகம் கேட்கிறார். விளக்கம் கேட்கிறார். 24 மணிநேரத்திற்குள் அரசு அதற்கு விளக்கம் அளிக்கிறது. அதற்கு பின்னரும் இதுவரையில் அந்த மசோதாவிற்கு ஆளுநர் ஒப்புதல் வழங்கவில்லை.

ஆனால் யார் சூதாட்டம் நடத்துகிறார்களோ அந்த ஆன்லைன் சூதாட்ட கும்பலை வரவழைத்து விருந்து கொடுத்து பேசுகிறார். அவர்களிடம் என்ன வாங்கினார் என்று தெரியவில்லை. இது கள்ள உறவு இல்லையா? தமிழ்நாட்டில் உள்ள தமிழன் சாக வேண்டும், கொள்ளையடிப்பவனிடம் உறவாய் இருப்பாய் என்றால், இந்த கள்ள உறவுக்கு என்ன பெயர்? இந்த கள்ள உறவை ஒரு ஆளுநர் மேற்கொள்ளளாமா? அதேபோல நீட் நுழைவுத் தேர்வு. இன்னும் பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. இந்த ஆர்எஸ்எஸ் காரனுக்கு மார்க்ஸ்தான் எதிரி. இது எல்லோருக்கும் தெரியும். ஆனால் எவனும் இதுவரைக்கும் வாயைத் திறந்து பேசவில்லை. நாகர்கோவிலில் நடைபெற்ற ராமானுஜர் விழாவில் இந்தியா கெட்டுப்போனதற்கு காரணம் காரல் மார்க்ஸ் என்று ரவி பேசுகிறார். எல்லா பத்திரிகையிலும் செய்தி வந்திருக்கிறது. ஆட்டை கடித்து மாட்டை கடித்து மனிதனை கடிக்கும் என்பார்கள். அதுபோல மனிதனை கடிக்க வாயை திறந்திருக்கிறார். கடிப்பதற்கு முன்பே வாயை மூட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் போராட்டம். இந்தியாவின் காலாச்சாரமும், பண்பாடும் கெட்டுப்போனதற்கு மார்க்ஸ்தான் காரணம் என்று பகிரங்கமாக சொல்கிறார். உலகத்தில் இருக்கிற ஒவ்வொரு நாடும் ஒரு மதத்தைச் சார்ந்து இருக்கிறது. அதேபோல் இந்தியா இந்து மதத்தை சார்ந்த நாடு என்று பகிரங்கமாக அறிவிக்கிறார். உலகப் பொதுமறை என போற்றப்படுகிற திருக்குறளை இந்து சமய நூல் என ஒரு சிமிழிக்குள் அடைக்க முயற்சிக்கின்றார். சனாதனம்தான் இந்த நாட்டை ஒற்றுமைப்படுத்தியிருக்கிறது என்ற ஒரு மோசமான கருத்தை ஆளுநர் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆகவே அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக மதச்சார்பின்மை கொள்கைக்கு எதிராக, தமிழ்நாட்டு மக்களின் உரிமைக்கு எதிராக , தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு எதிராக, செயல்பட்டுக் கொண்டிருக்கிற, போட்டி ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார். ஆளுநர் மாளிகை அரசாங்கத்திற்கு சொந்தமான மாளிகை. அது என் பா.ஜ.க. அலுவலகமா? ஆளுநர் அங்கு பா.ஜ.க. கூட்டம் நடத்துகிறார். இவைகளையெல்லாம் வேடிக்கை பார்த்து கொண்டிருக்க மாட்டோம் என்று எச்சரிக்கும் விதமாகத்தான் இந்த முற்றுகை போராட்டத்தை நாம் ஏற்பாடு செய்தோம். இவ்வளவு பேர் வருவீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை. காவல்துறையினர் எவ்வளவு பேர் வருவார்கள் என்று கேட்டார்கள் 2000, 3000 பேர் வருவார்கள் என்று கூறினோம். ஆனால் பல்லாயிரமாக திரண்டு வந்திருக்கிறீர்கள். அவ்வளவு பேரும் கைதாக வேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லி இருக்கிறேன். கட்டுப்பாடுடன் பேரணியில் சென்று கைதாவோம் ! இவ்வாறு பேசினார்.

# இந்திய வானில் உதித்த சிவப்பு தாரகை...



அ.மு.சலீம்

உலகில் தோன்றிய மூத்தநாகரிகங்களில் சிந்து சமவெளி நாகரிகம் இந்தியாவில் தோன்றியது. அதனால்தான்.

பாரத நாடு பழம்பெரும் நாடு
நீரதன் புதல்வர் – இந்
நினைகற்றாதீர் என்றார் – பாரதி

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு இனங்கள், மொழிகள், சமயங்கள், பண்பாடு, கலாச்சாரங்களைக் கொண்ட நம் இந்தியத் திருநாடு வேளாண் தொழிலை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதனால் நிலப்பிரபுத்துவமும், சாதிய அடுக்கு முறைகளும் கொண்ட சமூகமாக இந்தியா இருந்தது. பிரட்டிஷ்காரர்கள் இந்தியாவிற்கு வந்து ஆட்சி அமைத்தபிறகு, தொழில் புரட்சி ஏற்பட்டு, எண்ணிலடங்கா தொழிற்சாலைகளும், இரயில்வேயும் உருவானது. அதனால் இந்தியாவில் முதலாளித்துவம் உருவானது. அதனால் தொழிலாளர் வர்க்கம் உருவானது.

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் ஐரோப்பாவில் சோசலிசம் எனும் கருத்து பிரபலமாகிக் கொண்டிருந்தது. சுவாமி விவேகானந்தர், அமெரிக்கா, ஐரோப்பா, சுற்றுப் பயணம் முடித்து, இந்தியாவிற்கு திரும்பிய பிறகு 'நான் ஒரு சோஷலிஸ்ட்' என்று அறிவித்தார். அதேபோல பாலகங்காதர திலகர் அவர்களும் ஐரோப்பா சென்று திரும்பிய பிறகு 1916களில் தொழிலாளர் ஜனநாயக கட்சி அமைக்க முயற்சி செய்தார்.

1917ல் அக்டோபர் புரட்சி உலகத்தையே உலுக்கியது. இந்தியாவில் இருந்த கல்விமான்கள், அறிவு ஜீவிகள், முற்போக்கு எண்ணமுள்ளவர்கள், சுதந்திர வேட்கை கொண்டோர் மத்தியில் சோவியத் சோசலிஸ்ட் புரட்சி பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஆஹா... என்றெழுந்ததுபார் யுகப்புரட்சி என்று ருஷ்ய புரட்சியை வரவேற்றான் மகாகவி பாரதி.

மார்க்சிய கருத்துக்களாலும், ருஷ்ய புரட்சியாலும், புரட்சியை நடத்திய மாமேதை லெனினாலும், இந்தியாவில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஆதர்ஷிக்கப்பட்டார்கள். கான்பூர், பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய மாநகரங்களில் கம்யூனிஸ்ட் குழுக்கள் உருவாகி செயல்படத் துவங்கின.

1923ல் சென்னையில் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் கம்யூனிஸ்ட் கருத்துக்களை பரப்பினார். இந்தியாவிலேயே முதல் மே தினம் கொண்டாடி செங்கொடியை ஏற்றி வைத்தார்.

### 1925ல் உதித்த சிவப்புத் தாரகை

அனைத்து கம்யூனிஸ்ட் குழுக்களும் ஒன்று சேர்ந்து 1925 டிசம்பர் 25ஆம் நாள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினார்கள். டிசம்பர் 25லிருந்து 28 வரை நான்கு நாட்கள் கான்பூரில் முதல் மாநாடு நடந்தது. மாநாட்டின் வரவேற்புக்குழு தலைவர் மௌலானா ஹஜ்ரத் மொஹானி வரவேற்புரையாற்றினார். சிங்காரவேலு செட்டியார் தலைமை வகித்தார். இன்குலாப் ஜிந்தாபாத் (புரட்சி ஓங்குக) எனும் முழக்கத்தை முதலில் அறிமுகப்படுத்தியவர் மௌலானா ஹஜ்ரத் மொஹானி என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு தலைவராக சிந்தனைச் சிற்பி சிங்கார வேலரும், பொதுச்செயலாளராக எஸ்.வி.காட்டேவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கெதிரான விடுதலைப் போராட்டம் நடத்திடவும், தொழிலாளர், விவசாயிகள் தலைமையிலான சோசலிசக் குடியரசை அமைத்திடவும், இந்த மாநாடு தீர்மானித்தது.

1925 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25ஆம் நாள் துவங்கப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மிக விரைவாக இந்தியாவில் பரவியது. ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் சேர்ந்தனர். தொழிலாளர் உரிமைகளுக்காக உழைப்புச் சுரண்டலை எதிர்த்து, விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து, மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டங்களை நடத்தியது. கம்யூனிஸ்ட் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். சிறை, சித்திரவதைக்கு ஆளானார்கள். தூக்கு தண்டனை, ஆயுள் தண்டனை பெற்றார்கள். ஆனாலும் கம்யூனிஸ்ட் கட்சி காட்டுத்தீ போல பரவியது.

புகழ்மிக்க கம்யூனிஸ்ட் தலைவர்கள் உருவானார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பி.சி.ஜோஷி மிகப்பிரபலமடைந்தார். காந்திஜி, நேருஜி, ஜோஷிஜி என்று மக்கள் அழைத்தனர்.

**கம்யூனிஸ்ட் தலைவர்களின் அளப்பரிய தியாகத்தை கண்டு தேசப்பிதா காந்தியடிகள் பெரு மதிப்பு கொண்டார். இரண்டு முறை தடை செய்யப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தடை நீங்கி பீனிக்ஸ் பறவை போல சிலிர்த்தெழுந்து பறந்தது.**



இந்திய நாட்டின் விடுதலைக்குப் பிறகு 1925ல் நடந்த முதல் பொதுத் தேர்தலில் ஏராளமான கம்யூனிஸ்ட் தலைவர்கள் வெற்றி பெற்று நாடாளுமன்றத்தில் நுழைந்தனர். காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாகவும், கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கட்சியாகவும் இருந்தன. நாட்டிலேயே மிக அதிக வாக்கு வித்தியாசத்தில் (நேருவை விட) தெலுங்கானாவிலிருந்து தோழர் ரவிநாராயணரெட்டி வெற்றி பெற்றார்.

புதுச்சேரியிலேயே கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் வ.சுப்பையா தலைமையில் பிரெஞ்சு இந்திய விடுதலை போராட்டத்தை நடத்தி 1954ல் புதுச்சேரி விடுதலை அடையச் செய்தது. 1957ல் இந்தியாவிலேயே... ஏன் உலகத்திலேயே வாக்கு சீட்டுகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாக கேரளாவிலே கம்யூனிஸ்டுகள் வெற்றிவாகை சூடி ஆட்சியமைத்தார்கள்.

இந்திய நாட்டு நாடாளுமன்றத்தில், கம்யூனிஸ்ட்கள், நாடாளுமன்ற ஜனநாயக முறையை நன்கு பயன்படுத்தினர். பல முக்கிய விவாதங்களை எழுப்பி இந்திய தொழிலாளர்களுக்கான பல்வேறு நலச்சட்டங்களை கொண்டு வந்தார்கள். விவசாயிகள், ஏழைகள் ஆகியோருக்கான பாதுகாப்பு சட்டங்களை கம்யூனிஸ்ட்களின் முயற்சியின் விளைவாக வந்தன.

மாபெரும் பொதுத்துறை நிறுவனங்கள் உருவாகி, இந்திய நாட்டில் பொருளாதாரம் முதலாளித்துவம் நோக்கி சென்று விடாமல் தடுப்பதற்கான முழு முயற்சியையும் கம்யூனிஸ்டுகள் மேற்கொண்டார்கள். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் உருவாக கம்யூனிஸ்ட்களின் பங்கு மகத்தானது.

வங்கிகள், ஆயுள் காப்பீட்டு கழகங்கள், தொலைத்தொடர்பு, விமான நிலையங்கள், துறை முகங்கள், சுரங்கங்கள், பெட்ரோல், எரிவாயு நிறுவனங்கள், அனைத்து மாபெரும் பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு பொருளாதாரத்தில் இந்தியநாடு சுயசார்போடு நிமிர்ந்து நிற்கிறது என்றால், அது கம்யூனிஸ்ட்களினாலும், கம்யூனிஸ்ட் தொழிற்சங்கங்களினாலும் தான் என்பது வரலாற்று உண்மை.

100% சதவீதம் கல்வி அறிவு பெற்று, கிராமப்புற பொருளாதாரம் தழைத்து, சாதிய ஏற்றத்தாழ்வுகள் அகற்றி, சமூக நீதி காத்து, பகுத்தறிவை வளர்த்து ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்தி இந்தியாவிற்கே கேரளா வழி காட்டுகிறது என்றால் அது கம்யூனிஸ்டு களினால்தான்.

சாதியம் என்ற கருத்தாக்கத்தால் ஆண்டாண்டு காலமாக இறுக்கமாக கட்டமைக்கப்பட்டிருக்கும் இந்திய சமூக அமைப்பை மாற்றிட, சமய வேறுபாடுகளை பயன்படுத்தி அரசியல் ஆதாயம் அடைந்திருக்கும் பாசிச சக்திகளை வீழ்த்தி, உலகம் முன்னெப்போதும் கண்டிராத விஞ்ஞான டிஜிட்டல் தொழில் நுட்பத்தை உள்வாங்கி, சாதி, மத பேதமற்ற சோசலிச சமுதாயம் படைத்திட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வீரமான தியாக வரலாற்றை போற்றி எதிர்கால பயணத்தை தொடர்ந்திடுவோம்.

வாழ்க இந்திய கம்யூனிஸ்டு கட்சி!

தொடர்புக்கு: 94433 89291

---

# ஆரூரான் சர்க்கரை ஆலையில் பெரும் மோசடி – விவசாயிகள் பாதிப்பு முதலமைச்சர் தலையிட்டு தீர்வு காண வேண்டும்

தஞ்சாவூர் மாவட்டம், திருமுண்டங்குடியில் இயங்கி வந்த திரு ஆரூரான் சர்க்கரை ஆலை நிர்வாகம் பெரும் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளது. இதில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

திரு ஆரூரான் சர்க்கரை ஆலை கடந்த நான்காண்டு காலமாக செயல்படாமல் உள்ளது. ஆலை விரிவாக்கம், விவசாயிகள் வழங்கிய கரும்புக்கு கொடுக்க வேண்டிய பாக்கித் தொகை, வங்கியில் பெற்ற கடன் உள்ளிட்ட சட்டப்பூர்வ பிரச்சனைகளுக்கு தீர்வு காணாமல், ஆலை வேறொரு நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆலையை விலைக்கு வாங்கியுள்ள புதிய நிர்வாகம், ஆலையில் உள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காண முன்வரவில்லை.

விவசாயிகள் ஆலைக்கு வழங்கிய கரும்பிற்கான தொகை, பெருமளவில் பாக்கியுள்ளது. மேலும் விவசாயிகள் பெயரில் நிர்வாகம் வங்கியில் பெற்ற கடன் தொகை ஏறத்தாழ 300 கோடியை திருப்பிச் செலுத்துவதில்லை. ஆனால் நிர்வாகம் விவசாயிகள் பெயரில் கடன் தொகையை பெற்றுக் கொண்டது. விவசாயிகள் கடனை திரும்ப செலுத்துமாறு அரசு நோட்டீஸ் அனுப்பி, அச்சுறுத்தியும், மிரட்டியும் வருகின்றது.

கடன் பெறாத அப்பாவி விவசாயிகள் கடன் பெற்றதாக மிகப்பெரும் மோசடி செய்துள்ள திரு அரூரான் சர்க்கரை நிர்வாகமும், வங்கி அதிகாரிகளும் கூட்டாக ரூ.300 கோடி கொள்ளையடித்துள்ளனர். இது குறித்து விரிவான நீதி விசாரணை மேற்கொள்ளப்பட்டு மோசடி செய்த குற்றவாளிகள் மீது சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

ஆலையை நம்பி கரும்பு பயிரிட்டு, வழங்கி வரும் 15,000ம் விவசாயிகள் குடும்பங்களின் வாழ்வாதாரம் முற்றிலும் முடங்கிப் போயுள்ள துயரநிலைக்கு அரசு தீர்வு காண வேண்டும்.

பாதிக்கப்பட்ட விவசாயிகள், அனைத்து கட்சி மற்றும் விவசாய சங்கங்களின் முழு ஒத்துழைப்புடன், ஆதரவுடன் கடந்த இருபது நாட்களுக்கு மேலாக போராட்டங்களை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் மேற்கொண்ட முத்தரப்பு கூட்டங்களால் தீர்வு எதுவும் காண முடியவில்லை. எனவே, ஆரூரான் சர்க்கரை ஆலை பிரச்சனையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகத் தலையிட்டு தீர்வுகாண வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

---

# விபத்தில் ராணுவ வீரர்கள் உயிரிழப்பு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

நாட்டின் எல்லைப் பாதுகாப்பு மிக முக்கியமானது. இதில் சிக்கிம் மாநிலத்தின் எல்லையில் சீன நாட்டின் அத்துமீறலை எதிர்கொள்ள ராணுவம் எச்சரிக்கையுடன் செயலாற்றி வருகிறது. இந்த முக்கியத்துவம் வாய்ந்த பணிக்காக சிக்கிம் மாநிலம், சட்டன் பகுதி ராணுவ முகாமில் இருந்த அதிகாரிகளும், வீரர்களுமாக 60 பேர் மூன்று வேன்களில் 'டாங்கு'' எல்லைப் பகுதிக்கு சென்று கொண்டிருந்தனர். கொண்டை ஊசி வளைவுகள் கொண்ட மலைப்பாதையில் ஒரு வேன் நிலைதடுமாறி, பள்ளத்தாக்கில் விழுந்ததில் மூன்று அதிகாரிகளும், 16 வீரர்களும் உயிரிழந்துள்ளனர் என்ற துயரச் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

பாதுகாப்பற்ற சாலைப் போக்குவரத்து இருக்கும் பகுதிகளில் ராணுவம் விபத்தில்லா பயணம் செல்வதை உறுதிப்படுத்த வேண்டும். களத்தில் போராடும் பயிற்சியும், திறனையும் பெற்றவர்களை விபத்தில் இழப்பது இனியும் நடக்காமல் இருக்க எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்வதுடன், விபத்தில் உயிரிழந்த ராணுவ அதிகாரிகள் மற்றும் வீரர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவர்களை இழந்து வாடும், அவர்களது குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# நெருக்கடியே வாய்ப்புகளுக்கான வரம்! தடை உடைத்து முன்னேறுவோம்!

## ஆலப்புழையில் ஏஐடியுசியின் 42வது தேசிய மாநாடு அழைப்பு

அகில இந்திய தொழிற்சங்கப் பேரவைத்தின் 42வது தேசிய மாநாடு கேரள மாநிலம் ஆலப்புழையில் 2022 டிசம்பர் 16, 17, 18, 19, 20 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. மாநாடு நடந்த இடம் பெரிய விளையாட்டுத் திடலாகும். நடுவில் பிரம்மாண்டமான, காற்றுப்புகாத அளவுக்கு கூடாரம் அமைத்து, குளிரூட்டப்பட்ட அரங்கம்; உணவு வழங்குவதற்கான பெரிய அரங்கம்; கருத்தரங்கம், கலைநிகழ்ச்சிகள் நடத்துவதற்கான மேடையோடு கூடிய திறந்த வெளியரங்கம்; அணையாத தீப்பிழம்புடன் புன்னப்புரா வயலார் தியாகிகள் நினைவுச் சின்னமும், தேசியக் கொடியும், தியாகச் செங்கொடியும் உயர்ந்து நிற்க, செந்தொண்டர் காவலோடு கூடிய கொடி மேடை இவையனைத்தும் தனித்தனியே அமைத்து, இவையனைத்துக்கும் மொத்தமாக குருதாஸ் தாஸ் குப்தா நகர் எனப் பெயர் சூட்டியிருந்தனர்.

இந்தியாவின் வெனிஸ் என்றழைக்கப் படுகிறது ஆலப்புழை. சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் சென்று சுற்றிக்காட்டுவது மட்டுமல்ல; வெவ்வேறு ஊர்களுக்குப் பயணிகளை கொண்டு சேர்ப்பதற்கும் அழகழகான படகுகள் உள்ளன. ஊருக்குள்ளேயே ஓடும் வாய்க்கால்களில் அவை பயணிக்கின்றன. அந்த ஊரையே செந்தோரணங்களாலும், கொடிகளாலும், பிளக்ஸ் தட்டிகளாலும், புடைப்புச் சிற்பங்களாலும் செம்மயமாக தோழர்கள் அலங்கரித்திருந்தனர்.

மாநாட்டில் ஏற்றுவதற்கான கொடி, கொடிமரம், கயிறு, மேடையில் வைப்பதற்காக மகத்தான தலைவர்கள் குருதாஸ் தாஸ் குப்தா, சி.ஏ.குரியன் ஆகியோரின் புகைப்படங்கள் ஆகியவை கேரளாவின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் எடுத்துவரப்பட்டன. வழியெங்கும் பரப்புரைக் கூட்டங்கள் நடத்தி, அந்த அணிகள் யாவும் சேர்த்தலாவில் உள்ள வயலார் ரத்தச் சாட்சிகளின் நினைவிடத்தில் வந்து சேர்ந்தன. அந்த நினைவிடத்தில் தியாகஜோதி ஏற்றப்பட்டு, 30 கி.மீ. தூரத்தை இளம் வீராங்கனைகள் ஜோதியைத் தாங்கி தொடரோட்டமாக ஓடியே எடுத்து வந்தனர்.

டிசம்பர் 16 மாலை, கொடிமரத்தை ஊன்றி, கொடியை தலைவர் ரமேந்திரகுமார் ஏற்றிவைக்க, பொதுச் செயலாளர் அமர்ஜீத் கவுர் ஜோதியைப் பெற்று, மாநாட்டு அரங்கில் இருந்த அணையாத ஜோதியை ஏற்றிவைத்தார்.

டிசம்பர் 17 காலையில், மாநாட்டு அரங்க வாயிலில் தேசியக் கொடியை அமர்ஜீத் கவுரும், ஏஐடியுசி கொடியை செயல் தலைவர் எச்.மகாதேவனும் ஏற்றிவைக்க மாநாடு துவங்கியது. ரமேந்தர் குமார் மற்றும் துணைத் தலைவர்கள் தலைமைக்குழுவாகச் செயல்பட்டனர். அமர்ஜீத் துவக்கவுரை ஆற்றிய பின்பு சக தொழிற்சங்கங்களின் தலைவர்களான ஆர்.சந்திரசேகரன் (ஐஎன்டியுசி), ஹேமலதா (சிஐடியு), தம்பன் தாமஸ் (எச்எம்எஸ்), உன்னி கிருஷ்ணன் (பிஎம்எஸ்), கே.ராதாகிருஷ்ணன் (ஏஐயுடியுசி), சங்கர் (ஏஐசிசிடியு), பிரகாஷ் மேனன் (டியுசிசி), சோனியா (சேவா), வினோத் குமார் (எல்பிஎப்), ஏ.ஏ.அஜீஸ் (யுடியுசி) ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் பாம்பிஸ் கிரிட்ஸிஸ், வியட்நாம் தூதர் நகுவன்தன்ஹை, ஐஎல்ஓ துணை இயக்குநர் சதோஷ்சாக்கி ஆகியோர் துவக்கவிழா பொது அமர்வில் வாழ்த்துரை வழங்கினார்கள்.

டிசம்பர் 17 மதிய அமர்வு, பிரதிநிதிகள் மாநாடாகத் துவங்கியது. கோவையில் நடைபெற்ற 41வது மாநாட்டில் 2486 பிரதிநிதிகள் பங்கேற்றனர். தற்போது தொடர்ந்த கொரோனா தீநுண்மி தாக்குதல் காரணமாக எண்ணிக்கை குறைக்கப்பட்டு 1340 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இரங்கல் தீர்மானத்தை சி.ஸ்ரீகுமார் முன்மொழிந்தார். அரசியல், பொருளாதாரம், கோவைக்குப்பின் மேற்கொள்ளப்பட்ட செயல் பாடுகளைக் கொண்ட அறிக்கைகளை பொதுச் செயலாளர் அறிமுகம் செய்தார். உடனடியாகவே பிரதிநிதிகள் விவாதம் துவங்கியது.

மறுநாளும் விவாதம் தொடர்ந்தது. முதலில் மாநிலத்துக்கு ஒருவர் வீதமும், பின்னர் தொழில்வாரியான சம்மேளனங்களுக்கு தலா ஒருவர் வீதமும் அழைக்கப்பட்டனர்.

• 41 பாதுகாப்புத்துறை தொழிற்சாலைகளை 7 கார்ப்பரேஷன்களாக மாற்றும் முடிவைக் கைவிடு!

• ஒன்றிய அரசுப் பணிகளில் காலியாக உள்ள 10 லட்சம் பணியிடங்களையும், பொதுத்துறை நிறுவனங்களில் காலியாக உள்ள 5 லட்சம் பணியிடங்களையும் நிரப்பு!

• சங்கம் சேரும் உரிமை, அமைப்பாகத் திரளும் உரிமை, கூட்டுப்பேரத்தில் ஈடுபடும் உரிமை ஆகிய ஐஎல்ஓ இணக்கவிதிகளை அமுலாக்கு!

• வங்கி, காப்பீடு உள்ளிட்ட நிறுவனங்கள் மீதான தாக்குதலை நிறுத்து.

• மின்சாரத்திருத்தச்சட்டத்தைகைவிடு! மின்சாரத்தை தனியார் மயப்படுத்தாதே!

• ஓய்வூதியம் அடிப்படை உரிமை, அனை வருக்கும் ஓய்வூதியம் வழங்கு

• மகப்பேறு நலன்களை அனைத்து உழைக்கும் பெண்களுக்கும் வழங்கு

• திட்ட ஊழியர்களுக்கு 'தொழிலாளி தகுதியளித்து, நிரந்தம் செய்!

• பட்டியலின/பழங்குடி மக்கள் மீதான கொடுமைகளைத் தடுத்து நிறுத்து!

• மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத்

தொடர்ச்சி 11ம் பக்கம்

### ஏஐடியுசி நிர்வாகிகள்

**ரமேந்தர் குமார்** – தலைவர்

**பினோய் விஸ்வம்** – செயல்தலைவர்

**அமர்ஜீத் கவுர்** – பொதுச் செயலாளர்

ஏஐடியுசி துணைத் தலைவர்களில் **கே.சுப்பராயன், எம்.பி., சி.எச். வெங்கடாசலம்** (ஏஐபிஇஏ) ஆகியோரும், செயலாளர்களில் **டி.எம்.மூர்த்தி, வஹிதா நிஜாம், ஸ்ரீகுமார்** (ஏஐடிஇஃஃப்), நிர்வாகக்குழுவுக்கு **எஸ்.காசி விஸ்வநாதன், எம்.ராதாகிருஷ்ணன், கே.இரவி, சி.சந்திரகுமார்** ஆகியோர் தமிழ்நாட்டிலிருந்து தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்வு செய்யப்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள்

1) எஸ்.காசி விஸ்வநாதன்
2) எம்.ராதாகிருஷ்ணன்
3) கே.இரவி
4) சி.சந்திரகுமார்
5) நா.பெரியசாமி
6) எம்.ஆறுமுகம்
7) ஆர்.ஆறுமுகம்
8) எஸ்.சின்னசாமி
9) என்.சேகர்
10) ஆ.பாஸ்கர்
11) பி.பீட்டர் துரைராஜ்
12) ஏ.எஸ்.கண்ணன்
13) மீனாள் சேதுராமன்
14) என்.செல்வராஜ்
15) எம்.ஜஹாங்கீர்
16) எஸ்.மூர்த்தி (மின்சாரம்)
17) எஸ்.ஆர்.தேவதாஸ்
18) பி.ஆர்.நடராஜன்
19) சி.தங்கவேலு
20) கே.எம்.செல்வராஜ்
21) எம்.நந்தாசிங்
22) எம்.முனுசாமி
23) வே.நடராஜா (பிஎச்இஎல்)
24) டாக்டர் ஏ.ஆர்.சாந்தி

(24 பேரில் 9 பேர் புதிய உறுப்பினர்கள்)

### ஏஐடியுசி என்ன செய்யவேண்டும்?

வரவிருக்கும் காலத்தில் தொழிற்சங்கங்களின் பங்களிப்பாக 42வது தேசிய மாநாடு வரையறுத்துள்ள முக்கிய கடமைகள் வருமாறு:

வேலைவாய்ப்பு, வேலைப் பாதுகாப்பு, பணியிட அன்றாட பிரச்சினைகள், சமுகப் பாதுகாப்பு ஆகிய உரிமைகளுக்காகத் தொழிற்சங்கங்கள் போராடுகின்றன. அதோடு சேர்த்து சாமானிய மனிதர்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கும், அரசுக் கொள்கைகளை எதிர்ப்பவர்கள் அச்சுறுத்தப்படுபவர்களோடு நிற்பதற்கும் உறுதியாக முன்வர வேண்டும். கூட்டுச் செயல்பாடு, ஜனநாயகம், அனைத்து சாதிகள், சமுகங்கள், மத நம்பிக்கை களையும் கொண்டுள்ள தொழிலாளர்களின் ஒற்றுமை ஆகியவற்றின் அடையாளமாக தொழிற்சங்கங்கள் உள்ளன. பலவிதமான நம்பிக்கைகளையும், பண்பாடுகளையும் வெறுப்புக் கண்கொண்டு நோக்காமல், அந்தப் பன்முகத் தன்மையை மிகுந்த மரியாதையுடன் தொழிற்சங்கங்கள் ஏற்கின்றன. அதுதான் ஜனநாயகத்தின் வலிமையும், சாராம்சமும் ஆகும்.

தொழிற்சங்கங்களின் ஒன்றுபட்ட இயக்கங்களில் ஏஐடியுசி தனக்குரிய பங்களிப்பைச் செலுத்தவேண்டும். மேலும் விவசாயிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், அறிவுஜீவிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் ஆகியவர்களுக்கு ஆதரவாக ஒருமைப்பாடு இயக்கங்களிலும் ஏஐடியுசி முன்நின்று பங்காற்ற வேண்டும்.

இன்றைய சூழலில் நாம், நமக்கான முக்கிய பங்களிப்பைச் செலுத்துவதற்கு ஏற்றவகையில் நமது சங்கங்களை வலிமைப் படுத்த வேண்டும்; புதிய பகுதிகளுக்கு விரிவாக்கம் செய்ய வேண்டும்; தொழிற்சங்கக் கல்வியை வழங்க வேண்டும்; தலைவர்கள், செயற்பாட்டாளர்களின் எச்சரிக்கை உணர்வு மட்டத்தை உயர்த்த வேண்டும். இளம் ஊழியர்களையும் பெண்களையும் பயிற்றுவிக்க தனிச்சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

### ஜனவரி 30: தேசிய தொழிலாளர் மாநாடு

மோடி அரசின் தொழிலாளர் விரோத, மக்கள் விரோத, தேச விரோதக் கொள்கைகளை எதிர்த்து நாடு தழுவிய இயக்கத்துக்குத் திட்டமிட,

அனைத்துத் தொழிற்சங்கங்கள் நடத்தும் தேசிய தொழிலாளர் மாநாடு,

தேசத் தந்தை காந்தியடிகள் மதவெறியனால் சுட்டுக் கொல்லப்பட்ட ஜனவரி 30ம் நாளில்

புதுடெல்லியில் நடைபெறும். அது வகுக்கும் செயல்திட்டங்களை முழுமையாக நிறைவேற்றுவது என அகில இந்திய 42வது மாநாடு முடிவு செய்தது.

### வாழ்த்துச் செய்தி அனுப்பிய தொழிற்சங்கங்கள்

- ஜார்ஜ் மாவ்ரிகோஸ் சிறப்புத் தலைவர், உலகத் தொழிற்சங்க சம்மேளனம்
- அகில சீன தொழிற்சங்கக் கூட்டமைப்பு
- வியட்நாம் தொழிற்சங்க மையம்
- பாமே தொழிற்சங்கம், கிரீஸ்
- அகில பாகிஸ்தான் ஐக்கிய தொழிற்சங்கம்
- ஐக்கிய தொழிலாளர் மையம் – அமெரிக்கா (எல்புஏஎல்)
- தேசிய தொழிற்சங்க மகாசம்மேளனம் – ஜப்பான் (ஜென்ரோரின்)
- வங்கதேச தொழிற்சங்கப் பேராயம் (பிடியுசி)
- இலங்கை வங்கி ஊழியர் சங்கம்








சு.தமிழ்ச்செல்வி ராஜா

# வங்கம் தந்த பெண் சிங்கம் கீதா முகர்ஜி



**வெள்ளையர் ஆட்சி நடந்து கொண்டிருந்த காலம், வெள்ளையரால் பாராட்டப்பட்டு பகதூர் என்ற பட்டம் பெற்று ராய் சௌத்ரி பகதூர் என்பவருக்கு ஜனவரி 8 தேதி 1924 ஆம் ஆண்டு பிறந்தார் கீதாராய் சௌத்ரி. இவர் பங்களாதேஷில் உள்ள ஜெஸ்ஸிசில் பள்ளி படிப்பையும், பெங்காலில் உள்ள கல்லூரியில் இலக்கியம் பயின்றும், கொல்கத்தாவில் உள்ள அசுதோஸ் கல்லூரியில் பட்டமும் பெற்றார்.**

படிக்கின்ற பொழுது மாணவர் கூட்டமைப்பில் (BPSF) 1939 ஆம் ஆண்டு சேர்ந்தார். சுதந்திரத்திற்காக போராடியவர்கள் அந்தமான், நிக்கோபார் தீவுகளில் உள்ள சிறைகளில் அடைக்கப்பட்டு வெள்ளையர்களால் சித்திரவதை செய்யப்பட்டதை கண்டித்து வெள்ளையர்களுக்கு எதிரான போராட்டத்தை துவக்கி, எங்கள் நாடு விடுதலை அடைய போராடும் தோழர்களை சிறையில் அடைத்து சித்திரவதை செய்யும் வெள்ளை அரசை தூக்கி எறிவோம், சிறையில் இருப்பவர்களை மீட்டெடுப்போம் என்று முழங்கினார்.அதனால் இவர் வெள்ளைக்கார போலீசின் தடியடிக்கு ஆளானார்.

இவர் 1947 முதல் 1951 வரை மாணவர் கூட்டமைப்பின் செயலாளராக செயல்பட்டார். மார்க்சிய கருத்துகளால் ஈர்க்கப்பட்டு 1942 ஆம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார்.

கம்யூனிஸ்ட் மாணவர் அமைப்பின் தலைவராக செயல்பட்டு வந்த பிஸ்வநாத் முகர்ஜி என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

மேற்கு வங்க மாநிலத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மிட்னாபூர் மாவட்டம் தம்லுக் தொகுதியில் 1967, 1972 ஆம் ஆண்டுகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளராக நின்று வெற்றி பெற்றார். சட்டமன்றத்தில் பெண்கள் ஆளுமை பெறுவதற்கு கல்வி நிலையங்களை அதிகம் அரசு அமைத்திட வேண்டும் என்று முழங்கினார். 1978 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராக பன்ஸ்குரா தொகுதியில் வெற்றி பெற்றார். தொகுதி வளர்ச்சி அடைய முழு கவனத்தையும் செலுத்தி வந்தார்.

இவருடைய மக்கள் பணியாளும், அரசியல் தீவிர செயல்பாட்டாலும் அனைவரையும் கவர்கின்ற வகையில் சமூக சேவைகள் செய்ததால் “சமூக சேவகர்” என்று மக்கள் போற்றினர். 1978 ஆம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய குழு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய 17 வது மாநாட்டில் கட்சியின் தேசிய செயலாளர்களில் ஒருவராக, முதல் பெண் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தொழிலாளர்களின் பிரச்சினையை கையில் எடுத்துப் போராடிய அதே நேரத்தில் பாலின பிரச்சனைகளில் வலுவான நிலைப்பாட்டினை எடுத்தார்.

இந்திய மாதர் தேசிய சம்மேளத்தின் பொதுச்செயலாளராக இருந்த அமர்ஜித் கௌவுர் கூறுகையில், கீதா முகர்ஜி வரதட்சனை கொடுமையில் இருந்து பெண்களை மீட்டெடுக்கவும், பொது இடங்களில் தைரியமாக எதிர்த்துப் பேசும் வலிமைமிக்க போராளி என்று கூறினார்.

இவரை 1986 ஆம் ஆண்டு மத்திய அரசு கிராமப்புற தொழிலாளர்களுக்கான தேசிய ஆணையத்தின் உறுப்பினராக இவரை தேர்வு செய்தது.

1988 ஆம் ஆண்டு தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினர்களில் ஒருவராக தேர்வு செய்தது. இதனால் வெகுஜன அமைப்புகளில் ஏற்படும் பிரச்சனைகளை தடுத்து முன்னேறுவதற்கான திட்டத்தை உருவாக்கி, ஆணையங்களில் வலுவாக பேசி வந்தார்.

சட்டமன்றம் நாடாளுமன்றங்களில் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு செய்யும் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று குரல் கொடுத்தார்.

இவர் கோரிக்கையை அப்போது இருந்த மத்திய அரசு ஏற்றுக்கொண்டு, உறுப்பினர்களின் ஆதரவை கேட்பது மக்கள் அவையிலும், மாநிலங்கள் அவையிலும் எதிர்ப்புகள் இருந்ததால், கூட்டு பொறுப்புக் குழு அமைத்து, பொதுமக்கள் மத்தியிலும், உறுப்பினர்கள் மத்தியிலும் கருத்து கேட்டு பகுத்தாய்வு செய்து, அந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் பின் முடிவெடுத்தால் சிறப்பாக அமையும் என்று வாதிட்டார்.

அரசு கீதாவின் கருத்தை ஏற்றுக் கொண்டு காலக்கெடு எதுவும் குறிப்பிடாமல் பொறுப்புக் குழு அமைக்கப்படும் என்று அறிவித்தது.

கராறான காலத்தை நிர்ணயத்தை அரசு அறிவிக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் பிரச்சனையை எழுப்பினார். அரசு அவருடைய கோரிக்கையை ஏற்று கால நிர்ணயம் செய்து, அந்த அமைப்பிற்கு கீதாமுகர்ஜியையே தலைவராக அறிவித்தது.

பொறுப்பு குழுவின் தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட தேசிய கட்சிகள், மாநில கட்சிகள் சமூக சேவை அமைப்புகள், (தொண்டு நிறுவனம்) தனித்தனியாக செயல்பட்ட பெண்கள் அமைப்புகள், மலைவாழ் மக்கள், கிராமப்புறத்தில் வாழும் பெண்கள், அரசு பணியில் இருக்கும் பெண்கள், ஆகியோர்களை நேரில் சந்திக்க இந்தியா முழுவதும் சென்று பெரும்பகுதியான ஆதரவினை திரட்டி 33 சதவீத இட ஒதுக்கீடுக்கான சிறந்த அறிக்கையை தயாரித்து நாடாளுமன்றத்தின் முன் வைத்தார்.

மக்களவையிலும், மாநிலங்கள் அவையிலும் மிகச்சிறந்த ஆய்வறிக்கை என்று போற்றினார்கள்.

ஆனால் இன்று வரை அறிக்கை அறிக்கையாகவே இருக்கிறது பெண்களுக்கு எதிரான முட்டுக்கட்டை தொடர்கிறது. இதனால் மனமுடைந்த நிலையில் கீதா முகர்ஜி இருந்தார்.

பீகார் மாநிலத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியை (NDA) ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்கப்பட்டது.இதை கடுமையாக எதிர்த்து சபையில் உள்ள இருக்கையிலிருந்து எழுந்து தரையில் அமர்ந்து கடும் எதிர்ப்பை தெரிவித்தார். இந்த நடவடிக்கை ஜனநாயக படுகொலை என்றும், இது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கண்டனம் என்றும் முழங்கினார். இந்த பிரச்சனைகளை மேலும் அதிகரிக்க குஜராத் ஆர்.எஸ்.எஸ். ஊழியர்களை அழைத்து கலவரத்தை ஏற்படுத்துவது என்று திட்டமிட்டு இருந்ததை முறியடித்தார் கீதா முகர்ஜி.

கீதா முகர்ஜி சிறந்த பேச்சாளர், மிகச்சிறந்த எழுத்தாளர், அவர் குழந்தைகளுக்காக பல புத்தகங்களை எழுதி இருக்கிறார்.

“பாரத் உபகத்” என்கின்ற தலைப்பில் எழுதப்பட்ட புத்தகம் இந்திய நாட்டுப்புற கதைகளை கொண்டது. ரவீந்திரநாத் தாகூர் மீது அளவுகடந்த பற்று கொண்டவர் சோபோர்டர் ரவீந்திரநாத் என்கின்ற புத்தகத்தையும் எழுதியுள்ளார். சில புத்தகங்களை மொழிபெயர்த்து உள்ளார்.

கீதா முகர்ஜி மார்ச் 3ஆம் தேதி 2000 ஆம் ஆண்டு அன்று திடீர் மாரடைப்பாள் தனது செயல்பாட்டை நிறுத்திக் கொண்டார். அவருடைய இறுதி நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் கலந்துகொண்டு இரங்கல் உரை நிகழ்த்திய போது,

“கீதா முகர்ஜி பெண்களின் இதயத்துடிப்பு, கருணையும், உணர்ச்சியும் உடைய அரசியல் ஆர்வலர், அவருடைய இழப்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு மட்டும் அல்ல, இந்திய நாட்டில் வாழும் பெண்கள் மற்றும் பிற ஜனநாயக இயக்கங்களிலும் ஒரு பெரும் வெற்றிடத்தை விட்டுச் சென்றுள்ளார்.

**அவருடைய சிந்தனையில் ஒன்றுதான் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு என்று இட ஒதுக்கீடு செய்யும் சட்டத்தை நிறைவேற்றுவது என்பது, அவர் போராடி போராடி அவர் முன்வைத்த கோரிக்கை கானல் நீராக சென்றது”**

என்று கூறி கண் கலங்கினார்.

நாம் ‘நமது அமைப்பின் சார்பில் ஜனநாயக சக்திகளை ஒன்றிணைத்து அவரால் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிற பெண்களுக்கான இட ஒதுக்கீடை சம்பந்தமான அறிக்கையை அமுல்படுத்த, நாடு முழுவதும் கிளர்ச்சியை ஏற்படுத்தி, பெண்களுக்கான இட ஒதுக்கீடு சட்டத்தை நிறைவேற்றுவதாக இருக்க வேண்டும்

தொடர்புக்கு: 86106 21238

## என்எல்சியில் தீ விபத்து தொழிலாளர் சாவு, பலர் காயம் அரசு தலையிட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

நெய்வேலியில் இயங்கி வரும் என்எல்சி நிர்வாகத்தின் இரண்டாவது பிரிவு சுரங்கத்தில் டிச.23 அன்று பிற்பகலில் ஏற்பட்ட விபத்தில் தொழிலாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுத்துறை நிறுவனமான என்.எல்.சி. லாபம் ஈட்டி வரும் “நவரத்னா” தகுதி பெற்ற நிறுவனமாகும். இங்கு நிரந்தரத் தொழிலாளர்களும், ஒப்பந்தத் தொழிலாளர்களுமாக ஆயிரக்கணக்கானோர் வேலை செய்து வருகின்றனர். ஆனால், என்.எல்.சி. நிறுவனம் விபத்துத் தடுப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை முறையாக செய்யாமல் அலட்சியம் காட்டி வருகிறது.

கடந்த இரண்டாண்டுகளில் நடந்து வரும் தொடர் விபத்துக்களையும், இருபதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உயிரிழந்திருப்பதும் மிகப் பெரும் குற்றச் செயலாகும். இதற்கு பொறுப்பான அதிகாரிகள் மீது உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், உயிரிழந்துள்ள தொழிலாளர் குடும்பங்களின் மறுவாழ்வுக்கு ஒரு கோடி ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இதனை என்.எல்.சி. நிர்வாகத்தில் இருந்து பெற்றுத் தருவதுடன், காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் தொழிலாளர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளும், அவர்களது குடும்பங்களின் மறுவாழ்வும் உறுதிப்படுத்த வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு ஒன்றிய அரசையும், என்எல்சி நிர்வாகத்தையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
30.11.1932

மறைவு
06.01.2022

தோழர் ம.அ. அண்ணாமலை

நீங்கள் நினைவுகளை நிறுத்திக் கொண்ட போதிலும்
என்றும் நீங்கா நினைவுகளுடன்

மகன்கள், மருமகள்கள், பேரன், பேத்திகள்
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
மருதூர் (ராமநாதபுரம் கிளை) கோயமுத்தூர்.

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 98வது அமைப்பு தினமும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் இரா.நல்லகண்ணுவின் 98வது பிறந்த நாள் விழாவும் சென்னையில் டிச.26 அன்று கொண்டாடப்பட்டது. இதோடு கே.டி.கே.தங்கமணி நினைவு நாளும் கடைபிடிக்கப்பட்டது.**

# பாசிச ஆட்சிக்கு முடிவு

## இரா.நல்லகண்ணு பிறந்தநாள் விழாவில்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, இரா. நல்லகண்ணுவை தொடர்பு கொண்டு நீண்ட ஆரோக்கியத்தோடு வாழ இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களும் கட்சியின் அமைப்பு தின வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

**மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின்**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகமான பாலன் இல்லத்தில் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

அவர் பேசியபோது, "ஒவ்வோர் ஆண்டும் தலைசிறந்த பெருமக்களைத் தேர்வுசெய்து தமிழக அரசின் சார்பில் 'தகைசால் தமிழர்' விருது வழங்கப்படுகிறது. முதல் ஆண்டில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சின் மூத்த தலைவர் என்.சங்கரய்யாவுக்கு 'தகைசால் தமிழர்' விருது வழங்கப்பட்டது. இரண்டாவதாக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா. நல்லகண்ணுவுக்கு இந்த விருது வழங்கப்பட்டது. இவர்கள் இருவருக்கும் தகைசால் தமிழர் விருதை வழங்கியதன் மூலம், இந்த விருதுக்கு பெருமை சேர்ந்திருக்கிறது"

"98 வயதிலும் கொள்கையிலிருந்து நழுவாமல், கொள்கைக்கும், லட்சியத்துக்கும் இலக்கணமாகத் திகழ்ந்துகொண்டிருக்கும் நல்லகண்ணு அவர்களை தமிழக அரசின் சார்பிலும், தி.மு.க சார்பிலும் வாழ்த்தி வணங்குகிறேன். பாசிச பா.ஜ.க ஆட்சிக்கு முடிவுகட்ட நாம் முடிவெடுத்திருக்கிறோம்.

அதற்கு நல்ல வழிகாட்டியாக நல்லகண்ணு விளங்குகிறார். பா.ஜ.க அரசை அகற்றுவதற்கு தொடர்ந்து நீங்கள் வழிகாட்ட வேண்டும். தமிழ்நாட்டில் உங்களால் உருவாக்கப்பட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி அரசுக்கு நீங்கள் பக்கபலமாகவும், உறுதுணையாகவும் இருந்து, தொடர்ந்து வழிகாட்ட வேண்டும்" என்றார் முதல்வர் ஸ்டாலின்.

**மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன்**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தலைமை உரையில், தமிழ்நாட்டின் ஆளுநர் அரசியல் சட்டத்திற்கு விரோதமாக செயல்படுகிறார். மதச்சார்பின்மை கொள்கைக்கு விரோதமாக பேசுகிறார். உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் திருக்குறளை ஒரு சமய நூல் என கூறி, சிமிழுக்குள் அடைக்க முயல்கிறார். காரல் மார்க்சால் இந்தியா கெட்டுப்போனது என அறிவிக்கிறார்.

அதே போல்தான் தமிழக சட்டப்பேரவை தமிழக மக்களால் தேர்வு செய்யப்பட்டவர்கள் கூடியுள்ள அவை. அந்த அவை நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்கள் அனைத்தும் ஆளுநர் மாளிகையில் கிடப்பில் போட்டுள்ளது. குறிப்பாக சொல்வதானால் நீட் நுழைவுத் தேர்வால் அனிதா தொடங்கி பல பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதேபோல் ஆன்லைன் சூதாட்டத்தால் 50க்கும் மேற்பட்டோர் தற்கொலை செய்து கொண்டு மடிந்து போனார்கள். அதற்கு தடை விதிக்க வேண்டும் என அவசர சட்டத்தில் கையெழுத்து போட்ட ஆளுநர், அதை நிரந்தர சட்டமாக்க பேரவையில் மசோதா நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. அது குறித்து இது வரை எந்தவித பதிலும் இல்லாமல் கிடப்பில் கிடக்கிறது.

ஆகவே, இப்படிப்பட்ட ஆளுநரை நியமித்த மோடி அரசு, அவரை திரும்பப் பெற வேண்டுமென்பதை வலியுறுத்தி வருகிற 29ஆம் தேதி ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டம் நடைபெற உள்ளது. அந்த சமயத்தில் கடும் மழை பொழியும் என்று சொல்கிறார்கள். மழை வந்தாலும் சரி, புயல் வந்தாலும் சரி, இடி இடித்தாலும் சரி ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டம் 29ஆம் தேதி திட்டமிட்டபடி நடைபெறும்.

பல்லாயிரக்கணக்கான தோழர்கள் ஆண்களும், பெண்களும், இளைஞர்களும், மாணவர்களும், தாய்மார்களும் பெருமளவில் அந்த போராட்டத்தில் பங்கேற்க வேண்டுகிறேன் என வைகோ பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ, "தியாகம், தன்னலமற்ற உழைப்பு, அடக்குமுறைக்கு அஞ்சாத தீரம் ஆகியவற்றின் மறுபெயர்தான் நல்லகண்ணு. இந்த நாளில்தான், 97 ஆண்டுகளுக்கு முன்பு தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஒரு கிராமத்தில் நல்லகண்ணு பிறந்தார். இதே நாளில்தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்டது. இதே நாளில்தான், சீனப் புரட்சியாளர் மாவோ பிறந்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான கே.டி.கே.தங்கமணியின் நினைவுநாளும் இன்றுதான்" என்று வைகோ குறிப்பிட்டார்.

**ஜி.ராமகிருஷ்ணன்**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினரான ஜி.ராமகிருஷ்ணன், "இன்றைக்கு நம்முடன் வாழ்ந்துகொண்டிருக்கும் பெருமைக்குரிய தலைவர்களான என்.சங்கரய்யா, இரா. நல்லகண்ணு ஆகியோர் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக களம்கண்டு, எண்ணற்ற தியாகங்களைச் செய்தவர்கள். 'இவர்கள் உள்ளிட்ட கம்யூனிஸ்ட் தலைவர்கள்தான். அந்நியர் ஆட்சி அகற்றப்பட்டால் மட்டும் போதாது. பொருளாதார சுதந்திரம் கிடைக்க வேண்டும்' என்கிற முழக்கத்தை முதன்முதலாக முன்வைத்தனர்.

சுதந்திரப்போராட்ட காலத்தில், எப்படிப்பட்ட இந்தியா அமைய வேண்டும் என்ற கருத்துக்களை நல்லகண்ணு உள்ளிட்ட தலைவர்களைக் கொண்ட கம்யூனிச இயக்கம் முன்வைத்தது. மதச்சார்பின்மை, ஜனநாயகம், கூட்டாட்சி, சுயசார்பு பொருளாதாரம் ஆகிய விழுமியங்களுடன் அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது. அந்த விழுமியங்களை, மத்தியில் இருக்கும் மோடி தலைமையிலான அரசு தகர்த்துவருகிறது. ஆகவே, அந்த ஆட்சியை அகற்ற வேண்டும். இந்துத்துவாவை வீழ்த்த வேண்டும். அதற்கு, நல்லகண்ணு தொடர்ந்து பங்காற்ற வேண்டும்" என்றார் ஜி.ராமகிருஷ்ணன்.

**இரா.நல்லகண்ணு**

இறுதியில் நன்றி தெரிவித்து இரா. நல்லகண்ணு பேசியதாவது, "முதல்வருக்கு என் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர்கள் ஏ.வ.வேலு, பொன்முடி, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்டோருக்கு என் நன்றிகள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் துவக்க நாளை கொண்டாடும் வகையிலும் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. எனக்கு நேரில் வந்து வாழ்த்து தெரிவித்த அனைவருக்கும் நன்றி. பரிபூரண சுதந்திரம் என்பது குறித்து முதலில் பேசிய பெருமை கம்யூனிஸ்ட் இயக்கத்தை சேரும். சுதந்திரம் பெற்ற இந்த நாட்டை பாதுகாக்க வேண்டும் என்றால் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் இருக்க வேண்டும். போராடி பெற்ற இந்த சுதந்திரத்தை மத்திய அரசு மதத்தை வைத்து சீர்குலைக்க முயற்சிக்கிறார்கள், அதை



எதிர்த்து ஒன்றுபட்டு போராட வேண்டும். மத வெறி கொண்ட சக்திகள் ஆட்சிக்கு வந்து விடக் கூடாது". என்று பேசினார்.

இந்த விழாவில், தமிழக அமைச்சர்கள் க.பொன்முடி, எ.வ.வேலு மற்றும் டி.ஆர். பாலு எம்.பி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் ஊடகப்பிரிவு தலைவர் கோபண்ணா, திருப்பூர் முத்துராமலிங்கம், வி.சி.க. வன்னி அரசு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் சி.மகேந்திரன், மு.வீரபாண்டியன், வஹிதா நிஜாம், விக்கி மகேஷரி, டாக்டர் சாந்தி, டி.லெனின், சீ.தினேஷ், மத்திய சென்னை பா.கருணாநிதி, வடசென்னை வெங்கடேஷ் வேம்புலி, தென் சென்னை எஸ்.கே. சிவா, லி.உதயக்குமார், ஏ.எஸ்.கண்ணன் எக்ஸ்.எம்.எல்.ஏ., மத்திய சென்னை பி.மாரியப்பன், ரஞ்சித், மு.வரதன், பச்சைத் தமிழகம் ய.அருள், ஓவியர் மருது, அரங்க மல்லிகா, பூச்சி முருகன், ம.தி.மு.கவின் துணைப்பொதுச்செயலாளர் மல்லை சத்யா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர்கள் கனகராஜ், சாமுவேல்ராஜ், தொழிலதிபர் வி.ஜி.சந்தோஷம் உள்பட பலர் பங்கேற்று வாழ்த்தினர்.

**டாக்டர் ராமதாஸ்**

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்ட வாழ்த்து செய்தியில், 'இந்திய விடுதலை போராட்ட வீரரும், பொதுவுடைமை இயக்கத்தின் மூத்த தலைவருமான நல்லக்கண்ணுவின் 98வது பிறந்தநாளில் அவர் நல்ல உடல்நலத்துடன் நீடுழி வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்' என கூறியுள்ளார்.

**கனிமொழி**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "சமூகத் தொண்டை வாழ்வாகக் கொண்டவர்; பொதுவுடைமை சித்தாந்தத்தின் சிகரம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் அய்யா நல்லகண்ணு அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள். நல்ல உடல்நலத்துடன் இன்னும் ஆண்டுகள் பல அவரது சமூகப் பணி தொடர விழைகிறேன்" என்று கூறியுள்ளார்.

**டி.டி.வி.தினகரன்**

அமமுக பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், தமிழ்நாட்டின் மூத்த அரசியல் தலைவரும், இந்திய பொதுவுடைமை கட்சியின் மூத்த தலைவருமான பெரியவர் ஆர்.நல்லக்கண்ணு அவர்களுக்கு இதயம் கனிந்த பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறந்த உடல் நலத்துடனும், மகிழ்ச்சியுடனும் இன்னும் பல ஆண்டுகள் அவர் மக்கள் பணியாற்றிட இறைவனிடம் வேண்டுகிறேன் என கூறியுள்ளார்.

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் ஆகியோர் தொலைபேசியில் வாழ்த்து கூறினர். சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், வி.ஜி.பி. குழுமத்தின் தலைவர் வி.ஜி.சந்தோஷம், அறந்தாங்கி தொகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏ ராமச்சந்திரன் ஆகியோர் நல்லகண்ணு இல்லத்துக்கு சென்று அவருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

தமிழக காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திருநாவுக்கரசர் எம்.பி. யும் வாழ்த்து செய்தி வெளியிட்டுள்ளார்.

**மாவட்டங்கள்**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 88வது அமைப்பு தினம், தோழர் கே.டி.கே. தங்கமணி நினைவு தினம், தோழர் இரா. நல்லகண்ணுவின் பிறந்த தினம் தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டது.

**சத்தியமங்கலம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 98ஆம் ஆண்டு அமைப்பு தினத்தை முன்னிட்டு, சத்தியமங்கலத்தில் நடைபெற்ற சிறப்புக் கருத்தரங்கில் மாநில கட்டுப்பாட்டுக்குழுத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி. சிறப்புரை ஆற்றினார்.

**விருதுநகர்:** வத்திராயிருப்பில் பேரூராட்சி தலைவர் தலைமையில் தேசியகுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ கொடியை ஏற்றி வைத்தார். வட்ட செயலாளர் கோவிந்தன், நகர செயலாளர் காளீஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். தளவாய்புரத்தில் ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி தலைமையில் மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ்.எம்.பி. ஏற்றி வைத்தார். இளைஞர்மன்ற மாவட்ட பொருளாளர் வழக்கறிஞர் பகத்சிங், தவிதொச மாவட்ட செயலாளர் வரதராஜன், தவிச அப்பணன் உள்பட பலர் கலந்து கெ

# கட்ட வழிகாட்டுங்கள்!

## ல் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை



ாண்டனர்.

**சாத்தூரில்** வட்ட செயலாளர் சாமிநாதன் தலைமை வகித்தார். மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், வட்ட துணை செயலாளர் பாண்டி, தவிதொச சகாதேவன், இளைஞர்மன்ற சரவணகுமார் எஸ்.எஸ்.முத்து, முத்துவைரம் உள்பட பலர் கலந்து கொண்டனர். விருதுநகரில் ஒன்றிய செயலாளர் சக்கணன் தலைமை வகித்தார். தஒவாஇ மாநில குழு உறுப்பினர் முருகேசன் கொடியை ஏற்றி வத்தார். ஏஜடியுசி மூர்த்தி, காளியப்பன் உள்பட பலர் கலந்து கொண்டனர். இராஜபாளையம் இராமலிங்காபுரத்தில் ஒன்றிய செயலாளர் இராமச்சந்திரன் தலைமை வகித்தார். ஏஜடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி கொடியை ஏற்றி வைத்தார். இளைஞர்பெருமன்ற மோகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**தென்காசி**: தென்காசி மாவட்ட குழு சார்பில் மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை தலைமையில் கருத்தரங்க கூட்டம் நடைபெற்றது.

மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம், ஏஜடியுசியின் மாநில தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

மேலும் ஜனசக்தி காலண்டர் விற்பனையை க.சந்தானம் தொடங்கி வைத்தார். கூட்டத்தில் மாவட்ட நிர்வாக குழு, மாவட்ட குழு மற்றும் அனைத்து ஒன்றிய குழு தோழர்களும் பங்கேற்றனர்.

சிவகிரியில் நடைபெற்ற நிகழ்வுக்கு நகர செயலாளர் பி.பாலசுப்பிரமணியன் தலைமை தாங்கினார். கூட்டுறவு பண்டகசாலை தலைவர் வி. ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். க. குருவு, க.பு.பால்சாமி, வேலுச்சாமி, நவீன், ஜோதி ராமலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கரூர்**: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இனாம் கரூர் நகரகுழு சார்பாக தெருமுனைக்கூட்டம் நடைபெற்றது. நகர செயலாளர் எம்.லட்சுமி காந்தன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் கே.என். நாட்ராயன், மாவட்ட துணை செயலாளர்கள் கே.சண்முகம், எஸ்.மோகன் குமார், மாவட்ட பொருளாளர் ஆர்.ராஜேந்திரன், ஏஜடியூசி மாவட்ட செயலாளர் ஜி.பி.எஸ். வடிவேல், த.ஒ.வா.இ. மாவட்ட செயலாளர் பி.பாலன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**தருமபுரி**: பென்னாகரம் நான்கு ரோட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு நகர செயலாளர் விஜயபாரதி தலைமை வகித்தார். மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எம்.கோபால் கட்சி கொடி ஏற்றி வைத்தார். மாவட்ட பொருளாளர் சி.மாதையன் மற்றும் நாகராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பென்னாகரம் தாலுகா அலுவலகம் முன்பு நடந்த நிகழ்ச்சியில் நகர செயலாளர் பாரதி தலைமை வகித்தார். மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கோபால் முன்னிலை வகித்தார். மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம் கொடி ஏற்றி இனிப்புகளை வழங்கினார். மேலும் ஜனசக்தி காலண்டர் மற்றும் ஜனசக்தி சிறப்பிதழ் விற்பனையை மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எம்.கோபால் தொடங்கி வைத்தார்.

நல்லம்பள்ளி வட்டாரம் வெங்கட்டம்பட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வட்டார செயலாளர் ப.பிரசாத் தலைமை வகித்தார். நவீன்குமார் கட்சி கொடியேற்றினார்.

இலளிகம் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வட்டாரக்குழு உறுப்பினர் பொன்னியப்பன் தலைமை வகித்தார். மாவட்ட குழு உறுப்பினர் கிருஷ்ணராஜ் கட்சி கொடி ஏற்றினார். மாவட்ட குழு உறுப்பினர்கள் மாதம்மாள்,சித்துராஜ், வட்டாரக்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அரூரில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.சிற்றரசு தலைமை வகித்தார்.இதில் மாவட்ட துணை செயலாளர் கா.சி.தமிழ்குமரன் கட்சி கொடி ஏற்றி வைத்தார். இதில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் அல்லிமுத்து, ஏஜடியூசி மாவட்ட தலைவர் பா.முருகன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் செங்கொடி, கே.டி.ராஜி, இரவீந்திரபாரதி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

பாப்பாரப்பட்டி வட்டாரம் கொட்டுமாரம்ப ட்டியில் நடந்த நிகழ்ச்சியில் ராஜி தலைமை வகித்தார். பாலகிருஷ்ணன் கொடி ஏற்றி வைத்தார். சின்னபெரமனூரில் சிவன் கொடி ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஏஜடியூசி மாநில துணைத்தலைவர் கே.மணி, மாவட்ட துணைத்தலைவர் சுதர்சனன், மாவட்ட துணை செயலாளர் முருகேசன், உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்ட தலைவர் மனோகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மேலும் ஜீவாநகர், தண்டுகாரன அள்ளி, அம்மன்நகர், சங்கிலிநத்தம் உள்பட பல்வேறு இடங்களில் மாவட்டக்குழு உறுப்பினர் எம்.வி.குழந்தைவேலு கட்சி கொடி ஏற்றினார்.இந்நிகழ்ச்சியில் நிர்வாகிகள் ராஜா,செல்வம், சண்முகம் கலந்து கொண்டனர்.

**கள்ளக்குறிச்சி**: திருநாவலூர் ஒன்றியத்தில் அனைத்து கிளைகளிலும் கொடியேற்றப்பட்டது.

உளுந்தூர்பேட்டையில் நகரச் செயலாளர் நந்தகோபால் தலைமையிலும், கூட்டடி கிராமத்தில் மணிகண்டன், சிறந்த நாடு கிராமத்தில் ராதாகிருஷ்ணன், சேந்தமங்கலம் கிராமத்தில் விஜயராகவன், தொப்பியாங்குளத்தில் கல்யாணசுந்தரம், திருநாவலூரில் கே.மணிகண்டன், கெடிலத்தில் கே. ஆறுமுகம், ஒரத்தூரில் வேலு, கொரட்டூரில் மணி, கொரட்டூர் கிழக்கில் வெங்கடேசன் ஆகியோர் தலைமையில் கொடிகள் ஏற்றப்பட்டு இனிப்புகள் வழங்கப்பட்டன.

மாவட்ட செயலாளர் த.ஒ.வா.இ எம்.வெங்கடேசன், நிர்வாகிகள் நாகப்பன், ரவி, ஏழுமலை, தனபால், உள்ளிட்ட நிர்வாகிகள் மோட்டார் வாகனத்தில் கொடிகளுடன் ஊர்வலம் சென்று கொடியேற்றப்பட்டது.

**திருச்சி மாநகர்**: திருச்சி மாநகர் மாவட்ட கட்சி அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா தலைமையில், கட்சி கொடியினை தேசிய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் ஏற்றி வைத்தார். கே.டி.கே தங்கமணியின் படத்திற்கு விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் பி.கணேசன் மலர்தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் ஏஜடியுசி மாவட்ட பொது செயலாளர் க. சுரேஷ் கலந்து கொண்டு பேசினார்கள். இடைக்குழு, பகுதி குழு செயலாளர்கள், மாவட்ட குழு உறுப்பினர்கள், வெகுஜன அமைப்பின் செயலாளர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட துணை செயலாளர் சி.செல்வகுமார் நன்றி கூறினார். இதேபோல் 41 இடங்களில் கொடியேற்றப்பட்டது.

**செங்கல்பட்டு**: மறைமலைநகர் அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார் தலைமையில் கட்சி கொடி யினை மாநில நிர்வாக குழு உறுப்பினர் டாக்டர் இரவீந்திரநாத் ஏற்றினார். கட்சி நினைவு ஸ்தூபிக்கு மாநில குழு உறுப்பினர் மற்றும் ஜனசக்தி மேலாளர் இளசை.கணேசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்பு இன்றைய நெருக்கடிக்கு தீர்வு சோசலிசமே என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் கட்சி முன்னாள் மாவட்ட செயலாளர் எல்.மேகநாதன், மாவட்ட துணை செயலாளர் வி.வீராசாமி, மாவட்ட பொருளாளர் வி.சதீஷ் மற்றும் மாவட் குழு உறுப்பினர்கள் தொகுதி குழு செயலாளர்கள் கிளை செயலாளர்கள் பங்கேற்றனர்.

**தஞ்சாவூர்**: கீழ ராஜ வீதியில் உள்ள கட்சி அலுவலகத்தில் மாநகர செயலாளர் ஆர்.பிரபாகர் தலைமையில் மூத்த தலைவர் ஜி.கிருஷ்ணன் கொடியினை ஏற்றி வைத்து சிறப்பித்தார். மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வெ.சேவையா, மாநகர குழு உறுப்பினர்கள் பி.செல்வம், எஸ்.தியாகராஜன் நாடிமுத்து உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஒரத்தநாடு தாலுகா ஆம்பலாப்பட்டு தெற்கு மையத்தில் சு.முருகானந்தம் தலைமையில், பாலகங்காதரன் கொடியேற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் கோ.சக்திவேல், ஒன்றிய செயலாளர் வாசு.இளையராஜா மற்றும் அய்யாகண்ணு, எஸ்.ஏ.எம்.ஹோசிமின், சி.ராமலிங்கம், வீ.கல்யாணசுந்தரம், சண்முகம், ரா.தர்மராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் தஞ்சாவூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி, அதிராம்பட்டினம், மதுக்கூர் உள்ளிட்ட ஒன்றியங்கள், நகரங்கள், கிராமங்களிலும் கட்சி துவக்க நாள் கொடியேற்றி கொண்டாடப்பட்டது.

கும்பகோணம் அரசு போக்குவரத்து சங்கம் சார்பில் தஞ்சாவூர் சங்க மாவட்ட அலுவலகத்தில் கே.டி.கே தங்கமணி நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது.

ஏஜடியூசி மாநில செயலாளர் ஆர்.தில்லைவனம் தலைமை வகித்தார். மாநில செயலாளர் சி.சந்திரகுமார் தங்கமணி திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி, அவரது வாழ்க்கை குறித்து உரையாற்றினார். கும்பகோணம் அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்க தலைவர் என்.சேகர், பொதுச் செயலாளர் எஸ்.தாமரைச்செல்வன், பொருளாளர் சி.ராஜமன்னன் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

**மயிலாடுதுறை**: அனைத்து கிளைகளிலும் கொடி ஏற்றி சிறப்பு மலர் விற்பனை இயக்கம் தொடங்கப்பட்டது. கட்சியின் மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன் சீர்காழி யில் கலந்து கொண்டார். இதில் வி.ச.மாவட்ட செயலாளர் பெ.வீரராஜ், ஏஜடியூசி மாவட்ட செயலாளர் கே.ராமன், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் மா.பிரபாகரன், வி.ச.ஒன்றிய செயலாளர் கே.வரதராஜன், மாவட்ட குழு உறுப்பினர் ப.ஜெயகுமார் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**நெல்லை**: மாவட்ட அலுவலகம் பாலன் இல்லம் முன்பு கட்சிக் கொடியை மாவட்டச் செயலாளர் செ. லட்சுமணன் ஏற்றி வைத்தார். மாவட்ட துணைச் செயலாளர் கே.முத்துகிருஷ்ணன், மாநில ஏஜடியுசி துணைத் தலைவர் ஆர்.சடையப்பன், மாவட்ட குழு உறுப்பினர்கள் ஆர்.ரங்கன், ஏ. முத்துகிருஷ்ணன், கே.எஸ்.பாலு, எம்.எஸ். பாலகிருஷ்ணன், பொ. கிருஷ்ணன், பி. பரமசிவன் மற்றும் திரளான தோழர்கள் கலந்து கொண்டனர்.

நெல்லை மாவட்டத்தில் வி.கே.புரம், களக்காடு, ராதாபுரம், நாங்குநேரி உட்பட அனைத்து ஒன்றியங்களிலும் கட்சி கொடியேற்று விழா நடைபெற்றது.

**அரியலூர்**: அரியலூரில் அண்ணாசிலை அருகில் கட்சி கொடியை மாவட்டக் குழு உறுப்பினர் த.தண்டபாணி ஏற்றி வைத்தார்.

கட்சி அலுவலகம் முன்பு சிபிஐ கொடியை மாவட்ட செயலாளர் சி.ராமநாதன் ஏற்றி வைத்தார். ஏஜடியூசி கொடியை பொதுச் செயலாளர் டி.தண்டபாணி ஏற்றி வைத்தார். கயர்லாபாத், நாகமங்கலம் கிளைகளில் கொடியேற்றப்பட்டது.

**செங்கோட்டை**: செங்கோட்டை தேன்பொத்தை, புளியரை, பகுதியில் கட்சி கொடி ஏற்றி, கே.டி.கே. தங்கமணி நினைவு நாள் கடைபிடிக்கப்பட்டது. எஸ். மாரியப்பன், பி. எஸ். எஸ். போஸ், கே. பழனிச்சாமி, சி. சுப்பிரமணியன், எஸ். சுந்தர். செல்லையா, திருமலையம்மாள் ஆகியோர் கலந்து கொண்டனர்!

ஆயிரப்பேரி இடைகமிட்டியில் கோவிந்தன் கொடி ஏற்றினார். ஜனசக்தி, காலண்டர், எம். எஸ். கிட்டப்பா வழங்கினார். லெஷ்மணன், துரைராஜ், முருகேசன், செண்பகம் ஆகியோர் கலந்து கொண்டனர்!

ஆம்பூர், ஆழ்வாகுறிச்சி, பாப்பாக்குடி, இடைக்கமிட்டிகளில் கட்சி கொடி ஏற்கப்பட்டது! மாவட்ட து. செயலாளர், எஸ். வேலாயுதம், பி. பரமசிவம், மாவட்ட நிர்வாக குழு சீ.அரிகரன், எம்.சுச்சு, பால் துரை, எஸ்.சமுத்திரம் ஆகியோர் கலந்து கொண்டனர்!

தொடர்ச்சி 10ம் பக்கம்

9ம் பக்கத் தொடர்ச்சி

புளியங்குடியில் மாவட்ட பொருளாளர் டி. சுப்பையா தலைமையில் நகராட்சி கவுன்சிலர் எஸ். பாக்கியம் கொடி ஏற்றினார்.

**குமரி:** மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் தா. சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கட்சி கொடியை மூத்த தோழர் காருபாறை எஸ்.மோகன் தாஸ் ஏற்றி வைத்தார். ஜனசக்தி சிறப்பு மலரை மூத்த தோழர் மரிய தாஸ் வெளியிட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட, குழு உறுப்பினர் தக்கலை ராஜு பெற்றுக் கொண்டார்.

மாநகரச் செயலாளர் ஆர்.இசக்கிமுத்து, மாநகரப் பொருளாளர் கே .நாகராஜன், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட பொருளாளர் ந. நாகராஜன், அனைத்திந்திய முற்போக்கு பேரவை மாநில துணைத்தலைவர் எஸ்.சுந்தரம், தினகரன், எல்.சுப்பிரமணியம், குமரி மாவட்ட விவசாய சங்க செயலாளர் அண்ணாதுரை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் எஸ். நாராயணசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**தென் சென்னை:** மாவட்டக் கட்சி அலுவலகத்தில், திருவான்மியூர் சி.சீனிவாசன் தலைமையில், மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா கட்சிக் கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். கட்சி மாவட்டக் குழு உறுப்பினர்கள் எம்.டி.குமார், ஜி.கண்ணதாசன், மாதர் சம்மேளனத்தின் மாவட்டத் தலைவர் கே.சரோஜா உள்ளிட்ட மாதர் சம்மேளனம், கட்டிடத் தொழிலாளர் சங்கம், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் தோழர்கள் கலந்து கொண்டனர். கோவிந்தராஜன் வரவேற்க க.மாணிக்கம் நன்றி நவின்றார்.

**காஞ்சிபுரம்:** 33 வது வார்டு கிளை செயலாளர் எம்.காவேரி கொடியேற்றி வைத்தார், 51 வது வார்டு கிளைச் செயலாளர் எம்.ஜானகிராமன். 49 வது வார்டு ஆர்.கோபி கிளை செயலாளர், துணை செயலாளர் டி.என்.ஆனந்தன் மற்றும் வசந்தி, சிபிஐ காஞ்சிபுரம் மாவட்ட பொருளாளர் என் தங்கராஜ், ஏஐடியுசி காஞ்சிபுரம் மாவட்ட பொதுச் செயலாளர் ஏ.மூர்த்தி மற்றும் கைத்தறி சங்க துணைத் தலைவர் எஸ்.சி.ரவி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

செவிலிமேடு கிளை சார்பில் எஸ்.வி.சங்கர் மாவட்ட குழு உறுப்பினர் எம்.பார்த்தசாரதி, வெங்கடேசன் உள்ளிட்ட தோழர்கள் காஞ்சிபுரம் மாவட்ட சிபிஐ அலுவலகத்தில் கொடியேற்றி சிறப்பித்தனர்.

**மணப்பாறை:** கட்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற கொடியேற்று விழாவிற்கு, நகர செயலாளர் ஜனசக்தி உசேன் தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் தங்கராஜ் முன்னிலைவகித்தார். இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில நிர்வாக குழு உறுப்பினர் த.இந்திரஜித் சிறப்புரை நிகழ்த்தினார். கோவிந்தராஜபுரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட குழு உறுப்பினர் ராகமத்துனிஷா இல்லத்திற்கு முன்பு ஒன்றிய செயலாளர் தங்கராசு கொடியேற்றி வைத்து உரை நிகழ்த்தினார் .

## அஜாய் பவனில் அமைப்பு நாள் நிகழ்வு



2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பாசிச வலதுசாரி சக்திகளை முறியடித்திட, தேசத்தையும், அரசியலமைப்பையும் பாதுகாத்திட அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் டி. ராஜா அறைகூவல் விடுத்துள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 98 வது ஸ்தாபன நாள் நிகழ்வாக டிசம்பர் 26 அன்று கட்சியின் தலைமையகமான அஜாய் பவனில் கட்சிக் கொடியை ஏற்றிவைத்த பின்னர், அங்கு திரளாகக் கூடியிருந்த தோழர்களிடையே அவர் உரையாற்றினார்.

டிசம்பர் 26 கொண்டாட்டங்களின் நாள் என்று குறிப்பிட்ட அவர், சுதந்திரப் போராட்டத்தில் நமது கட்சியும், அதன் தலைவர்களும் புரிந்த மாபெரும் பங்களிப்பை நினைவுகூர்ந்து பேசினார். சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்காதவர்கள் இப்போது ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறார்கள். அவர்கள் ஜனநாயகக் கட்டமைப்பைத் தூக்கியெறியவும், அரசியலமைப்பைத் தகர்த்திடவும், நமது தேசத்தை இந்து தேசமாக மாற்றிடவும் முயலுகிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ் பா.ஜ.க வினர் தங்களது மோசமான சூழ்ச்சிகளை நிறைவேற்றிட நமது கட்சித் தோழர்கள் அனுமதிக்கக் கூடாது என்று டி. ராஜா வலியுறுத்தினார்.

ஸ்தாபன நாள் நிகழ்வில், கட்சியின் தேசிய செயலாளர் டாக்டர் பாலச்சந்திர காங்கோ, தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆனி ராஜா, பி. சந்தோஷ் குமார் விறி, தேசியக் குழு உறுப்பினர்கள் சுகுமார் தாம்லே, டாக்டர் அ அ கான், கிருஷ்ண ஜா, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தலைவர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கோவில்பட்டி சாலையில் உள்ள காமராஜர் சிலை முன்பு 20வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் மனோன்மணி கொடியேற்றி வைத்து உரை நிகழ்த்தினார்.

விராலிமலை சங்க அலுவலக வளாகம் முன்பு மட்டன் ஜின்ன கொடியேற்றி வைத்து உரை நிகழ்த்தினார். திருச்சி சோலை மேம்பாலம் அருகில் உள்ள மகாத்மா காந்தி சிலை முன்பு நகர குழு உறுப்பினர் டி.ஆர்.ஜெயலட்சுமி கொடியேற்றி வைத்து உரை நிகழ்த்தினார். பேருந்து நிலையம் முன்பு நகர துணை செயலாளர் மரியராஜ் கொடியேற்றி வைத்து உரை நிகழ்த்தினார்.

திருச்சி திண்டுக்கல் தேசிய நெடுஞ் சாலை பிரிவின் அருகில் நகர குழு உறுப்பினர் ராஜா கொடியேற்றி வைத்து உரை நிகழ்த்தினார். 27 வது வார்டில் உள்ள நேருஜி நகரில் நகரக் குழு உறுப்பினர் ஏழுமலை கொடியேற்றி வைத்தார்.

திருச்சி புறநகர் மாவட்ட துணை செயலாளர் பழனிச்சாமி, மாவட்ட குழு உறுப்பினர்கள் சுப்ரமணியன், ராஜேந்திரன், சவுக்கத் அலி, நல்லுசாமி,நகரப்பொருளாளர் சின்னத்துரை, ஆரிஃப், சரவணன், நல்லு, குருசாமி, சின்னக்கண்ணு உட்பட நகர குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

திருச்சி புறநகர் மாவட்டம் துவாக்குடி போக்குவரத்துக் கழக அலுவலகம் முன்பு ஏஐடியுசி சார்பில், கேடிகே தங்கமணி நினைவு தினத்தை முன்னிட்டு அவரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தினர்.

துவாக்குடி போக்குவரத்து கழக செயலாளர் பழனிச்சாமி தலைமை வகித்தார். சிபிஐ திருச்சி புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ்குமார் புகழுரை நிகழ்த்தினார். முன்னாள் மாநில குழு உறுப்பினர் செல்வராஜ், திருவெறும்பூர் தாலுகா செயலாளர் பழனிச்சாமி, போக்குவரத்து கழக முத்துச்செல்வன் ஒய்வு, பெற்றோர் சங்கம் மாரியப்பன் ஆகியோர் புகழஞ்சலி செலுத்தினர்.

**கரூர்:** மாவட்ட கட்சி அலுவலகத்தில் கட்சியின் கொடியை மூத்த தோழர் ஆர்.ராமசாமி ஏற்றிவைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் கே.என்.நாட்ராயன், மாவட்ட துணை செயலாளர் கே.சண்முகம், எஸ்.மோகன்குமார், மாவட்ட பொருளாளர் ஆர்.ராஜேந்திரன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எம்.லட்சுமி காந்தன், கரூர் நகர செயலாளர் எஸ்.கார்த்திகேயன், டிஎன்எஸ்டிசி ஏஐடியூசி பொதுசெயலாளர் எஸ்.விஜயகுமார், பூபதி ஆகியோர் கலந்துகொண்டனர்

**மதுராந்தகம்:** மதுராந்தகம் தொகுதி மெய்யூர் கிளை சார்பில் மாமண்டூர் பைபாஸ் தேசிய நெடுஞ்சாலையில் கிளை செயலாளர் செ.இன்பராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட குழு உறுப்பினர் கே.வி.சேகுவேராதாஸ் பங்கேற்று கொடியேற்றினார். மீனவர் சங்க மாவட்ட பொருளாளர் வீரராகவன் மற்றும் கதிர்வேல், ஞானசேகரன், அய்யனார், சஞ்சை மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

**ஆண்டிபட்டி:** ஆண்டிபட்டியில் நகர செயலாளர் க.முனீஸ்வரன் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் இரா.தமிழப்பெருமாள் உரையாற்றினார். பேராசன் ஜீவா நினைவு கொடிகம்பத்தில் மாவட்டதுணை செயலாளர் வே.பரமேஸ்வரன் கட்சி கொடி யினை ஏற்றிவைத்தார்.

**மதுரை மாநகர்:** மாநகர் மாவட்ட முன்னாள் செயலாளர் எம்.சரவணன் தலைமையில் கட்சி கொடியேற்றப்பட்டது.

கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன் முன்னிலையில், கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் விளாங்குடி கே.எஸ்.மணி கே.டி.கே தங்கமணி நினைவுகள் குறித்து பேசினார்.

ஏஐடியூசி மாவட்ட செயலாளர் கே.சேது, கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர்கள் எம்.இருளாண்டி, ஜனசக்தி என்.ஜீவா, வழக்கறிஞர் கே.கே.சாமி, மற்றும் லோகநாதன், ஜி.பாலகிருஷ்ணன், மார்கண்டன், திருப்பதி, உட்பட பலர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

**மதுரை புறநகர்:** திருமங்கலம் பகுதியில் உள்ள செங்குளத்தில், கிளை செயலாளர் வளர்மதி தலைமையில் கட்சிக்கொடி ஏற்றப்பட்டது. பாலு முன்னிலை வகித்தார். நல்ல குரும்பன் வரவேற்புரை ஆற்றினார். மாவட்டத் துணைச் செயலாளர் சந்தனம் துவக்கி வைத்தார். மாநில கட்டுப்பாடு குழு உறுப்பினர் பா.காளிதாஸ் நிறைவுரை கூறினார்.

மதுரை திருப்பரங்குன்றம் கட்சி அலுவலகத்தில் ஒன்றியச் செயலாளர் விஜயா தலைமையில் கட்சிக்கொடி ஏற்றப்பட்டது. இந்நிகழ்வில் ஒன்றிய துணைச் செயலாளர்கள் மகாமுனி, ரெங்கநாதன், மாவட்ட குழு உறுப்பினர்கள் பாலகிருஷ்ணன், ஜெகநேசன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**ராமநாதபுரம்:** ராமநாதபுரம் அரண்மனை முன்பு நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு நகர் செயலாளர் களஞ்சியம் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் என்.எஸ். பெருமாள், மாவட்ட ஏஐடியூசி பொதுச் செயலாளர் என்.கே. ராஜன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ். முருகபூபதி, கே.ஆர்.சுப்பிரமணியன், திருப்புல்லாணி ஒன்றிய செயலாளர் சொக்கலிங்கம், இராஜேந்திரன், ஆறுமுகம், நாகு மாவட்டக் குழு உறுப்பினர் பி.சண்முகராஜன், கமுதி போஸ் உள்ளிட்ட தோழர்கள் கலந்துகொண்டனர்.

**திருவள்ளூர்:** மாவட்ட கட்சி அலுவலகத்தில் மாவட்ட துணைச் செயலாளர் வி.சரவணன் தலைமையில், மாவட்ட செயலாளர் கே.கஜேந்திரன் கட்சிக் கொடியை ஏற்றினார். நிகழ்வில் நகரச் செயலாளர் லோகநாதன், மாவட்டக்குழு உறுப்பினர் மதியழகன், எஸ்.ராபின் மற்றும் வெங்கடேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஜனநாயக உரிமையை பறிக்கும் காவல்துறை

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என்.ரவியின் அதிகார அத்துமீறல் நடவடிக்கைகளை ஒட்டுமொத்த தமிழ்நாடும் கண்டித்து வருகிறது. தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நாடாளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்களும் கடந்த 09.11.2022 ஆம் தேதி குடியரசுத் தலைவரை நேரில் சந்தித்து, தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, அந்தப் . பொறுப்பில் நீடிக்க தகுதியில்லாதவர் என்பதற்கான காரணங்களை தெரிவித்து, அவரை அப்பொறுப்பில் இருந்து திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாதிலக் குழு'' ஒன்றிய அரசு தலையிட்டு, ஆளுநர் பொறுப்பில் இருந்து ஆர்.என்.ரவியை திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தி வரும் 29.12.2022 ஆம் தேதி ஆளுநர் மாளிகை முற்றுகை இயக்கத்தை அறிவித்துள்ளது.

அரசியல் அமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ள அடிப்படை உரிமைகளை அவமதிக்கும் வகையில் செயல்படும் ஆளுநரின் அதிகார அத்துமீறலை எதிர்த்து நடைபெறும் இயக்கத்தை பொதுமக்களுக்கு தெரிவிக்கவும், அவர்களது ஆதரவை திரட்டவும் தமிழ்நாடு முழுவதும் விளம்பரங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த முறையில் ஈரோடு மாவட்டத்தில் சுவரொட்டிகள் ஒட்டி வரும் கட்சியின் நிர்வாகிகள் மீது புஞ்சைப புளியம்பட்டி, பவானிசாகர். தாளவாடி, ஆசனூர் உள்ளிட்ட காவல் நிலையங்களில் வழக்கு பதிவு செய்துள்ளதுடன், நகராட்சி மற்றும் ஊரக வளர்ச்சி பணியாளர்களையும், அதுவலர்களையும் நிர்பந்தித்து ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை கிழித்து வரும் ஜனநாயக விரோதச் செயலில் ஈரோடு மாவட்டக் காவல்துறை ஈடுபட்டு வருவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழ்நாடு அரசு உடனடியாக தலையிட்டு காவல்துறை பதிவு செய்துள்ள வழக்குகளை ரத்து செய்ய வேண்டும், சுவரொட்டிகளை கிழிக்கும்படி உத்தரவிட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## டேபிள் டென்னிஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற இரா.எத்திராஜன்




ஈரோட்டில் டிசம்பர் 11ம் தேதி, 100க்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்ட, மாநில அளவிலான டேபிள் டென்னிஸ் போட்டியில், இரா.எத்திராஜன் (சென்னை) ஒற்றையர் சாம்பியன் பட்டம் பெற்றார்.

எத்திராஜன், தன்னை எதிர்த்து போட்டியிட்ட, கோவை, திருப்பூர் மற்றும் சென்னை வீரர்களை வென்று சாம்பியன் பட்டத்தை பெற்றார்.

2023 சனவரி 15ம்தேதி முதல் 21ம்தேதி வரை, ஓமன் நாட்டில், மஸ்கட் நகரில், 50ம் மேற்பட்ட நாடுகளில் உள்ள, 1000க்கும் அதிகமான வீரர்கள் கலந்து கொள்ளும், உலக மாஸ்டர் டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின், சார்பில், தமிழகத்தை, சேர்ந்த, இரா.எத்திராஜன் பங்கேற்கிறார்.



சங்கே முழங்கு!

# இந்தியாவின் எதிர்காலம் கம்யூனிஸ்ட்களின் கரங்களில் உள்ளது!

## க.சந்தானம் பேச்சு

“தென்காசி” மாவட்டத்தில் கட்சியின் 98 வது அமைப்பு தின கருத்தரங்கம் மாவட்ட செயலாளர் டி.இசக்கித்துரை தலைமையில் நடைபெற்றது. தென்காசி ஒன்றிய செயலாளர் எம்.எஸ். கிட்டப்பா வரவேற்புரை நிகழ்த்தினார்.

ஏஐடியூசி மாநில தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன் அரசியல் வகுப்பு நடத்தினார். மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் உரையாற்றும் போது,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு அகவை 98, கட்சி கடந்து வந்த பாதை தென்றல் காற்றிலும், பூ மெத்தையிலும், சாரல்மழையிலும் வாழ்க்கைப்பட்ட வாழ்வாதாரமல்ல!

புயலை எதிர்த்து செல்லும் படகை போன்ற ஆபத்தான அக்னியில் வென்று எடுத்த இயக்கம்!

வரலாற்றில் எந்த பக்கம் புரட்டினாலும் கம்யூனிஸ்ட்கள் அனுபவித்த காயங்களின் தழும்புகள் கண்ணீர் வரவழைக்கும்!

உழைக்கும் மக்களுக்காக போராட்ட யுத்தத்தில் வெற்றி ஒன்றை இலக்காக தீர்மானித்து களத்தில் நிற்கும் போது எவரிடமும் சமரசம் செய்து கொள்வதில்லை!

இந்தியாவின் எதிர்காலம் கம்யூனிஸ்ட்களின் கரங்களில் உள்ளது! மிக உயர்ந்த ஏழ்மையில்லாத, பூர்ஷ்வாக்கள் இல்லாத, பொன்னுலகத்தை உருவாக்க நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்!

வரலாற்றை வாசித்து பார்த்தால் நமது மக்களின் ஒற்றுமையை விழுங்கும் குட்டிசாத்தானாக, சாதி, மதம் போன்றவற்றை மூளைச்சலவை செய்து மூடநம்பிக்கைக்கு முன்னுரிமை வழங்குகிறது!

இது பாட்டாளி வர்க்கத்திற்கு பங்கம் ஏற்படுத்தும் என்பதில் கம்யூனிஸ்ட்களுக்கு ஐயமில்லை!

அறியா மக்களிடம் ஆசைவார்த்தை பேசி, கடவுளின் பெயரால் கருத்துக்களை கூறி காவி உடையில் பாசிச ஆட்சி நடத்தும் பாரதிய ஜனதாவிடமிருந்து, ஆட்சியை பிடிக்க இடதுசாரிகளை ஒன்றுணைக்கவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்!

எனவே, எளியோரை வலியோர் சுரண்டுவதிலிருந்தும் பசி, பட்டினி, நோய், அகால மரணம், ஆகியவைகளிலிருந்தும், அனைத்து மனிதர்களும் விடுதலை பெற வேண்டும்!

இத்தகைய புரட்சி சங்கீதத்தை இசைக்கும் பொதுவுடைமை இந்தியாவை உருவாக்க பாடுபடுவோம்! என்று பேசினார்.

தென்காசி நகர செயலாளர் மா. கணேசன் நன்றி கூறினார்!

# பள்ளிக்கல்வித்துறையில் பணிபுரியும் பகுதிநேர ஆசிரியர்களுக்கும் பொங்கல் போனஸ் வழங்கிடுக!

தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித் துறையில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பத்தாண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பு செலுத்தி வரும் பகுதிநேர ஆசிரியர்கள் பணி நிரந்தரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இது குறித்து தமிழ்நாடு அரசு நேர்மறையாக கருதிப் பார்த்து, நல்ல நடவடிக்கை மேற்கொள்ளும் என எதிர்பார்த்து வருகிறார்கள் இந்த நிலையில், தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள பொங்கல் போனஸ் பகுதிநேர ஆசிரியர்களுக்கு கிடைக்காது என்பது வேதனையளிக்கிறது.

அரசின் பிற துறைகளில் பணிபுரியும் பகுதிநேர , தொகுப்பூதிய பணியாளர்கள் பொங்கல் போனஸ் பெறும்போது, பள்ளிக் கல்வித்துறையில் பணிபுரியும் பகுதிநேர ஆசிரியர்களுக்கும் பொங்கல் போனஸ் வழங்குவது தான் நியாயமாகும். பகுதிநேர ஆசிரியர்கள் கோரிக்கைகளை தமிழ்நாடு அரசு கருணையோடு பரிசீலித்து பொங்கல் போனஸ் வழங்குவதுடன், அவர்களது நீண்டகால கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தர வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# மனித உயிர்கள் பலி: ஆளுநர் அமைதி காப்பது ஏன்?

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டம் தொடர்பான மசோதாவிற்கு ஆளுநர் இதுவரை ஒப்புதல் தராமல் இழுத்தடித்து வருகிறார். இதற்கிடையில் ஆன்லைன் சூதாட்டம் கன ஜோராக நடைபெற்று வருகின்றது. தொடு திரை வசதியுள்ள, கைபேசியை எடுத்தால் தொடர்ந்து வசீகரமான விளம்பரங்கள் வந்து கொண்டே இருக்கின்றன.



லட்சம் கோடி ரூபாய்களை வீட்டில் இருந்தபடி ஆன்லைன் சூதாட்டத்தின் மூலம் அள்ளிக் கொண்டு போகலாம் “நீங்களும் வாருங்கள்” என்று அழைப்பு விடுகின்றன.

வஞ்சகம் நிறைந்த விளம்பரங்களைக் கண்டு ஏமாந்து, சூதாட்டத்தில் ஈடுபட்டு தன் கைவசம் உள்ள தொகைகளை இழந்து விட்டு, மேலும் கடன் பெற்றும் பல லட்சங்களை இழந்து, இறுதியில் தற்கொலைக்கு தள்ளப்படுகின்றார்கள்.

தமிழ்நாட்டில் இதுவரை 50க்கும் மேற்பட்டோர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். கடந்த ஒரு வாரத்தில் ஆறு பேர் தற்கொலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் இவை வெளியில் தெரிந்த எண்ணிக்கை, தெரியாத எண்ணிக்கை எவ்வளவு என்று யாருக்குத் தெரியும்?

ஆன்லைன் சூதாட்டம் குறித்து ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளித்திட ஓய்வு பெற்ற நீதியரசர் சந்துரு தலைமையிலான வல்லுநர் குழு, ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்திட வேண்டியதன் அவசியத்தை விரிவாக எடுத்துக் கூறி, அதன் விபரத்தை கடந்த 2022 ஜூன் 27ல் முதலமைச்சருக்கு அளித்ததுள்ளது.

சூதாட்டம் குறித்து பொது மக்களிடம் கருத்துக் கேட்கப்பட்டது. 10,755 பேர் தங்களது கருத்துக்களை தெரிவித்துள்ளனர். அவர்களில் 10,708 பேர் சூதாட்டத்தை தடை செய்திட வேண்டும் என கருத்து தெரிவித்துள்ளனர்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கேள்வி

தமிழ்நாடு அமைச்சரவை 2022 செப்டம்பர் 26ல் கூடி ஆன்லைன் சூதாட்டத்திற்கு தடை விதித்து அவசரச் சட்டத்தை அறிவித்தது. இதற்கு ஒப்புதல் அளித்த ஆளுநர், அவசரச் சட்டத்தை நிரந்தர சட்டமாக்கும் வகையில் தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஒருமனதாக மசோதா நிறைவேற்றப்பட்டு, அக்டோபர் 28ல் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதன் மீது ஆளுநர் எழுப்பிய கேள்விகளுக்கு அரசு உடனடியாக பதிலளித்துள்ளது. ஆனால், ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் அமைதி காத்து வருகிறார்.

இந்த நிலையில், சூதாட்ட நிறுவனங்கள் மூலம் பல்லாயிரம் கோடி ரூபாய் லாபம் பெற்று வருபவர்களை ஆளுநர் சந்தித்ததன் நோக்கமென்ன? சூதாட்ட நிறுவனங்களின் ஆண்டு வருவாய் 13 ஆயிரத்து 600 கோடி ரூபாய் என்றும், அடுத்தடுத்த ஆண்டுகளில் இத்தொகை ரூ.29 ஆயிரம் கோடியாக உயரக் கூடும் என்று கூறப்படுகின்றது.

“பணம் பாதாளம் வரை பாயும்“ என்ற பழமொழி உண்டு. எங்கெங்கு பாய்கின்றது, யார், யாருக்கு பாய்கின்றது என்பது பெரும் புதிராக உள்ளது. விலை மதிக்கவொண்ணா மனித உயிர்கள் பலியாகிக் கொண்டு இருக்கின்றன. மேலும் எத்தனை, எத்தனை உயிர்கள் பலியாகப் போகின்றன என்பது குறித்து கவலைப்படாத ஆளுநர் அமைதி காப்பது ஏன்? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை நிறைவேற்றிய மசோதாவை ஆளுநர் அலட்சியப்படுத்துவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கடுமையாகக் கண்டிக்கிறது. இனியும் காலம் தாழ்த்தாது, ஆளுநர் ஒப்புதல் வழங்க வேண்டும் என வலியுறுத்தி கேட்டுக் கொள்கின்றது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

6ம் பக்கத் தொடர்ச்சி

திட்டத்துக்கு போதியநிதி ஒதுக்கீடு செய்து வலிமைப்படுத்து

• வேலையின்மையை முடிவுக்கு கொண்டு வா!

• அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்து!

• மக்களின் உடல் நலத்தை பாதுகாக்க பொது சுகாதார அமைப்பை விரிவுபடுத்து!

• ஆயுதக் கலைப்பு, உலக அமைதி, போர் பதட்டத் தணிப்பு, பருவச் சூழல் மாறுதல் வலியுறுத்தி,

• கல்விக் கொள்கை தொடர்பாக

• குறைந்தபட்ச ஊதியம் குறித்து

• என்டிசி ஆலைகளை திறந்து நடத்துதல் குறித்து

• மீனவர் பாதுகாப்பை வலியுறுத்திய தீர்மானங்கள் உட்பட 60க்கு மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

டிசம்பர் 18ம் தேதியன்று மாநாடு நான்கு தனித்தலைப்புகளில் கமிஷன்களாகப் பிரிக்கப் பட்டது.

• பொதுத்துறைமற்றும் அரசுத்துறைநிறுவனங்களுக்கான கமிஷனுக்கு எச்.மகாதேவன் தலைமையேற்க சி.ஸ்ரீகுமார் அறிக்கையை அறிமுகப்படுத்தினார்.

• தொழிலாளர் உரிமைகள் மீதான தாக்குதல் மற்றும் தொழிலாளர் சட்டங்களைக் குறுக்குவது பற்றிய கமிஷனுக்கு டி.எம்.மூர்த்தி தலைமை வகிக்க, வித்யாசாகர் கிரி அறிக்கையை அறிமுகம் செய்தார்.

• அமைப்புசாரா தொழிலாளர், நலத்திட்ட பிரச்சினைகள், தொழிற்சங்கங்களுக்கான சவால்கள் கமிஷனுக்கு விஜயன் குன்னிசேரி தலைமையேற்க வஹிதா நிஜாம் அறிக்கையை அறிமுகம் செய்தார்.

• ஏஐடியுசியை வலிமையுறச் செய்து விரிவு படுத்துதல் குறித்த கமிஷனுக்கு ஒபிலேஷூ தலைமையேற்க சுகுமார் தாம்லே அறிக்கை வைத்தார்.

ஒவ்வொரு கமிஷனிலும் முப்பதுக்கு மேற்பட்ட தோழர்கள் பங்கேற்று தமது கருத்துக்களைத் தெரிவித்து அறிக்கைகளை செழுமைப்படுத்தினர். இவற்றோடு சேர்த்து நான்கு கமிஷன்களின் அறிக்கையும் பிற்பகலில் பொதுமாநாட்டில் வைக்கப்பட்டன. பிரதிநிதிகளிடமிருந்து வந்த இதர தீர்மானங்களும் வகைப்படுத்தப்பட்டு, முன்மொழியப்பட்டு, திருத்தங்களையும் பரிசீலித்து ஏற்கப்பட்டன.

தகுதி ஆய்வுக்குழுவின் அறிக்கையை சுகுமார் தாம்லே விரிவாக முன்வைத்தார். அந்த விபரங்களை மேடையின் பின்புலமாக இருந்த மின்னணுப் பலகையில் தொகுத்துக் காட்டியது எளிதில் புரியச் செய்வதாக இருந்தது.

கடந்த ஐந்தாண்டுகால வரவுசெலவு பற்றிய தணிக்கை அறிக்கை மாநாட்டின் முன்பு வைக்கப்பட்டு ஏற்கப்பட்டது.

மாநாட்டின் இறுதிநாளான டிசம்பர் 20ம் தேதியன்று 353 உறுப்பினர்களைக் கொண்ட பொதுக்குழு தேர்வு செய்யப்பட்டது. புதிய பொதுக்குழு உடனடியாகக் கூடி 43 பேர் கொண்ட நிர்வாகக் குழுவைவும், தலைவர், செயல்தலைவர், துணைத் தலைவர்கள், பொதுச் செயலாளர், செயலாளர்கள் ஆகியோரையும் தேர்வு செய்தது.

மாநாட்டைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த கேரள மாநிலக்குழுவுக்கு, அதன் பொதுச் செயலாளர் கே.பி.ராஜேந்திரனுக்கு சால்வையணிவித்து அமர்ஜீத் கவுர் நன்றி தெரிவித்தார்.

சர்வதேச கீதமும், தேசிய கீதமும் பாடிய பின்னர் மாநாடு நிறைவுற்றது.

பேரணி: மாலை 3 மணியளவில் ஆலப்புழை கடற்கரையில் லட்சத்துக்கும் மேலானவர்கள் கூடி நிற்க பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தொகுப்பு: டி.எம்.மூர்த்தி

## மாநாட்டில் பங்கேற்ற வெளிநாட்டு பிரதிநிதிகள்

பாம்பிஸ் கிரிட்ஸிஸ் – பொதுச் செயலாளர், உலகத் தொழிற்சங்க சம்மேளனம்,

– சிரியா தொழிற்சங்க மையம்

நகுவன் தன்ஹை – வியட்நாம் அரசின் தூதர்

சதோஷி சசாக்கி – ஐஎல்ஓ துணை இயக்குநர்

மௌரிசியோ – சிஜிபிடி – போர்ச்சுகல்

சொடி ரோயெல்லா – சைப்ரஸ் தொழிற்சங்கப் பேராயம்

ஜனகா அதிகாரி – ஸ்ரீலங்கா தொழிற்சங்க மையம்

பிரேமல் குமார் கானல் – நேபாள தொழிற்சங்கப் பேராயம்

எஸ்.விடாலி – கஜகஸ்தான் தொழிற்சங்கம்

## மோடி அரசு அனுமதிக்க மறுத்த தொழிற்சங்கங்கள்

பாகிஸ்தான், வடகொரியா நாடுகளைச் சேர்ந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கு விசா வழங்க முடியாது என மோடி அரசு மறுத்துவிட்டது.

சீனா, பஹ்ரைன் நாடுகளின் தொழிற் சங்கப் பிரதிநிதிகளை அனுமதிக்க இயலாது என வாய்மொழியாகக் கூறி தடுத்த இந்திய அரசு, எழுத்துப்பூர்வமாக கடிதம் அளிக்கவும் மறுத்துவிட்டது.

ஈரான் நாட்டுத் தொழிற்சங்கப் பிரதிநிதி, கொச்சி விமான நிலையத்துக்கு வந்த பின்பு, அவரிடம் டூரிஸ்ட் விசா உள்ளதால் மாநாட்டில் பங்கேற்க அனுமதிக்க முடியாது எனக் கூறி அடுத்த விமானத்திலேயே திருப்பி அனுப்பப்பட்டார்.

கிரீஸ் நாட்டுப் பிரதிநிதி விமானம் ஏறுமுன்பு, கொரோனா தொற்று இருப்பதாகக் கூறி தடுக்கப்பட்டார்.

## வங்கி பாதுகாகவலர் பணிகளில் அவுட்சோர்சிங் முறையை கைவிடுக!

### நாடாளுமன்றத்தில் கே.சுப்பராயன் பேச்சு

வங்கி ஏ.டி.எம்.களில் பாதுகாப்பாளர்கள் நியமனம் தொடர்பாக நாடாளுமன்ற மக்களவையில் கே.சுப்பராயன் பேசியதாவது:

ஏ.டி.எம்.களில் பாதுகாப்பாளர்கள் நியமனம் குறித்து வங்கிகள் தன்னிச்சையாக முடிவு செய்கின்றன. இது தவறாகும். வாடிக்கையாளர்களிடம் வங்கிகள் கொண்டிருக்கும் தார்மீக பொறுப்பை மீறுவதாகும். வங்கிகளில் பாதுகாப்பு பணிகளை அவுட்சோர்சிங் செய்வதற்குப் பதிலாக, நிரந்தர பாதுகாப்பு பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம். பாதுகாப்பாளர்கள் இன்றி ஏ.டி.எம்.களை இயக்குவது, வங்கிகள் மீது வாடிக்கையாளர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையைத் தகர்ப்பதற்கு ஒப்பாகும். ஏ.டி.எம்.களில் சைபர் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பாதுகாப்பும், கண்காணிப்பும் அதிகப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. ஏ.டி.எம்.களில் பாதுகாப்பு நடவடிக்கையைத் திரும்பப் பெறுவது முற்றிலும் விவேகமற்ற செயல் ஆகும். சுமார் 50 இலட்சம் டெபிட் அட்டைதாரர்களை அபாயத்தை நோக்கி இட்டுச் செல்வதாகும். எனவே, ஒன்றிய நிதியமைச்சர் இதில் தலையிட்டு ஏ.டி.எம்.களில் மீண்டும் பாதுகாப்பு பணியாளர்களை நியமனம் செய்திட வலியுறுத்துகிறேன். இந்த நியமனங்கள் கட்டாயமாக்கப்பட வேண்டும். ஏ.டி.எம்.களில் நடைபெறும் குற்றச்செயல்கள் மற்றும் அசம்பாவிதங்களுக்கு ரிசர்வ் வங்கியும் அரசாங்கமும் தான் பொறுப்பு ஆகும்.

இவ்வாறு கே.சுப்பராயன் பேசினார்.

## ராணுவவீரர் தாயார் மறைவு உடலை மயானம் கொண்டு செல்ல தடை

### ஆட்சியர் அலுவலகம் முன்பு த.ஒ.வா.இ. ஆர்ப்பாட்டம்



மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம் சிலைமலைபட்டியில் அருந்ததியர் மயானத்திற்கு பாதை இல்லை. ஆதிக்க சாதியினர் நிலத்தின் வழியாகத்தான் உடலை கொண்டு செல்ல வேண்டும். பலமுறை மாவட்ட நிர்வாகத்திற்கு மனு கொடுத்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் ராணுவ வீரரின் தாயார் காளியம்மாள் இறப்பு நிகழ்கிறது. இவரது உடலை அருந்ததியினர் மயானத்திற்கு எடுத்து சென்றபோது, ஆதிக்க சாதியினர் தங்கள் நிலத்தின் வழியாக செல்லகூடாது என மறித்தனர். இதனால் வழி கேட்டு மறியல் நடைபெற்றது.

தகவலறிந்து வந்த காவல்துறை மறியல் செய்தவர்களை கைது செய்தனர். இதைக் கண்டித்து விருதுநகரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆதித் தமிழர் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட செயலாளர் சுந்தரராஜன் தலைமை வகித்தார்.

இதில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் முருகேசன், தஒஇமு மாவட்ட செயலாளர் முருகன், ஆதித் தமிழர் கட்சி தமிழ்வீரன் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினார்கள். சிபிஐ சார்பில் ஒன்றிய செயலாளர் சக்கணன், நகர செயலாளர் முத்துக்குமார் ஆதக உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பட்டுக்கோட்டையில் 24வது ஒன்றிய விவசாயிகள் சங்க மாநாடு

தமிழ்நாடு விவசாயிகள் சங்க 24 வது பட்டுக்கோட்டை ஒன்றிய மாநாடு சங்க அலுவலகத்தில் சங்கத் தலைவர் வீ.மா. வீரப்பன் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டினை தொடங்கி வைத்து வி.ச.மாவட்ட தலைவர் மோகன் பேசினார். மாநாட்டினை வாழ்த்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் முத்து உத்திராபதி, வி.தொ.ச. மாவட்டச் செயலாளர் சி.பக்கிரிசாமி, வி.ச. மாநிலக் குழு உறுப்பினர்கள் அ.பன்னீர்செல்வம், சோ. பாஸ்கர் ஆகியோர் மாநாட்டை வாழ்த்திப் பேசினர். வேலை அறிக்கை, வரவு செலவு அறிக்கை வி.ச ஒன்றிய செயலாளர் அ.கலியபெருமாள் சமர்பித்தார். வி.ச ஒன்றிய தலைவராக வீ. மா.வீரப்பன், துணைத் தலைவராக இரா. பிரகாசம், செயலாளராக கரம்பயம் சி.எஸ்.அஜய்குமார், துணைச் செயலாளராக க. பிச்சைமுத்து, பொருளாளராக த.கண்ணப்பன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

பட்டுக்கோட்டையில் அமைந்துள்ள தென்னை வளாகத்தை முறையாக பராமரித்து செயல்படுத்தவேண்டும், உரித்த தேங்காய் கிலோ ரூ.50ம், கொப்பரை தேங்காய் ரூ. 150ம் விலை நிர்ணயம் செய்து தமிழக அரசே கொள்முதல் செய்திட வேண்டும், மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கணக்கெடுப்பு செய்து உடனடியாக நிவாரணம் வழங்கிட வேண்டும், விவசாயிகளின் நிலங்களுக்கு பட்டா மாற்றம் செய்வதற்கும் உட்பிரிவு செய்வதற்கும் பெரும் தொகை லஞ்சமாக பெறப்படுவதை தமிழக அரசு உடனடியாக தடுத்து நிறுத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. எம்.எம்.சுகுமார் நன்றி தெரிவித்தார்.

## கீழவெண்மணி தியாகிகள் நினைவு தினம்



கடந்த 1968 ஆம் ஆண்டு டிசம்பர் 25அன்று நாகப்பட்டினம் மாவட்டம், கீழவெண்மணி கிராமத்தில், அரைப்படி நெல் கூலி உயர்வு கேட்டு போரடிய குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட 44 விவசாய கூலி தொழிலாளர்கள் நிலவுடைமை ஆதிக்க சக்திகளால் குடிசைக்குள் தீ வைத்து கொளுத்தப்பட்டனர். அந்த தியாகிகளின் 54 வது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு தமிழகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டு வீரவணக்க அஞ்சலி செலுத்தப்பட்டது.

**விருதுநகர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் மாவட்ட அலுவலகத்தில், தவிதொச சார்பில் கீழவெண்மணி தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தப்பட்டது. மாவட்ட செயலாளர் வரதராஜன் தலைமை வகித்தார். சிபிஐ மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, தஒவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், முருகேசன், மாவட்ட துணை செயலாளர் சமுத்திரம், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் சாமிநாதன், ஜீவா, மாதர் சங்க மாரீஸ்வரி, இடைகமிட்டி செயலாளர்கள், சக்கணன், முனியசாமி, செல்வம், ஏஐடியுசி இளங்கோ, அலியார் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் கீழ ராஜா வீதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மாநகர செயலாளர் ஆர்.பிரபாகர் தலைமையில் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து.உத்திராபதி தியாகிகள் திருவுருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து, தியாகிகளின் போராட்ட வரலாறு குறித்து உரையாற்றினார். நிகழ்வில் மூத்த தோழர் ஜி கிருஷ்ணன், மாவட்ட நிர்வாகிகள் வெ.சேவையா, தி.கோவிந்தராஜன், மருத்துவர் ச.சுதந்திரபாரதி, ஓய்வு பெற்ற ஆசிரியர் சுந்தரமூர்த்தி, குணசேகரன் உள்ளிட்டார் பங்கேற்றனர்.

இடதுசாரிகள் பொதுமேடை சார்பில் தஞ்சாவூர் ரயிலடி முன்பு நடைபெற்ற நிகழ்விற்கு ஏஐடியூசி மாநில செயலாளர் சி.சந்திரகுமார் தலைமை வகித்தார். இடதுசாரிகள் பொதுமேடை ஒருங்கிணைப்பாளர் துரை.மதிவாணன் முன்னிலை வகித்தார்.

**திருவள்ளூர்:** தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில் வெண்மணி தியாகிகள் தினக் கூட்டம் சோழவரம் ஒன்றியம் அம்பேத்கர் நகரில் மாவட்ட துணைத் தலைவர் கே.போஸ் தலைமையில் நடைபெற்றது.

இதில் திருவள்ளூர் மாவட்ட செயலாளர் என். எஸ். பிரதாப் சந்திரன், மாவட்ட துணை செயலாளர் எம். பி. குமார், சோழவரம் ஒன்றிய செயலாளர் கே குமரேசன், மாவட்ட குழு உறுப்பினர் ஜி.எம்.சம்பத், ஒன்றிய தலைவர் பஞ்சநாதன், துணைத் தலைவர் கருப்புசாமி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற கிளை செயலாளர் பாலாஜி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மத்திய சென்னை:** தமிழ்நாடு ஏஐடியுசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் மத்திய சென்னை மாவட்டம் எழும்பூர் பகுதி குழு சார்பில், கீழவெண்மணி தியாகிகள் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு மாவட்டத் தலைவர் வி.சாக்ரடீஸ் தலைமை தாங்கினார். எழிலன் வரவேற்புரை ஆற்றினார். கட்டடத் தொழிலாளர் சங்க மாநிலச் செயலாளர் ஆர்.துரைசாமி சிறப்புரையாற்றினார். வட சென்னை மாவட்ட செயலாளர் ஏ.அருள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய சென்னை மாவட்ட துணைச் செயலாளர் பி.மாரியப்பன், கிளைச் செயலாளர் பிடல் காஸ்ட்ரோ, மத்திய சென்னை மாவட்ட கட்டிட சங்க பொருளாளர் சுஜாதா, மன்னம்மாள், பூபதி, அன்பு மற்றும் அனைத்து கட்சி தோழர்கள் பங்கேற்றனர்.

**கரூர்:** வெண்மணி தியாகிகள் நினைவுதினம் கரூர் மாவட்ட விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில் கரூர் மாவட்ட கட்சி அலுவலகத்தில் வி.தொ.ச.மாவட்ட குழு உறுப்பினர் பி.மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கரூர் மாவட்ட செயலாளர் கே.என்.நாட்ராயன், வி.தொ.ச மாவட்ட தலைவர் பி.பாலன், வி.தொ.ச மாவட்ட செயலாளர் ஆர்.தங்கவேல், கட்சியின் மாவட்ட பொருளாளர் ஆர்.ராஜேந்திரன், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் எம்.லட்சுமி காந்தன், மாவட்ட துணை செயலாளர் கே.ரமேஷ், வி.தொ.ச.மாவட்ட துணை செயலாளர் எம்.பி.செல்வம் ஆகியோர் கலந்துகொண்டு வீரவணக்கம் செலுத்தினர்.

### ஆரூரான் சர்க்கரை ஆலை நிர்வாகத்தால் பாதிக்கப்பட்ட

## விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்குக!

### தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தஞ்சை மாவட்டம், திருமண்டங்குடியில் உள்ள ஆரூரான் சர்க்கரை ஆலை நிர்வாகம் கடந்த பல ஆண்டுகளாக விவசாயிகளிடம் வாங்கிய கரும்புகளுக்குரிய தொகையை கொடுக்காதது மட்டுமல்ல, அரசு அறிவித்துள்ள சிறப்பு ஊக்க தொகையையும் கொடுக்கவில்லை. மேலும் விவசாயிகளின் பெயர்களில் வங்கிகளில் பெற்ற கடனையும் திருப்பி செலுத்தாது மிகப்பெரிய மோசடி செய்துள்ளதை எதிர்த்து விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகிற நிலையில், இந்த நிர்வாகம் கால்ஸ் என்கிற ஒரு புதிய நிறுவனத்திற்கு ஆலையை விற்றுவிட்டது.

இதன் மீது அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்காததால் பாதிப்புக்குள்ளான விவசாயிகள் ஆலையின் முன் பல்வேறு வடிவங்களில் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். அரசு மோசடி செய்த நபர்கள் மீது குற்றவியல்நடவடிக்கை



எடுப்பதற்கு பதிலாக, காவல்துறை விவசாயிகளின் மீது குற்றவழக்கு போட்டுள்ளது என்பது கண்டிக்கத்தக்கது.

இது ஆரோக்கியமான அணுகுமுறை அல்ல. ஆகவே உடனடியாக மாண்புமிகு தமிழக முதல்வர் தலையிட்டு விவசாயிகளுக்கு உரிய தொகையை வழங்குவதற்கும்.. இவர்களை கடன் பிடியில் இருந்து விடுவிப்பதற்கு அரசே இந்த ஆலையை ஏற்று நடத்திடவும் வலியுறுத்தி கடந்த 22ஆம் தேதி தமிழ்நாட்டில் உள்ள செயல்படும் சர்க்கரை ஆலைகள் அருகே தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கும்பகோணத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் திருமண்டங்குடி விவசாயிகளுடன் 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் கரும்புகளுடன் கலந்து கொண்டு கோரிக்கை முழக்கமிட்டனர். இதுபோல் திருச்சி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், மதுரை, தேனி, தர்மபுரி, அரூர், தஞ்சாவூர் தெற்கு, உள்ளிட்ட பல மாவட்டங்களில் நடந்த போராட்டத்தில் கரும்பு விவசாயிகள் ஆங்காங்கே நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்த 31 குடும்பத்தினர் இரா.முத்தரசன் முன்னிலையில் கட்சியில் இணைந்தனர்



திருத்துறைப்பூண்டியில் பல்வேறு அரசியல் கட்சியில் இருந்து விலகி சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்த 31 குடும்பத்தைச் சார்ந்தவர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் முன்னிலையில் கட்டிமேடு ஊராட்சியில் இணைந்தனர்.

நிகழ்ச்சிக்கு முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கே.உலகநாதன் தலைமை தாங்கினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கோ. பழனிச்சாமி, சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, வி.தொ.ச.மாவட்ட செயலாளர் அ.பாஸ்கர், சிபிஐ மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் இரெ.ஞானமோகன், பி.வி.சந்திரராமன், கே.ஆர்.ஜோசப், கட்சியின் ஒன்றிய செயலாளர் வி.ஜவகர், நகரச் செயலாளர் டி.பி.சுந்தர், வி.முத்துக்குமரன், விதொச செயலாளர் எம்.மகாலிங்கம், விதொச செயலாளர் ஜெயபால், மாதர் சங்க ஒன்றிய செயலாளர் தமிழ்ச்செல்வி, தலைவர் கவிதா, குருமணி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சுஜாதா, ஒன்றிய நிர்வாக குழு உறுப்பினர் எல்.ஜெயபால் மற்றும் திரளாக தோழர்கள் பங்கேற்றனர்

கட்சியில் இணைந்த தோழர்களுக்கு கோ. பழனிச்சாமி முன்.எம்.எல்.ஏ. செந்துண்டு அணிவித்து வரவேற்று வாழ்த்து கூறினார். கட்சி கிளை செயலாளர் ஆர்.மதியழகன் நன்றி கூறினார்.

# தந்தை பெரியாரின் நினைவு தினம்





தந்தை பெரியாரின் நினைவு நாளை முன்னிட்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநிலக்குழு அலுவலகம் பாலன் இல்லத்தில் டிச.24 அன்று தந்தை பெரியாரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு பெரியார் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்தார். நிகழ்வில் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், சென்னை மாவட்டச் செயலாளர்கள் ப.கருணாநிதி, எஸ்.கே.சிவா, த.கு.வெங்கடேஷ் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

கம்யூனிஸ்ட் அறிக்கையை தமிழாக்கம் செய்து விடுதலை பத்திரிக்கையில் வெளியிட்டது, சுயமரியாதை மற்றும் சமூக நீதிக்காக பெரியார் பாடுபட்டது.

வைக்கத்தில் தந்தை பெரியார், தோழர் ப.ஜீவானந்தம் இணைந்து போராடியது, நாகை கே.முருகேசன், ஏ.எஸ்.கே.ஐயங்கார் உள்ளிட்ட கட்சி தலைவர்களுடன் பெரியாரின் அரசியல் தொடர்புகள் குறித்தும் நினைவு கூரப்பட்டது.

**வடசென்னை**: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்டம் சார்பாக தந்தை பெரியார் நினைவுதினத்தை முன்னிட்டு அவருடைய நினைவிடம் அமைந்துள்ள பெரியார் திடலில் வீரவணக்கம் செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஜி.சுப்ரமணி, எம்.ஜெய்சங்கர் மாநில குழு உறுப்பினர் லி. உதயகுமார் மற்றும் தோழர்கள் பங்கேற்றனர்.

**கள்ளக்குறிச்சி**: தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் கள்ளக்குறிச்சி மாவட்டக்குழு சார்பில் உளுந்தூர்பேட்டை அருகே திருநாவலூர் பெரியார் நினைவு சமத்துவபுரம் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். மாவட்டச் செயலாளர் எம்.வெங்கடேசன், நிர்வாகிகள் நாகப்பன், சாமிதுரை, பாலையா, மீனா, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**திருச்சி மாநகர்**: இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநகர் மாவட்ட குழுவின் சார்பில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள பெரியார் சிலைக்கு மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா தலைமையில், ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் க.சுரேஷ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் துணைச் செயலாளர் ச.செல்வகுமார், பொருளாளர் சொக்கி சண்முகம், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் எம்.செல்வகுமார், மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் க.இப்ராஹிம், இடை கமிட்டி செயலாளர் ஆர்.சையத் அபுதாஹிர், எம்.ஆர்.முருகன், துணைச் செயலாளர் முத்தழகு, க.முருகன், ஆர்.அசோக், ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**மணப்பாறை**: மணப்பாறை பேருந்து நிலையம் அருகில் உள்ள பெரியாரின் சிலைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர, ஒன்றிய குழு சார்பில் மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தினர்.

தமிழ்நாடு விவசாய சங்க மாநில துணை செயலாளர் த.இந்திரஜித் தலைமை வகித்து மாலை அணிவித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர செயலாளர் ஜனசக்தி உசேன், மாவட்ட குழு உறுப்பினர்கள் சுப்பிரமணியன், சௌகத் அலி, ரஹ்மத்துல்லாஹ், நல்லுசாமி, பெருமாள், ராஜேந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டு வீரவணக்கம் செலுத்தினர்.

**திருவள்ளூர்**: திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றத்தில் வி.சி.க. தொழிலாளர் விடுதலை முன்னணி சார்பில் தந்தை பெரியார் நினைவு தினமும், 'மனுஸ்மிருதி' நூல் எதிர்ப்பு கருத்தரங்கமும் மு.சுடர்மாவளவன் தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் என்.எஸ். பிரதாப் சந்திரன், ஏஐஒஎப் மாவட்டச் செயலாளர் பி.வி.செந்தில், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்டச் செயலாளர் மதியோவன், வி.சி.க. ஆதிமொழி, தி.மு.க.திராவிட மணி, கா.கு.இலக்கியன், ஹரிகிருஷ்ணன், சம்பத் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

# மு.அ.பாரதி உள்ளிட்ட அனைவரையும் விடுவித்து தஞ்சை நீதிமன்றம் உத்தரவு

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு 27 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் தண்டனை அனுபவித்து வந்த பேறிவாளன் உள்ளிட்ட ஏழுவரை விடுதலை செய்யக்கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தமிழ் தேச அமைப்புகள் ஒன்று சேர்ந்து அனுமதி மறுக்கப்பட்ட இடத்தில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுத்தி ஆர்பாட்டம் நடத்தியதாக தஞ்சாவூர் நகர கிழக்கு காவல் நிலையத்தில் கடந்த 26.07.19 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டது.

மேற்கண்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் மு.அ.பாரதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக்குழு உறுப்பினர் ஆர்.பி.முத்துக்குமரன், தமிழ் தேச முன்னனியின் பொதுச் செயலாளர் அய்யனாபுரம் சி.முருகேசன், ஏஐடியூசி மாவட்ட துணைச் செயலாளர் துரை.மதிவாணன், தமிழ் தேசிய பேரியக்கத்தின் தலைமை செயற்குழு உறுப்பினர் பழ.இராஜேந்திரன், தமிழ் தேச மக்கள் முன்னனி மாவட்டச் செயலாளர் அருண் சோரி, தாளாண்மை உழவர் இயக்கத்தின் தலைவர் சோ.திருநாவுக்கரசு ஆகிய ஏழு பேர் டிச.26 அன்று தஞ்சை நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றத்தில் ஆஜராகினர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் வழக்கறிஞர் பிரகாஷ் ஆஜராகி வாதடினார். வழக்கை விசாரித்த நீதித்துறை நடுவர் குற்றம்சாட்டப்பட்ட அனைவரையும் விடுவித்து தீர்ப்பு அளித்தார்.

# மாணவர் பெருமன்ற மாநில மாநாட்டு வரவேற்புக்குழு கூட்டம்



இந்திய விடுதலைக்கு முன்பாக 1936 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட அமைப்பு, அடிமை விலங்கொடித்து இந்தியா விடுதலை பெறுவதற்காக போராடிய அமைப்பு, அதற்காக உயிர் தியாகங்களை செய்த அமைப்பு, சமாதானம், முன்னேற்றம் மற்றும் விஞ்ஞான சோசலிசம் என்கிற உயரிய லட்சியத்தை அடைய இந்திய மாணவர்களை ஒன்று திரட்டி போராடிக் கொண்டிருக்கும் அமைப்பு... அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் AISF.

அந்த அமைப்பின் 16வது மாநில மாநாடு வருகிற பிப்ரவரி 5,6,7 ஆகிய தேதிகளில் வடசென்னை மாவட்டம் ஆர்.கே. நகரில் உள்ள வாணி மகாலில் நடக்க உள்ளது.

இந்த மாநாட்டை சிறப்பாக நடத்துவதற்கான வரவேற்புக்குழு கூட்டம், பெரம்பூர் கிருஷ்ணமூர்த்தி நகர், மீனாம்பாள் சாலையில் உள்ள டாக்டர் இராதாகிருஷ்ணன் மெட்ரிகுலேஷன் மேல்நிலை பள்ளியில் டிச.16 அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்ட பொருளாளர் கீ.சு.குமார் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் கலந்து கொண்டு மாநாட்டின் லட்சினையை (லோகோவை) வெளியிட்டார். மாநாட்டின் லோகோ டிஜிட்டல் முறையில் 38 வினாடிகள் ஓடும் காணொளியாக வெளியிடப்பட்டது. பின்னர் வரவேற்பு குழு தேர்வு செய்யப்பட்டது.

வரவேற்பு குழுவின் தலைவராக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, செயலாளராக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, பொருளாளராக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்ட பொருளாளர் கீ.சு.குமார், அத்துடன் பா.கருணாநிதி,எஸ்.கே. சிவா,பா.ப.மோகன்,முரளி, பேராசிரியர் கதிரவன்,ஜி.சுப்ரமணி,எம். ஜெய்சங்கர்,லி.ரஞ்சித், மாரியப்பன்,மு.வரதன் மற்றும் வடசென்னை மாவட்ட நிர்வாகக்குழு தோழர்கள் உட்பட 20 துணை தலைவர்களும்,20 துணை செயலாளர்களும், வடசென்னை மத்திய சென்னை தென்சென்னை மாவட்ட குழு உறுப்பினர்கள், தொகுதி நிர்வாகிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் ஆதரவாளர்கள் நண்பர்கள் என மொத்தம் 150 பேர் கொண்ட வரவேற்பு குழு அமைக்கப்பட்டது.

பின்னர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை முன்னாள் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா.கருணாநிதி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தென்சென்னை மாவட்ட செயலாளர் எஸ்.கே.சிவா ஆலோசனை வழங்கி மாநாடு வெற்றி பெற வாழ்த்தினர்.

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் வடசென்னை மாவட்ட செயலாளர் இரா.இராமசாமி நன்றி கூறி நிகழ்ச்சியை நிறை செய்தார்.

# அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் சார்பில் கருத்தரங்கம்

அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் சார்பில் திருச்சி தமிழ்நாடு ஓட்டல் அரங்கில், "தமிழகப் பொருளாதாரம்: வாய்ப்புகளும், சவால்களும்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கத்திற்கு பேராசிரியர் எஸ்.அய்யம்பிள்ளை தலைமை தாங்கினார். முற்போக்குப் பேரவையின் திருச்சி மாவட்ட அமைப்பாளர் முனைவர் ஆர்.மணி மோகன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் மாநிலச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநில செயற்குழு உறுப்பினர் எம்.செல்வராஜ், அனைத்திந்திய முற்போக்குப் பேரவையின் மாநில பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் ஆகியோர் கருத்துரை வழங்கினர். தமிழ்நாடு அரசின் திட்டக்குழு துணைத் தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் நிறைவுப் பேருரையாற்றினார்.

இறுதியில், முனைவர் பி.கனிமொழி நன்றி நவின்றார்.

# ஆர்.எஸ்.எஸ்.பயிற்சி முகாமிற்கு மாணவர்களை அனுப்பிய ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுத்திடுக!

திருவள்ளூர் மாவட்டம் மேல்நல்லாத்தூரில் இயங்கும் அரசு உயர்நிலைப் பள்ளியில் இருந்து, கும்மிடிப்பூண்டியில் நடைபெறும் ஆர்.எஸ்.எஸ்.பயிற்சி முகாமிற்கு மாணவர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். இது மாணவர்கள் மத்தியில் மதவெறியூட்டும் செயலாகும். மாணவர்களை ஆர்.எஸ்.எஸ் பயிற்சிக்கு அனுப்பிய பள்ளியின் தலைமை ஆசிரியரையும், காரணமான மற்ற ஆசிரியர்களையும் இடைநீக்கம் செய்ய வலியுறுத்தி கோரிக்கை மனுவை திருவள்ளூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலகத்தில், உதவிக் கல்வி அலுவலரை சந்தித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் வி.சரவணன் தலைமையில் மனு அளிக்கப்பட்டது.

# நூல் நயம்

## சிறுகதைகள்

எளிய மக்கள் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் இடர்பாடுகள், பிரச்சனைகள், குடும்ப கஷ்டங்கள், இன்ப துன்பங்களை குறித்து "சிறுகதைகள்" என்ற தலைப்பில் இந்த நூல் ஆசிரியர் எஸ். கணேசன் அவர்களால் எழுதப்பட்டுள்ளது.




சின்னையாவின் குடும்பம் என்கின்ற சிறுகதையை படிக்கிற போது நமது கண்களில் நீர் திரையிடுவதை மறைக்க முடியாது. நான்கு குழந்தைகளின் தந்தையான சின்னையா உழைக்கும் வர்க்கத்தின் ஒரு எளிய சாட்சியமவார். சின்னையாவும் அவர் மனைவி புஷ்பமும் உழைத்து தங்கள் குடும்பத்தை கரை சேர்க்க பாடுபடுகிறார்கள்.நேர்மையும் ஒழுக்கத்தையும் இரு கண்களாகக் கொண்டு வாழ்க்கை நடத்தும் இவர்களுக்கு, எதிர்பாராத விதத்தில் ஒரு பெரும் நெருக்கடி நோய் என்ற பெயரில் வாழ்க்கையில் ஏற்பட்டு விடுகிறது.

சின்னையாவின் மனைவி புஷ்பம் நோயில் விழுந்து விட, குடும்பத்தை பராமரிக்க முடியாமல் மிகுந்த துன்பத்திற்கு ஆளாகிறார் சின்னையா, படித்து வாழ்க்கையில் உயர வேண்டும் என்கிற லட்சிய வெறி கொண்ட இவரது மூத்த மகள், தன் பள்ளி படிப்பை பாதியில் விட்டு விட்டு பூ வியாபாரம் செய்கிறார்.அந்தப் பூ வியாபாரத்தையும் நிம்மதியாக செய்ய முடியாத அளவிற்கு காவல் துறை ஏட்டையா மூலமாக ஒரு வில்லங்கம் வருகிறது. அதையும் சமாளித்து வியாபாரம் செய்ய முயலும் சமயத்தில் தான் எதிர்பாராத விதத்தில் சின்னையாவிற்கு விபத்தில் மரணம் ஏற்பட்டு விடுகிறது. இதனால் குடும்பம் மேலும் நிலை குலைந்து போய் விடுகிறது. ஒழுக்கமாகவும், நேர்மையாகவும் வாழ வேண்டும் என்கிற வைராக்கியம் கொண்ட குடும்பம். சமூகத்தின் புற யதார்த்த தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் தவித்து நிற்கிறது.


இந்த சமயத்தில் உதவி செய்வதற்கு வந்த அரசியல்வாதி மருதமுத்து. அந்த குடும்பத்தை மேலும் மேலும் சின்னாபின்ன படுத்து விடுகிறார். உழைத்து நேர்மையாக வாழ வேண்டும் என்கின்ற ஒரு குடும்பத்தை. இன்றைய சமூக எதார்த்தம் யவ்வாறெல்லாம் சீர் அழித்து விடுகிறது என்பதற்கு சின்னையாவின் குடும்பம் சிறுகதை ஒரு சாட்சியமாகும். எல்லாமே பணம் தான், மன்னனை சிந்திக்க வைத்த மந்திரி போன்ற கதைகளும் இந்நூலில் உள்ளது. இன் நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும்.

– சமரன்

| | |
|---|---|
| நூலாசிரியர் | : எஸ்.கணேசன் |
| பக்கம் | : 64 விலை: ரூபாய் 50 |
| வெளியீடு | : சண்முகா பதிப்பகம், 136, சத்தியமூர்த்தி மெயின் ரோடு, மீனம்மாள்புரம், மதுரை – 625002 |

## காட் பரிஸ் கல்வியும் கமர்கட் கல்வியும்

இந்திய கல்வி முறை மேடு பள்ளங்கள் நிரம்பியதாகவும் ஏற்ற இறக்கங்களைக் கொண்டதாகவும் உள்ளது. வசதி படைத்தவர்களுக்கு ஒரு கல்வியும், வயிற்றுப் பாட்டிற்கு திண்டாடுபவர்களுக்கு வேறொரு கல்வி முறையாக உள்ளது.இதை எவ்வாறு சீர்படுத்த போகிறோம் என்கிற கேள்வியின் விளைவே . இரா. எட்வின் எழுதிய காட் பரிஸ் கல்வியும் கமர்கட் கல்வியும் என்ற இந்த நூல்.




காட்பரிசும் இனிப்புதான். கமர்கட்டும் இனிப்பு தான் . இரண்டுமே குழந்தைகளுக்கு பிடித்தவைதான். ஆனால் காட்பரிஸ் வசதி படைத்தவர் வீட்டுக் குழந்தைகளுக்கு மட்டுமாணதாகவும், கமர்கட் வசதி இல்லாத வீட்டு குழந்தைகளுக்கு மட்டுமானதாகவும் கள எதார்த்தம் இருக்கிறது என்கிற ஒப்பிட்டு உவமையுடன் இன்றைய கல்வி நிலை எப்படி இருக்கிறது என்பதை தோலுரித்து காட்டுகிறார் நூலாசிரியர். தொடக்கமே அமர்க்களம்தான்.

ஒரு காலத்தில் கல்வி மறுக்கப்பட்டவர்கள் இன்றைய கல்விக்கூடத்திற்குள் நுழைந்தவுடன் அவர்களை புறந்தள்ள முடியாத மேட்டுக்குடி வர்க்கம்,இருவரும் ஒரே வகை கல்வியைக் கற்றால் இருவரும் ஒன்றென்ற நிலை ஏற்பட்டு விடும் என்பதை அனுமதிக்க முடியாது என்ற தீர்மானத்தின் விளைவு தான் இந்த இரண்டு வகையான கல்வி முறைகள். காட்பரிசும் கமர்கட்டும் ஒன்றல்ல, கமர்கட் தரமற்றது என்ற சிந்தனையை பிஞ்சு குழந்தைகளின் நெஞ்சில் விஷமாக விதைக்கிறது மேட்டுக்குடி ஆளும் வர்க்கம்.

அந்தத் தரமற்ற கமர்கட்டு தான் அரசு பள்ளி கல்வி முறையாகும் என்ற சிந்தனையை சமூகத்தின் மூலையில் ஆழ குழி தோண்டி புதைத்து விடுகிறார்கள். எனவேதான் ,தனியார் பள்ளிகளை நோக்கி நமது தரித்திர புத்திரர்கள் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். தனியார் கல்வி நிறுவனங்கள் மூளைக்கு மூளை புற்று ஈசல் போல் புறப்பட்டு கொண்டிருக்கிறது.அரசு பள்ளிகள் கவனிப்பாரற்ற அகதிகளைப் போல் அல்லாடி கொண்டிருக்கிறது.

உழைக்கிற வர்க்கம் நல்ல கல்வியை அரசு மூலம் பெற்று விடக்கூடாது என்பதற்காக. மேட்டுக்குடி ஆளும் வர்க்கம் செய்திருக்கிற சூழ்ச்சியே தனியார் கல்வி முறையாகும்.எனவே ஆளும் வர்க்கத்தின் சூழ்ச்சியை புரிந்து கொண்டு, சமச்சீரான பொது கல்விக்காக அனைவரும் உரத்து குரல் கொடுக்க வேண்டிய நேரம் இது என்பதை தமிழ் சமூகத்தின் மனசாட்சியை உலுக்கும் வகையில் இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டுகிறோம்.

–இன்சுவை பாரதி

| | |
|---|---|
| நூலாசிரியர் | : இரா.எட்வின் |
| பக்கம் | : 64 விலை: 70 |
| வெளியீடு | : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 50 |

# பொங்கல் பரிசு வழங்குவதில் பாரபட்சம்!

## கைவிட ஏஐடியுசி வலியுறுத்தல்

தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச்செயலாளர் ம. இராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

அரசின் நலத்திட்டங்களுக்கு அச்சாணியாக விளங்கும் பணியாளர்களுக்கு எதிர்வரும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொங்கல் பரிசு வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்ட அடிப்படையில், தமிழ்நாடு அரசு பணியாளர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கும் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி சிறப்பு கால முறை ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் நிதி ஆண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாக பணிபுரிந்த சில்லறை செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் முழு நேர மற்றும் பகுதி நேர பணியாளர்கள் ஆகியோருக்கு ரூபாய் 1000/ சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்படும்.

இந்த அறிவிப்பின் அடிப்படையில் ஒப்பந்த, வெளி முகமை பணியாளர்கள் இந்த பொங்கல் பரிசு பெறும் தகுதியற்றவர்கள் ஆகிறார்கள். கிராமப்புற பொது சுகாதாரம் பேணும் தூய்மைப் பணியாளர்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிபுரியும் தூய்மை காவலர்கள் தான் பெரும்பகுதி இந்த பணியை செய்கிறார்கள். 66 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாதம் ரூ. 3600/ மட்டுமே அதுவும் மாதம் 30 நாட்கள் வேலை செய்து 26 நாள் ஊதியம் பெறும் இவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பொங்கல் பரிசு கிடைக்காது.

நகர்ப்புற உள்ளாட்சிகளில் ஒப்பந்த, வெளிசந்தை தொழிலாளர்கள் தான் சுமார் 80 விழுக்காடு. அவர்களில் பெரும்பாலோர் தூய்மை பணி புரிவோர். இவர்களுக்கும் பொங்கல் பரிசு கிடைக்காது. மருத்துவ துறை உள்பட பல்வேறு துறைகளில் ஒப்பந்தம், வெளிச்சத்தை, திட்டப் பணியாளர்கள் என்று அற்ப ஊதியத்திற்கு நவீன கொத்தடிமைகளாக பணி புரியும் தொழிலாளர்கள் உள்ளனர். உண்மையில் அரசின் நலத் திட்டங்களுக்கு பிரதானமான அச்சாணியாக இந்த தொழிலாளர்கள் உள்ளனர். இவர்களது ஊதியத்தை பறிப்பது, சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கு பங்களிப்பை பெற்று கொண்டு மோசடி செய்வது என்னும் சொல்லொனா துயரங்களை எதிர்கொண்டே இந்த தொழிலாளர்கள் அரசின் திட்டங்களுக்கு அச்சாணியாக திகழ்கிறார்கள். தமிழ்நாட்டின் குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் பொங்கல் பரிசு வழங்க முன் வந்துள்ள தமிழக அரசு, தனது திட்டங்களுக்கு அச்சாணியாக விளங்கும் பெரும் பகுதி தொழிலாளர்களுக்கு ரூ. 1000/ பொங்கல் பரிசு கூட வழங்க வழி செய்யாமல் இருப்பது பாரபட்சமான செயலாகும்.

எனவே நிரந்தரம், காலமுறை ஊதியம் பெறும் தொழிலாளர்களுக்கு வழங்கும் பொங்கல் பரிசு தொகை ஒப்பந்தம், வெளிச்சத்தை, திட்டம் என எந்தப் பெயரில் பணி புரிந்தாலும் ஒரு கண்ணில் வெண்ணெய் ஒரு கண்ணில் சுண்ணாம்பு என்ற முறையை கைவிட்டு அனைவருக்கும் பொங்கல் பரிசு தொகை தமிழ்நாடு அரசு வழங்க முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# சென்னை ஐஐடியில் இடஒதுக்கீட்டை முறையாக அமல்படுத்திடுக!

## தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில குழு கூட்டம் தீர்மானம்

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலக் குழு கூட்டம் மாநில துணைத் தலைவர் பொ. லிங்கம் எக்ஸ் எம்.பி. தலைமையில் சென்னை எழும்பூர் இக்சா மையத்தில் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் இன்றைய அரசியல் நிலை குறித்து விளக்கிப் பேசினார். அகில இந்திய தலித் உரிமைகள் இயக்கத்தின் தேசியத் தலைவர் புதுவை அ.ராமமூர்த்தி தேசியக்குழு முடிகளை விளக்கிப் பேசினார். அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநில செயலாளர் சீ.தினேஷ் வாழ்த்தி பேசினார்.

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளர் மு.வீரபாண்டியன் எதிர்கால இயக்கங்கள் குறித்து பேசினார். இக் கூட்டத்தில் மாநில செயலாளர்கள் அசரப் அலி, கீ.சு.குமார், எஸ்.கே.சிவா மற்றும் லதா எக்ஸ்.எம்.எல்.ஏ., லி.உதயகுமார், சுகுமாறன், செண்பகம், ஜி.சுப்பிரமணி, என்.எஸ். பிரதாப் சந்திரன், இரா.மோ.சந்தோஷ்குமார், சு.பழனிக்குமார், சு.பாஸ்கர், லெனின் முருகானந்தம், ராமச்சந்திரன், பி.எஸ்.எல்லப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு: சென்னை ஐஐடியில் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் என 596 பேர் பணிபுரிகிறார்கள். இதில் இட ஒதுக்கீடு அடிப்படையில் பட்டியல் இனப் பிரிவில் 89 பேர் (15%) இருக்க வேண்டும். ஆனால், 16 பேர் மட்டுமே இருக்கிறார்கள். பழங்குடியினப் பிரிவில் 45 பேர் (7.5%) இருக்க வேண்டும். ஆனால் மூன்று பேர் மட்டுமே இருக்கிறார்கள். இதர பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் 160 பேர் (27%) பணியில் இருக்க வேண்டும். ஆனால் இட ஒதுக்கீடு பின்பற்றப்படாததால் பொது பிரிவில் 27% என்பதற்கு பதிலாக 86.60% பேர் பணியில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இத்தகைய பாகுபாடு கல்வித்துறையில் இருப்பது வேதனை அளிக்கிறது. மிக வன்மையாக கண்டிக்கத்தக்கது. இதன் மூலம் சென்னை ஐஐடியில் திட்டமிட்டே இட ஒதுக்கீட்டை தவிர்க்கிறது என்பது தெளிவாக தெரிகிறது. மத்திய, மாநில அரசுகளால் நடத்தப்படும் கல்வி, தொழில், அரசு நிறுவனங்களில் உள்ள பணியிடங்கள் அனைத்தும் சாதி அடிப்படை யிலான இட ஒதுக்கீட்டின் கீழ் நிரபப்பட வேண்டும் என்பது இந்திய அரசமைப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனை மீறி சென்னை ஐஐடி தொடர்ந்து இட ஒதுக்கீட்டை கடைபிடிக்காமல் உதாசீனப்படுத்துவது சமூக நீதிக்கு எதிரான செயல் மட்டுமல்ல, அப்பட்டமான விதிமீறலாகும் என்பதனை மாநிலக் குழு கூட்டம் சுட்டிக்காட்டி வன்மையாக கண்டிப்பதோடு அல்லாமல் மாநில அரசு உடனடியாக தலையிட்டு ஐஐடியில் இட ஒதுக்கீட்டை முறைப்படுத்தி உறுதிப்படுத்திட வேண்டுமென்று மாநிலக் குழு வலியுறுத்துகிறது.

தமிழ்நாட்டில் வாழும் தலித் மக்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்கி உள்ள குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டையில் மற்றும் ஆதார் அட்டையில் பயன்படுத்தப்பட்டு வரும் அரசு ஆவணங்கள் மூலம், ஆதிராவிடர் காலனி, அருந்ததி சேரி என்கிற அடையாள பெயர்களை உடனடியாக நீக்க வேண்டும். அவர்கள் வாழும் பகுதிகளில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, சிற்றூராட்சிகளில் உள்ள ஆவணங்களில் உடனடியாக நீக்கம் செய்து அரசிதழில் வெளியிட வேண்டும் என்று மாநில குழு கேட்டுக் கொள்கிறது.

2020 –2021 ஆம் ஆண்டுகளுக்கு தமிழகத்தின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் நிறைவேற்றப்படும் நலத்திட்டங்கள் நிதிஒதுக்கீடு ரூ. 3552 கோடியாகும். இதில் ரூ.249 கோடியே 67 லட்சம் பயன்படுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது மிகுந்த கவலை அளிக்கிறது.

இது கடந்த காலத்தில் 2016 முதல் கடந்த ஐந்தாண்டு காலத்தில் ரூ.15,197 கோடியில் ரூ.14,265 கோடி ரூபாய் மட்டுமே பயன்படுத்தப்பட்டு மீதி 927 கோடி ரூபாய் திருப்பி அனுப்பப்பட்டதை அரசு நியாயப்படுத்துகிறது. உள்ளபடியே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் அனைத்து சமூக மக்கள் வாழ்க்கை வசதிகளிலிருந்து வேறுபட்டு, கஷ்டங்களுடன் வாழ்ந்து வருகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் குடியிருக்க வீடு, நிலம் இல்லாமல் ஏராளமான மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

கடந்த காலங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இலவச நிலங்கள் ஏற்கனவே பறிபோய் கொண்டு இருக்கிறது. நலத்திட்ட ஒதுக்கீடு என்பது முடக்கப்பட்டுள்ளது. தாட்கோ திட்டங்கள் பெயரளவில் சுமாராக நடைபெற்று வருகிறது. எனவே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நீதி மடைமாற்றம் செய்வதை கைவிட்டு முறையாக முழுமையாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி மாநிலக்குழு கேட்டுக்கொள்கிறது. இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## இந்த வார தம்பிக்குறள்

### 101. உரிமை

**கடமை விரும்பி உரிமை மறந்தால்**
**விரும்பி உரிமை வரும்**

நாம் செய்ய வேண்டிய பணிகளை (கடமைகளை) ஈடுபாட்டுடன் செய்தால், உரிமையைப் பற்றி சிந்திக்காதிருப்பினும், உரிமை விருப்பமுடன் தேடிக் கொண்டு வந்து சேரும்.

**உரிமை உவப்ப உவப்ப உயரும்**
**கடமைதான் ஒன்றுக் கடுத்து.**

நாம் கடமையை விரும்பிச்செய்ய செய்ய உரிமையானது மகிழ்ச்சியுடன் அடுக்கடுக்காக வந்து சேரும். (உரிமை மகிழ்வுடன் வர வர கடமை செய்யும் ஆர்வம் பெருகும் எனவும் கொள்க.)

# உக்ரைன் - ரஷ்யா இடையிலான மோதல்

# அமெரிக்க - ரஷ்ய போரே!

## "உலக சமாதான, மதநல்லிணக்க மக்கள் ஒற்றுமை" கருத்தரங்கில் பல்லப் சென்குப்தா பேச்சு




"உலக சமாதான, மதநல்லிணக்க மக்கள் ஒற்றுமை" கருத்தரங்கம் டிச.22 அன்று சென்னையில் நடைபெற்றது.

மனிதகுல முன்னேற்றத்திற்கு சமாதானம் மிகவும் அவசியம். அமெரிக்காவின் மேலாதிக்கம் மற்றும் அதன் தலைமையிலான நேட்டோ ராணுவ கூட்டணியின் விரிவாக்கக் கொள்கையால், ரஷ்ய உக்ரைன் போர் ஏற்பட்டு, அது உலகையே பாதித்து வருகிறது.

அணு ஆயுதப் போராக இது மாறிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இப் பிரச்சனைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். ஆயுதங்கள் மற்றும் ராணுவத்திற்காக உலக நாடுகள் அதிக நிதியை,செல்வாதாரங்களை செலவு செய்கின்றன.

இதனால் மருத்துவம்,கல்வி, சத்தான உணவு, பாதுகாப்பான குடிநீர், வீட்டு வசதிகளுக்காக செலவு செய்ய வேண்டிய தொகை ராணுவத்திற்காக, போர் தளவாடங்களுக்காக மடை மாற்றம் செய்யப்படுகின்றன.

இதனால் உலகம் முழுவதும் ஏழை எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். அதே சமயம், ராணுவத் தளவாடங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தங்கள் லாபத்தை பல மடங்காக பெருக்கிக் கொள்கின்றன.

இந்நிலையில் ,சாதி, மத, இன,மொழி, நிற வெறி உலக மக்களின் ஒற்றுமையை பாதிக்கிறது. ஒன்றிய பா.ஜ.க அரசு மத ரீதியாக மக்களை பிளவுபடுத்துகிறது. தனது "இந்துத்துவா" மத வெறி அரசியலை மூர்க்கத்தனமாக நடைமுறைப்படுத்துகிறது. இது நாட்டின் ஒற்றுமை ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இது கவலை அளிக்கிறது.

எனவே, உலக சமாதானம் காக்கப்பட வேண்டும். மதநல்லிணக்கமும், மக்கள் ஒற்றுமையும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு, "உலக சமாதான, மதநல்லிணக்க மக்கள் ஒற்றுமை" என்ற தலைப்பில், அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகம் சார்பில், சென்னையில் உள்ள கேரள சமாஜத்தில் கருத்தரங்கம் நடைபெற்றது. AIPSO வின் அகில இந்தியத் தலைவர் டிட்டி யாதவ் ரெட்டி, மாநில தலைமைக் குழுத் தோழர்கள் பேராசிரியர் வி.பி.ஆத்ரேயா கே.முத்தியாலு ஆகியோர் கருத்தரங்கிற்கு தலைமை தாங்கினர்.

AIPSO வின் மாநில துணைப் பொதுச் செயலாளர் பி.செந்தில்குமார் வரவேற்புரை யாற்றினார்.

இக் கருத்தரங்கில், உலக சமாதானக் கவுன்சிலின் தலைவரும், அகில இந்திய பொதுச் செயலாளருமான பல்லப்சென் குப்தா, பொதுச்செயலாளர் அருண்குமார், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின், தமிழ்நாடு மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், AIPSO வின், தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர்கள் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், ஐ.ஆறுமுகநயினார் ஆகியோர் உரையாற்றினர்.

### பல்லப்சென் குப்தா

அகில இந்திய பொதுச்செயலாளர் பல்லப்சென் குப்தா பேசுகையில், உக்ரைன் ரஷ்யா இடையிலான போர் பல்வேறு பிரச்சனைகளை ஏற்படுத்தியுள்ளது.

இது அந்த இரண்டு நாடுகளுக்கு இடையிலான போர் மட்டுமல்ல. இது ரஷ்யா அமெரிக்கா இடையே நடைபெறும் போர் ஆகும். ஐரோப்பிய யூனியன் மற்றும் அமெரிக்கா, கனடா உள்ளிட்ட 31 நாடுகளை உள்ளடக்கிய நேட்டோ அமைப்பின் கொடூரமான திட்டத்தின் ஒருபகுதியே இந்த போர்.

அந்த போரின் அடிப்படைக் காரணங்களை மக்களிடம் அம்பலப்படுத்தும் கடமை நம்மைப் போன்றவர்களுக்கு உள்ளது. உக்ரைனின் மேற்குப் பகுதியில் வசிப்பவர்கள் கத்தோலிக்க தேவாலயத்தின் கட்டுப்பாட்டில் உள்ளனர். அந்நாட்டின் கிழக்குப் பகுதியில் ரஷ்ய மொழிபேசுவோர், ரஷ்ய பழமைவாத கிறிஸ்துவ தேவாலயங்களின் கட்டுப்பாட்டில் உள்ளனர். எனவே இந்த மோதல் இரு நாடுகளுக்கு இடையிலான மோதல் மட்டும் அல்ல. இந்த இரு மதப் பிரிவினருக்கு இடையே எழுந்துள்ள மோதலும் தான்.

> பாலஸ்தீனம் சுதந்திரம் அடைவதற்கான ஆதரவு தந்தநாடு இந்தியா. வியட்நாம் பிரெஞ்சு ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற ஆதரவு அளித்தோம். தென் ஆப்பிரிக்காவில் நிறவெறிக்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவு அளித்தோம். எனவே உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் சுதந்திரப்போராட்டம் வெற்றிபெற ஆதரவு அளித்த நாடு இந்தியா. பங்களாதேஷ் சுதந்திரம் அடைய நாம் ஆதரவு அளித்தோம். அப்படிப்பட்ட பாரம்பரியத்தில் வந்தவர்கள் நாம். ஆனால் இன்று பாஸ்தீனத்தில் ரத்தம் வடிகிறது. மோடி அரசு ஆதரவுக் கரம் நீட்ட மறுக்கிறது.

நாட்டில் இன்று ஆட்சியாளர்கள் மக்களை பிளவு படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். மக்கள் ஒற்றுமையுடன் செயல்படும் போது பாஜக அல்ல எந்த சக்தியாலும் நம்மைப் பிரிக்கமுடியாது. பாஜக தொடர்ந்து அதிகாரத்தில் இருந்தால் நாட்டுமக்களின் ஒற்றுமைக்கு பேராபத்து. எனவே அதை முறியடிக்க மக்கள் ஒற்றுமையை பலப்படுத்துவோம் என்றார் சென்குப்தா.

### இரா.முத்தரசன்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் பேசுகையில், உலகில் வாழும் எந்த மக்களும் பசி யால் வாடக் கூடாது என்பதைத்தான் அனைவரும் எடுத்துரைத் துள்ளனர். ராமாயணத்தில் ராமன் ஆட்சியிலே கொள்வாரும் இல்லை, கொடுப்பாரும் இல்லை என்று கூறப்படுகிறது. ராமன் ஆட்சி நடத்தினாரா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால் அந்த ராமன் ஆண்டதாக கூறப்படும் இந்த நாட்டில்தான் இன்றைக்கு தினசரி 20 கோடி மக்கள் இரவு உணவுக்கு வழியில்லாமல் பட்டினியால் உறங்குகிறார்கள்.

மதமோதல்களால் பலர் உயிரிழக்கிறார்கள். போர் இல்லாத உலகில்தான் மக்கள் நிம்மதியாக வாழ முடியும். அப்படியென்றால் உலகம் முழுவதும் பொதுவுடைமை சமூகம் அமைய வேண்டும். ஏகாதிபத்திய நாடுகள் இருக்கும் வரை போர் தொடர்ந்து கொண்டே இருக்கும். ஒருவர் ஒரு பொருளை உற்பத்தி செய்வது விற்பனை செய்வதற்குத்தான். அதுபோல் அமெரிக்காவில் உள்ள நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் ராணுவத் தளவாடங்கள், அணு ஆயுதங்கள் விற்பனை செய்ய வேண்டும் என்றால் உலகில் ஏதேனும் ஒரு இடத்தில் போர் நடைபெற வேண்டும். அதுதான் ரஷ்யா உக்ரைன் போர்.

உக்ரைனை ஏகாதிபத்திய நாடுகள் தன் கீழிருந்து செயல்பட வேண்டும் என்று நினைக்கிறது. உக்ரைன் நேட்டோ நாடுக ளோடு இணைந்தால் அது பேராபத்தாக முடியும். எனவே நேட்டோ வோடு சேராதே என ரஷ்யா அறிவுறுத்துகிறது.

> ரஷ்யா உக்ரைன் மீது படையெடுத்தால் நாங்கள் படைகளை அனுப்புவோம் என நேட்டோ நாடுகள் கூறின. ஆனால் இதுவரை எந்த நாடும் நேர டியாக ஒரு ராணுவ வீரரை கூட அனுப்பவில்லை. ஆனால் அதற்கு மாறாக என்ன உக்ரைனுக்கு அனுப்பப்படுகிறது என்றால் ராணுவத் தளவாடங்களும், அணு ஆயுதங்களும். இவை அனைத்தும் இலவசமாக அல்ல, அனைத்தும் விற்பனை செய்யப்படுகிறது. இதுதான் ஏகாதிபத்திய நாடுகளின், கார்ப்பரேட் நிறுவனங்களின் சதித் திட்டம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும், இந்த செய்தியை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும்.

முதலாளித்துவம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள மதத்தை, சாதியை பயன்படுத்துவது, கடவுளை, மூட நம்பிக்கையை பயன்படுத்துவது என எல்லா சாகசங்களையும் மேற்கொள்ளும். இதனை முறியடிக்க வேண்டும் என்றால், போர் இல்லா உலகம் அமைய வேண்டும். அதற்கு பொதுவுடைமைச் சமூகம் உலகம் முழுவதும் அமைய வேண்டும். அதை நோக்கி பய ணிப்போம், மதவாத, பாசிச சக்திகளை மக்களிடத்திலே அம்பலப் படுத்தி தனிமைப்படுத்துவோம் எனக் கேட்டுக் கொண்டார்.

### கே.பாலகிருஷ்ணன்

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் பேசுகையில், உலக சமாதானம் என்பது நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையுடன் தொடர்புடையது. உலகில் போர் நடந்து கொண்டே இருக்கிறது. போர் கொத்துக் கொத்தாக மக்களை கொன்று குவித்துக் கொண்டிருக்கிறது. இந்திய, தமிழக வரலாற்றில், நாம் எல்லாம் தமிழ்ச்சமூகம் என்று பெருமையோடு, சேர, சோழ, பாண்டியர் குறித்தெல்லாம் பெருமையோடு பேசுகின்றோம். ஆனால் சேரர்களுக்கும், சோழர்க ளுக்கும், பல்லவர்களுக்கும் பாண்டியர்களுக்கும் இடையே நடைபெற்ற போரில் எவ்வளவு மக்கள் மடிந்திருக்கிறார்கள் என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும்.

நவீன அணு ஆயுதம் மூலம் தற்போதைய தலைமுறை மட்டுமல்லாமல், அடுத்த தலை முறையினரும் கூட வாழ முடியாது அல்லது உடல் ஊனமாகத் தான் பிறக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இரண்டாவது உலகப் போரின் போது வீசப்பட்ட இரண்டு அணு குண்டுகளின் தாக்கம் இன்றைக்கும் இருக்கிறது. அப்படிப்பட்ட கொடூரமான அணு ஆயுதங்கள் தயாரிக்கப்படுகின்றன.

இரண் டாவது உலகப் போர் முடிந்து விட்டது. இனி மூன்றாவது உலகப் போர் வந்தால் உலகின் வரலாறு முடிந்து விடும். ஒட்டுமொத்த மனித சமூகத்தையே அழிக்கக் கூடிய அளவிற்கு இன்றைக்கு ஆயுதங்களை உற்பத்தி செய்து குவித்து வைத்திருக்கிறார்கள்.

> ஏன், போர் இல்லாமல் மனித சமூகம் வாழ முடியாதா? எத்தனையோ மதங்கள் தோன்றி யிருக்கின்றன, எத்தனை யோ சிந்தனையாளர்கள் தோன்றியிருக்கிறார்கள். மதங்கள் மனிதனை பக்குவப்படுத்துவதற்காகத்தான் உருவாக்கப்பட்டதா கக் கூறப்படுகிறது. ஆனால் மதங்கள் தோன்றினாலும், எத்தனையோ சிந்தனையாளர்கள் தோன்றினாலும் கூட உலகில் போர் நின்றபாடில்லை.

உலகில் என்றைக்கு தனியுடமையை மையப்படுத்தும் ஆட்சி அதிகாரம் உருவானதோ, அன்றைக்கு உருவானதுதான் போர் என்பதை மறந்து விடக்கூடாது. அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகம் முழுவதும் ஆயிரம் இடங்களில் ராணுவ மையத்தை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். எதற்காக இந்த ராணுவ மையங்கள்? அதன் மூலம் ஒட்டுமொத்த உலகையே மிரட்டிக் கொண்டிருக்கிறது அமெரிக்க ஏகாதிபத்தியம். விபத்தாக அங்கே இருக்கிற அணு ஆயுதங்கள் வெடித்தால் கூட உலகம் அழிந்து போகும்.

அமெரிக்கா உருவான 1700ஆம் ஆண்டு காலத்தில் இருந்து இன்று வரை நடைபெற்ற அனைத்துப் போரிலும் அமெரிக்காவிற்கு தொடர்பு இருக்கும். முதலாவது உலகப் போரில் ஒரு கோடி பேரும், 2ஆவது உலகப் போரில் மூன்று கோடி பேரும் இறந்தார்கள் என்று கணக்கிடப்பட்டது. ஆனால் 3ஆவது உலகப் போர் நடைபெற்றால் 600 கோடி பேரும் அழிந்து போவார்கள். எவ்வளவு பேர் மடிந்தார்கள் என கணக்கிட ஒருவர் கூட இருக்க மாட்டார்கள்.

தினசரி 150க்கும் மேற்பட்ட தினக்கூலி தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். அரைமணி நேரத்திற்கு ஒரு விவசாயி தற்கொலை செய்து கொள்கிறான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் கடந்த 2021ஆம் ஆண்டு உலகம் முழுவதும் ராணுவத்திற்காக 2 லட்சம் கோடி டாலர் செலவு செய்யப்பட்டுள் ளது. இவையெல்லாம் யாருடைய பணம், உழைப்பாளி மக்க ளின் பணம் என்பதை மறந்துவிடக் கூடாது என்றார். இந்த 2 லட்சம் கோடி டாலரை மக்களின் மேம்பாட்டிற்கு செலவழித்தால் உலகிலே பசியே இருக்காது, உலக மக்கள் அனுபவிக்கும் பல கொ டுமைகளுக்கு தீர்வு ஏற்பட்டிருக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் அமைப்பின் மாநில பொதுச்செயலாளர்கள் ஜி.ஆர்.ரவீந்திரநாத், ஐ.ஆறுமுகந யினார் ஆகியோரும் பேசினர். மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் டி.செந்தில் குமார் நன்றி கூறினார்.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 31.12.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registar of Newspapers for India, Under Regd No: 1222/57

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு நாள்:

# கட்சியின் முன் உள்ள சவால்கள் மற்றும் பணிகள்



**டி.ராஜா**

**1925 டிசம்பர் 26 இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாற்றில் மட்டுமல்ல, பிரிட்டிஷ் ஆட்சியின் ஒரு காலனி என்ற நிலையில் இருந்து சுதந்திரம் பெற்ற ஒரு ஜனநாயக குடியரசு என்ற நமது நாட்டின் நீண்ட பயணத்திலும் நீக்கமற நிறைந்திருக்கும் நாள்!**

அந்நாளில் தான், தாய்த்திருநாட்டின் விடுதலையில் பற்றுறுதி கொண்ட புரட்சியாளர்கள் சிலர் கான்பூர் நகரில் ஒன்று கூடினர்; நமது நாட்டின் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு ஒரு வலுவான அடித்தளத்தை அமைத்துத் தந்தனர். 1925 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு மாநாடு, தேசம் முழுவதிலும் இருந்த, பொதுவான இலட்சியம் கொண்ட, பல்வேறு கம்யூனிஸ்ட் குழுக்களையும், புரட்சியாளர்களையும் சங்கமிக்கச் செய்தது.

ரஷ்ய புரட்சி மற்றும் தொழிலாளர்களின் அரசை நிறுவுவதில் அது பெற்ற மகத்தான வெற்றியின் விளைவாக, உலகம் முழுவதும் கம்யூனிசத்தின் மீதான பற்று பெருகி வளர்ந்து கொண்டிருந்தது. ரஷ்ய புரட்சி இந்தியா மீது குறிப்பிட்டுச் சொல்லத்தக்க தாக்கத்தைக் கொண்டிருந்தது. தங்கள் நாடு பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தில் இருந்தும், சுரண்டலில் இருந்தும் விடுதலையடைய வேண்டும் என்று விரும்பிய எண்ணற்ற கம்யூனிஸ்டுகளை, காலனிகள் குறித்த கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கை ஈர்த்தது. மார்க்சியம் எனும் மாபெரும் சித்தாந்தத்தாலும், ரஷ்ய புரட்சியின் உயர்ந்த இலட்சியங்களாலும், நமது நாட்டின் சமூக சீர்திருத்தவாதிகள் மேற்கொண்ட சமத்துவத்திற்கான பணிகளாலும் உத்வேகம் பெற்ற இளம் கம்யூனிஸ்ட் கட்சி, வெகு விரைவில், தேச விடுதலைப் போராட்டத்திலும், சோஷலிச சமுதாய நிர்மாணத்திற்கான போராட்டத்திலும் ஒரு மாபெரும் சக்தியாக உருவெடுத்தது.

கம்யூனிஸ்டுகளால் ஏற்பட்ட அச்சுறுத்தல் குறித்து பிரிட்டிஷ் அரசாங்கம் நன்கு அறிந்திருந்தது. எனவே, தவழும் பருவத்திலேயே, கம்யூனிஸ்ட் இயக்கத்தை அழித்திட, அனைத்து வகையிலும் முயன்றது. இந்திய மக்களிடையே பரவிக் கொண்டிருந்த புரட்சிக்கனலை அணைத்திட, தொழிலாளர்கள் மற்றும் கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கு எதிராகப் பல்வேறு சதிவழக்குகள் தொடுக்கப்பட்டன. நமது முன்னோடிகளின் மனவுறுதி மற்றும் துணிவைப் பிரிட்டிஷாரால் வெற்றிகொள்ள இயலவில்லை. கம்யூனிஸ்ட்டுகள் பிரிட்டிஷாரை வீரத்துடன் எதிர்த்துப் போராடினர்; ஒரு புரட்சிகர செயல்திட்டத்தின் அடிப்படையில், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களை அணிதிரட்டினார்கள்.

பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடிய போதும், மன்னர்கள் மற்றும் ஜமீன்தாரர்கள் போன்ற உள்நாட்டு சுரண்டல் பேர்வழிகள், பாகுபாடு கொண்டோரை எதிர்த்துப் போராடிய போதும், கம்யூனிஸ்டுகள் புரிந்த மகா உன்னதமான தியாகங்கள், நமது சுதந்திரப் போராட்ட இயக்கத்தினுடைய மகத்தான வரலாற்றின் ஒரு பகுதியாகும். சுதந்திரப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளின் பங்கேற்பானது, அந்தப் போராட்டத்தின் செயல்திட்டத்தை மேலும் தீவிரப்படுத்தியது. கம்யூனிஸ்டுகள் நாட்டு மக்களுக்கான கோரிக்கைகளை முன்வைத்தார்கள்; வென்றெடுத்தார்கள். பரிபூரண சுதந்திரத்திற்கான கோரிக்கை முதல் நிலவுடைமை ஒழிப்பு கோரிக்கை வரை, கம்யூனிஸ்டுகளின் அர்ப்பணிப்பு வருங்கால இந்திய குடியரசின் செயல்திட்டத்தை மேலும் மக்கள் நலன் சார்ந்ததாக, சமத்துவம் நிறைந்ததாகச் செய்தது.

இத்தகு மாபெரும் பாரம்பரியத்தையும், பலத்தையும் கொண்ட கம்யூனிஸ்ட் இயக்கம், தற்போது தேர்தல் களத்தில் தளர்ச்சியடைந்து இருப்பதைக் காண்கிறோம். நமது கட்சியும், அமைப்பு ரீதியான கம்யூனிஸ்ட் இயக்கமும், இன்னும் இரண்டு ஆண்டுகளில் நூற்றாண்டை நிறைவு செய்யவுள்ள இந்தச் சூழலில், இந்தப் பிரச்சனை குறித்து நாம் ஆழ்ந்து சிந்தித்து, ஒரு புத்துயிர் பெற்ற சக்தியாக மீண்டும் எழுச்சி பெற வேண்டும்.

தேர்தல் பின்னடைவுகளுக்கான காரணிகள் கண்டறியப்பட்டு அகற்றப்பட வேண்டும். மக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சனைகளை முன்னெடுக்க வேண்டும். அதற்கு முன்னதாக, கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தின் பொருத்தப்பாடு உலகில் அதிகரித்து வருவதை நாம் தெளிவாக உணர்ந்திட வேண்டும். பல தசாப்தங்களாகப் பின்பற்றப்பட்டு வரும் நவீன தாராளமய கொள்கைகள் மக்களை, இருப்போர் மற்றும் இல்லாதோர் என்று இரு பெரும் பிரிவாகப் பிரித்துள்ளது. செல்வ வளங்களின் குவிப்பு முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இப்போது அதிகரித்துள்ளது.



நவீன தாராளமய தனிமனித கோட்பாடு ஏற்படுத்தியுள்ள சிக்கல்கள் அனைத்து தலைமுறையினரையும் பிடித்து உலுக்குகிறது. இயற்கையின் இயங்கியலைப் புரிந்து கொள்வதில் தோல்வியுற்ற முதலாளித்துவத்தின் விளைவாக உண்டான காலநிலை மாற்ற நெருக்கடியானது உலகம் முழுவதிலும் உள்ள மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களை அச்சுறுத்தி வருகிறது. எங்கெல்லாம், இடதுசாரிகள் இந்தப் பிரச்சனைகளை முன்னெடுத்தார்களோ, அங்கெல்லாம், குறிப்பாக இலத்தீன் அமெரிக்காவில், அவர்களின் ஆதரவுத் தளங்கள் பன்மடங்கு பெருகி இருக்கிறது. ஆகையினால், இடதுசாரிகள் சரிவடைந்துவிட்டார்கள் என்று கூறுவது தவறாகும்.

இந்தியாவில், சோஷலிச கொள்கையின் மீது ஈர்ப்பு கொண்ட மக்களை தன்பால் ஈர்த்துக் கொள்ள ஒவ்வொரு கட்சியும் ஏதோ ஒரு வகைப்பட்ட சோஷலிசத்தைக் கூறிவருகிறது. சமுதாயத்தின் பல்வேறு பிரிவு மக்களிடையே இடதுசாரிகள் கொண்டிருக்கும் செல்வாக்கும், அவர்களின் தேர்தல் வெற்றிகளும் ஒன்றோடு ஒன்று பொருந்தாமல் இருப்பதை நம்மால் காண முடிகிறது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள், தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் பண பலம் மற்றும் வன்முறை ஆகியவற்றின் அதிகரித்து வரும் பாத்திரம் மிகவும் முக்கியமானது ஆகும். ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களைச் செலவழித்து முதலாளித்துவ கட்சிகள் செய்து வரும் தேர்தல் பணிகள் கற்பனைக்கும் எட்டாத விலையுயர்ந்த காரியமாகிவிட்டது. இது தேர்தல் பணிகள் மீதான கட்டுப்பாட்டை கார்ப்பரேட் நிறுவங்களிடம் அளிப்பதாக இருக்கிறது.

சமுதாயத்தில் மையப்படுத்துதல் (Polarization) என்பது அச்சுறுத்தும் அளவிற்கு அதிகரித்து வருகிறது. அதனைத் தூண்டிவிடும் அவப்பெயருக்கு ஊடகங்கள் உள்ளாகியுள்ளன. தகவல் தருவது மற்றும் பெறுவதிலும் கூட, சமதள பண்பு சிதைக்கப்பட்டு வருகிறது. வாக்காளர்களிடையே, அவர்களின் பொருளாதார நலன்களைக் காட்டிலும், வகுப்புவாத, பாசிச மற்றும் பிரிவினைவாத செயல்திட்டமே அதிகமாகத் திணிக்கப்படுகிறது.

அழிவுகரமான நவீன தாராளமய பொருளாதார கொள்கைகைகளினால் ஏற்பட்டுள்ள விலையேற்றம், வேலைவாய்ப்பின்மை மற்றும் இதர வாழ்வாதார பிரச்சனைகளால் பொதுமக்கள் அல்லலுற்று வருகிறார்கள். இந்தப் பிரச்சனைகளுக்கு எதிரான பொதுமக்களின் போராட்டங்கள், கார்ப்பரேட் ஆதரவு ஊடகங்களால் மறைக்கப்படுகிறது. பதிவான வாக்குகளில் அதிக வாக்குகள் பெறுபவரே வெற்றிபெற்றவராக அறிவிக்கப்படும் தற்போதைய தேர்தல் முறை பாரபட்சம் உடையதாகும். குதிரை பேரமும், மத்திய அரசாங்கத்தின் முகமைகளும் தவறாகப் பயன்படுத்தப்பட்டு, தேர்தல் ஜனநாயக முறையை ஸ்திரத்தன்மையற்றதாக்கி, அழித்தொழிப்பது தான் தற்போது பரவலாகி வருகிறது.

அரசியல் வாழ்வில் ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு வாக்கு என்பது உண்டு. ஆனால், சமூக மற்றும் பொருளாதார வாழ்வில் ஒவ்வொரு மனிதருக்கும் ஒரே மதிப்பு என்பது இல்லை எனும் டாக்டர் அம்பேத்கரின் கூற்றை விரிவான தேர்தல் சீர்திருத்தம் இல்லாத நிலை உறுதிப்படுத்துகிறது. சமத்துவம் மற்றும் சமூக நீதி குறித்த பிரச்சனை தொடர்கிறது.

இத்தகையதொரு சூழலில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இதர இடதுசாரி கட்சிகள், தேர்தல் களத்திலும், மக்களின் நம்பிக்கையைப் பெற்றிடும் அளவிற்குத் தங்களின் உத்திகளைப் புனரமைத்துக் கொள்ள வேண்டும். மக்கள் கோரிக்கைகளை நாம் எழுப்பும் போது போராட்டக் களத்தில் உண்டாகும் பெருந்திரள் பங்கேற்பு தேர்தல் களத்திலும் எதிரொலிக்க வேண்டும். அதற்கு, சமகாலத்தின் முக்கியத்துவம் நிறைந்த பிரச்சனைகளை நாம் எழுப்பும் போது, இந்திய சமூகத்தின் அடிப்படையான பிரச்சனைகளையும் நாம் முன்னெடுக்க வேண்டும். நமது போராட்டங்கள் வர்க்க, சாதிய மற்றும் பாலின எதார்த்தங்களை கருத்தில் கொண்டு, சமத்துவமின்மை, பாகுபாடு மற்றும் ஆணாதிக்க கட்டமைப்புகளை உடைத்தெறிய முயல வேண்டும்.

சமுதாயத்தில் இடதுசாரிகள் பெற்றிருக்கும் செல்வாக்கிற்கு இணையான தேர்தல் வெற்றிகளைப் பெற்றிட, பிரச்சனைகளுக்கான நீடித்த வெகுமக்கள் இயக்கமும், தேர்ந்த தேர்தல் கூட்டும் வித்திடும். தேர்தலில் இடதுசாரிகள் பின்னடைவைச் சந்தித்திருந்தாலும், கம்யூனிசம் தான் அழிவுகரமான சித்தாந்தம் என்று பிரதமர் நரேந்திர மோடி குறிவைத்துத் தாக்குகிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

**கம்யூனிஸ்டுகளின் செயல்திட்டமும், ஆர்.எஸ்.எஸ் செயல்திட்டமும் ஒன்றுக்கொன்று நேரெதிராக முரண்பட்டு நிற்கின்றன. கம்யூனிஸ்டுகளால் மட்டுமே ஆர்.எஸ்.எஸ் க்கு எதிரான தத்துவார்த்த மாற்றை வழங்க முடியும். ஆர்.எஸ்.எஸ் ஊழியரான பிரதமர் இதனை நன்குணர்ந்தவர் என்பதால், கம்யூனிஸ்டுகளை இகழ்ந்துரைக்கும் எந்தவொரு வாய்ப்பையும் அவர் நழுவவிடுவதில்லை.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்ட ஆண்டான அதே 1925 ல் தான் ஆர்.எஸ்.எஸ் அமைப்பும் நிறுவப்பட்டது. அதன் அரசியல் பிரிவான பா.ஜ.க மூலமாக அரசியல் அதிகாரத்தை ஆர்.எஸ்.எஸ் கைப்பற்றியுள்ளது. கார்ப்பரேட் நிறுவனங்களின் ஆதரவுடன், இந்து தேசம் எனும் அதன் வகுப்புவாத, பாசிச செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்திட பா.ஜ.க ஆர்.எஸ்.எஸ் அணி மூர்க்கத்தனமாக முயலுகிறது. கார்ப்பரேட் வகுப்புவாத பாசிசம் தேசத்தின் ஒற்றுமை மற்றும் பன்மைத்துவத்தைத் தற்போது அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

எனவே, அரசியலமைப்பையும், மதச்சார்பற்ற கட்டமைப்பையும் தகர்த்தெறியத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ் ன் அபாயகரமான சூழ்ச்சிகளுக்கு எதிரானதொரு நீடித்த, அரசியல், தத்துவார்த்த மற்றும் சமூக எதிர்ப்பு/சவால் என்பது கம்யூனிஸ்டுகளிடம் இருந்து மட்டுமே வெடித்தெழ முடியும். நமது கட்சியை அனைத்து மட்டங்களிலும் வலுப்படுத்துவதன் மூலம் நாம் இந்தச் சவாலை எதிர்கொள்ள வேண்டும். கட்சியின் தற்போதுள்ள தளங்களை ஒருங்கிணைப்பது, புதிய தளங்களுக்குக் கட்சியை விரிவுபடுத்துவது ஆகியவற்றை நாம் மேற்கொள்ள வேண்டும். உழைக்கும் மக்களை அரசியல்படுத்துவதற்கான அமைப்புரீதியிலான தத்துவார்த்த கல்வியைக் கட்சி தொடர்ந்திட வேண்டும். இந்தியக் குடியரசைப் பாதுகாத்திடும் போராட்டத்தைத் தீவிரப்படுத்திட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், இடதுசாரிகளும் வலுப்பெற வேண்டியது மிகவும் முக்கியம் ஆகும்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை வலுப்படுத்திடவும், இடதுசாரி ஒற்றுமையை மேலும் ஒருங்கிணைக்கவும், ஆர்.எஸ்.எஸ். –பா.ஜ.க. வை ஆட்சி அதிகாரத்தில் இருந்து அகற்றிட ஜனநாயக, முற்போக்கு சக்திகளைக் கொண்ட பரந்துபட்ட அணியை உருவாக்கிடவும், வாழ்வாதார பிரச்சனைகளுக்கான வெகுமக்கள் இயக்கங்களைத் தீவிரப்படுத்தவும், சோஷலிசத்தை நோக்கிய சமூக மாற்றத்திற்கான நமது தீவிரமான செயல்திட்டத்தை முன்னெடுக்கவும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது பேராயம் அறைகூவல் விடுத்துள்ளது.

**தமிழில்: அருண் அசோகன்**

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.